5

252

அவபஎண்: 822.

வைத்தியம் பலதிரட்டு.

பாகம் II.

20.5.91 [illegible] 13.2.92

218, 219 [illegible]

298, 299, 313, 314 [illegible]

329 [illegible]

ஒப்புநோக்கப்பெற்றது [illegible]

12.1.98

உரைபடிக்கப்பெற்றது - 15.4.04 - 29.4.04.

[illegible]

212

ரஸ்தாளி பழம் எண்ணெயில் போட்டு
எரிக்கவும். அந்தி விடிந்து இரண்டு நேரமும்
குடிக்கவும்.

மேக புழுவிற்கு

ஒரிலை தாமரை, சின்ன அம்மான் பச்சரிசி,
குடிக்கவும். ஆடுதின்னா பாளையும், வீரம்
கொட்டை பாக்களவு அரைத்து வெண்ணெயில்
வைத்து முழுங்கவும். வெளி ஏறப்படாமல்
நாள் வெந்நீரும் சோறும் சாப்பிடவும்.

கண்ணுக்கு

அத்தம், திரிசி, மனோசிலை, தேற்றான்கொட்டை,
கடல் நுரை, சங்கு, ஆமை ஓடு, ரசனம்,
காரகம், கோழிமுட்டை ஓடு ஆகத்தவறு
சாமமைக்கச் செய்து எலும்பிச்சம் பழச்சாற்றிலிட
கண் பூ, படலம் தீரும். இரத்த ரோகம், வாய்வு
தீரும்.

வெள்ளை கட்டுக்கு

சங்கம் வேர் பட்டை, தேங்காயளவு, புங்கம் [illegible]
மணி தேங்காயளவு, பசுவின் மோரில் கலக்கி
உண்ண வீக்கம், நீர் கோவைக்கு ஆம். இப்படி
மூன்று நாள் கொள்ளவும். கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்
பசுவின் மோர், துவரை, வெந்நீர் நெருஞ்சிலை

சுரை இலை கறி கூட்டவும். இரசம் கெந்தகம்
அரிதாரம், மஞ்சள் ஒட்டடை இவையெல்லாம்
கோவைச்சாறுவிட்டரைத்து கையில் கொங்கிலியமும்
மருந்துந் தடவ ஆறவிட்டு பின்பு கழுவிப்போட்டு
அசனம் பண்ணவும். தினமொரு பணவிடை அளவு
தேய்க்க வெள்ளை இட்டம் தீரும்.

அண்ட வாதத்துக்கு

விளக்கெண்ணெய் படிவ, சிறுபடைக் கறுத்தாண்
இலையும், ஒருதலை வெள்ளை பூண்டும் எண்ணெயும்
உள்ளுக்குக் கொடுக்கவும். தீரும். பத்தியம் ஒன்று
மாகாது.

முலைப்பால் உருண்டை

180.அ. கோரைக்கிழங்கு, திரிகடுகு, நாபி, வாய்விளங்கம்,
கோஷ்டம், சீரகம், திரிசியும் கிராம்பு, ஏலரிசி,
கோரோசனம், சாத்திரபேதி, அதிமதுரம், வெப்பிலை,
சருணை, மஞ்சள், சி சமன் கூட்டிக் கொண்டு
சித்திரத்திலே இரண்டுநாள் பாவனை பண்ணி சிறு
கீரைச்சாற்றில் ஒருநாள் பாவனை அரைத்து பின்பு
முலைப்பாலிலரைத்து கடலை பிரமாணம் உருண்டை
பண்ணி நிழலுலர்த்தி அனுபானம் முலைப்பாலில்
விடவும்.

சாதிலிங்கம் அப்பிரக செந்தூரம்

சாதிலிங்கம், அப்பிரக செந்தூரம், மான்கொம்பு, உத்திராக்ஷம், வில்வப்பழம், இரும்பு இதில் கூட்டி இனிமை பண்ணவும் தீரும். வியாதி திரிதோஷம், சிரட்டை, பிரட்டுதலும், தாகம், தாபசுரம், இவை தீரும்.

பிரமியத்துக்கு

முருங்கை இலை, மயில் மாணிக்கம், இரண்டும் எலுமிச்சங்காயளவு பனைவெல்லம் அதே அளவு மூன்று நாள் தின்னத் தீரும்.

மண்டை நோவுக்கு

கிரிசலாங் கண்ணி சாறு, வாய்விளங்கம், ஓமம், கோஷ்டம், சுக்கு, ஒன்றொன்று பலம் 1, பசுவின் நெய்யில் ஐந்து துளி விட மண்டை நோவலி தீரும்.

கிரந்திக்கு

சிண்ணாரம் பூண்டு, நங்கையர் சொன்னது பனையாலை 1, சேராங்கொட்டை, வெள்ளை கோரைத்தை, இடித்து கொட்டை போட்டு இரண்டையும் இடிச்ச பனைவெல்லமும் பூவும் போட்டு சாப்பிடவும் இச்சா பத்தியம். புளிக்காய் தவிர்க்கவும்.

181.அ. கிரந்தி சேட்டைக்கி

சேராங்கொட்டை, வேப்பிற்கு பிரங்கிசோலை, ஓமம், மஞ்சள், இந்த நாலும் கூட்டி இடித்து தினா மேகொள்ள தீரும். பத்தியம் கிரந்தி பண்டம் ஆகாது.

பிரமியத்துக்கு

சேங்கொட்டை, மஞ்சள், ஓமம், என்று, கொப்பரை தேங்காய், கசகசாவிதை, வெள்ளை பூண்டு, மிளகு, வெள்ளருகு, கூட்டி சாப்பிடவும். பிரமிய கட்டு தீரும். கிரந்திப்பண்டமாகாது.

பாரிச வாய்வுக்கு

உ நசி தொட்டவாம் தழையும், பட்டையும், பசுவின் பால் இவது அரைத்து அருசாநாள் குடித்து ஏழுநாள் பத்தியம். வெந்நீரும், சாதமும் சாப்பிடவும். அதின் மேல் தலை முழுகவும். இதுவும்

(கண்டங்கோரா) இதசாவரம் பலம் ௨, மிளகு பலம் ௨, பூண்டு பலம் 8, வெல்லம் பலம் ௨, நல்லெண்ணெய் சேர் 1, நெட்டி கூட்டி சாறு சேர் 1, இது கூட்டி சாப்பிடவும். இதுக்கு பத்தியம் கைப்பு, புளி தவிரவும். நாற்பது நாள் சாப்பிடவும். இதுக்கு தீரும் வியாதி பாரிச வாய்வு தீரும். வீக்க வாதமும் தீரும்.

சூலை கட்டுக்கு

பறங்கி பட்டை சேர் ௧, பிரப்பங் கிழங்கு சேர் ௧, அமுக்கராக் கிழங்கு, வெள்ளாட்டுக் கோமியத்தில் ஏழு நாள் சுத்தி யானது சேர் 1, சங்கம் குப்பி வேர் ௨௭, ஆக சேரும் சூரணம் பிடித்து வஸ்திரகாயம் பண்ணி சாப்பிட்டால் சூலைகட்டு தீரும். தன் சிறு நீரில் கொண்டால் தீராத நோயெல்லாம் தீரும். இதுக்கு பத்தியம் பத்துநாள் உப்பு, புளிப்பு, தவிர்க்கவும்.

அக்கினி குமார மாத்திரை

இரசம் பணவிடை ௧, பச்சை நாபி பணவிடை ௧, கெவுரி பாஷாணம் பணவிடை ௯ மிளகு வராகன் 3, மனோசிலை வராகன் ௧, அரிதாரம்

182.அ. பலம் 3/4, சுக்கு பலம் 1/2 திப்பிலி பலம் 1/2, கொடிவேலி வேர், ஆயிலி வேர், சகாய வேர், வெள்ளெருக்கம் வேர், வெள்ளறுகு வேர், இவையெல்லாம் ஒக்க இடித்து கொடிவேலி சாற்றினால் அரைத்து உழுந்து பிரமாணம் உருண்டை பண்ணி நிழலிலுலர்த்தி சுரத்துக்கு சுக்கு கஷாயத்தில் ஒரு உருண்டை கொடுக்கவும். சுரம் தீரும்.

உள்ள

வீரிய விருத்திக்கு

சமுத்திரா சோதி விதை, பூனைக்காலி விதை, கருவேலம் விதை, சக்கரை, நெய், இது கூட்டி கொடுக்கவும்.

உள்ள

லேபனத்துக்கு

பச்சை கற்பூரம், பாதரசம், வெங்காரம், கரு ஊமத்தை விதை, இலை சாறுவிட்டு அரைத்து குளிகை பண்ணி கொடுக்கவும்.

பெண் புருஷனை சேர்வொன்

ஆனை வணங்கி, தேவியார் செங்கழுநீர்க்கிழங்கு சிறிதாமரை, சமன் கூட்டி அரைத்து குளிகை பண்ணி கொடுக்கவும்.

லேபனத்துக்கு

கரு ஊமத்தம் விதை, அதிமதுரம், பாகல் கிழங்கு, வெங்காரம், பாதரசம், இது சமன் கூட்டி கொடுக்கவும்.

சவுக்காரம், வெள்ளை குன்றிவேர், ~~பெருந்தை~~ பொடுதலை வேர், கற்பூரம், சிறுவழுதலை வேர், பழச்சாறு, தேன் கூட்டி கொடுக்கவும்.

புருஷனும் பெண்ணும் பொருந்த

18 3 அ. இரதம் வராகன் ௩ எலிபாஷாணம் வராகன் க, மனோசிலை வராகன் க, உசிகாந்தம் வராகன் ௩ கூட்டி கொடுக்கவும்.

தகளிபாஷாணம் வராகன்

எந்த புண்ணுக்கு சூரசீலை

தேங்காய் எண்ணெய் ஜ, நல்லெண்ணெய் ஜ, கோரைமுத்து பலம் வ, கருஞ்சீரகம் பலம் வ, மயில்துத்தம் வராகன் க, பேய்கிளா வேர்,

அமிஞ்சி வேர், கொஞ்சி வேர், சங்கம் வேர்,
சங்கம் இப்பிகிளை, தேன் உமுக்கு இதுவெல்லாம்
கூட்டி காய்ச்சி சீலையால் தடவி போடவும்.

சிலந்திக்கு எண்ணெய்

சிவந்த அலரிவேர், மணத்தக்காளிவிரை, கிழுகிழுப்பை
பைகிளை, சிலந்திநாயகம், நல்லெண்ணெய்,
கூட்டி போடவும்.

கிணத்துக்கு

ஆவாரம்பூ, ஆவாரங்கொழுந்து, ஆவாரை மேல்பட்டை
ஆவாரை வேர் பட்டை, ஆவாரை பிஞ்சு, முருங்கை
~~மிளகு~~ எள்ளுக்கு வெந்தியம் பலம் ½, சீரவெங்காயம் பலம் ½
அம்மான் பச்சரிசி இதுவெல்லாம் கூட்டி குடிக்கவும்.

லேபனத்துக்கு

அபினி, பூனைகாலிவிதை, வேர்சந்தனம், தேங்
காய் பாலில் அரைத்து குடிக்கவும்.
அபினி, பூனைக்காலி, பூதபிரண்டை விதை கடுகை பாலிலரைத்து
184.அ. பூசி புணரவும்.
எருமை வெண்ணெய், நெருப்பு காய்
பாகல், காட்டுமல்லிகை பூசி புணரவும்.

காதில் சீழ்வடிதலுக்கு

நெய்சட்டிகிளை, வசம்பு, வெள்ளைப்பூண்டு, வட்ட
கிழுகிழுப்பை வேர் நாலும் விளக்கெண்ணெயில்
போட்டு சூரிய புடத்தில் வைத்து காதில் ~~விட்டு~~ தீரும்.

தோஷத்துக்கு:- சுக்கு, மிளகு, திப்பிலி, கடுகு, ரோகணி, செஞ்சந்தனம், கோரோசனை, கலைக் கொம்பு, ருத்திராக்ஷம், இலுப்பைப்பூ, நன்னாரிவேர், வலம்புரி சங்கு இந்த மருந்து சரிசமன் கொண்டு ஆடாதொடை சாறும், முலைப்பாலும் விட்டரைத்து துதுவிளங்காய் பிரமாணம் முலைப்பாலில் விடவும். தோஷம் தீரும். கைகண்டது.

கண்ட பிரயோகம் விஷத்துக்கு

எந்த பாம்பு கடிச்சாலும் நசியம் பண்ணவும். எட்டிக்காய் பருப்பு, மிளகு, செகப்பு குண்டு பருப்புகள், காக்காய் பருப்பு, இமிளம் விதை பருப்பு காசிபெருங்காயம், இமிளம் விதை, அஞ்சும் சமனாய் எடுத்து சிறுநீர் விட்டரைத்து பொட்டணம் கட்டி நசியம் பிழியவும். விஷம் தீரும். கைகண்டது.

லேபனத்துக்கு

185·அ. Repeated தேங்காய், அமினி, பூனைகாலிவேர், சந்தனம், பால்விட்டரைத்து இருக்கவும்.

கள்ளிப்பால் விரோசனம்

கள்ளிப்பால் பிசின், முக்களஞ்சு, சுக்கு, கடுக்காய், முக்களஞ்சு, களிபாக்கு, எலும்பிச்சன் பழச்சாற்றில் அரைத்து கிளறி வெயிலிலே வைத்து ஒரு தேத்தாங் கொட்டை பிரமாணம் இருக்கவும். மிக கழிந்தால்

தகா குளிச்சு போட்டு மோரும் சோறும் உண்பது.

நேர்வாள விரேசனம்

வாழாத பெண்ணுக்கு

நேர்வாளம் சுத்தி பண்ணினது பலம் ௨, இந்துப்பு பலம் ௨, மிளகு பலம் ¼ சீர்க்கு பலம் ¼ தான்றி இதையெல்லாம் கற்றாழை சாற்றிலரைத்து குன்றியளவு சுக்குநீரிலிடவும். சரம் விடும். ஆனை வணங்கி சீதேவியார் செங்கழுநீர், ஓரிலை தாமரையில் கட்டி ஊ திருக்கவும் ✓

லேபனத்துக்கு

அதிமதுரம், செங்கழுநீர், கோஷ்டம், கசகசா, குங்குமப்பூ, வெங்காரம், மராட்டிய மொக்கு, காரம், இலவங்கம், சீனை, மாசி பத்திரி, கல்துப்பிசின், நாகபாம்பு,
186. அ. இப்பிசம், கோராசாணி ஓமம், அபினி மருந்து, அரிதாரம், இதுகளிக்கட்டி ஒரு ராணையின் வாய்ந்தால் விளங்கும் தால் நாகபாம்பு விழுமாம். எங்கிருக்கும் ✓

பிள்ளை பிணிகளுக்கு

நிலக்கடம்பு வேர் பலம் ¼ செருப்படை வேர் பலம் ¾ சமுத்திர பாலை வேர் பலம் கூ மிளகு பலம் ௨, ~~வெள்ளை~~ வெள்ளுள்ளி பலம் ௩, முலைப்பாலில் குளிகை பண்ணி ஊ இருக்கவும். ✓

மூணா மினுக்கி

செவ்வாய் கிழமை நாள் பூனை வேர் காப்பு கட்டி ஆறு அன்று செவ்வாய் குளிசமாடி கட்டவும். உத்தாமணி வேர் குளிசமாடி கையில் கட்டவும். ✓

28. 6. '91

நீர்கட்டு எண்ணெய்

சிற்றாமுட்டி வேர் தோல், சிறுக்கீரை வேர், சிறுப்பூளை
வேர், கற்றாழை வேர், முடக்கொத்தான் வேர் வகைக்கு
பலம் ௫, வெங்காய ரசம் படி ௨, விளக்கெண்ணெய்
படி ௪, காய்ச்சி பதத்திலிறக்கவும். கற்பூர சிலாசத்து
வராகன் ௧, கடுகுரோகணி வராகன் ௧, சீரகம் வராகன்
௧, வெள்ளரிவிதை இடித்து சூரணம் பண்ணி சக்கரை
கூட்டி கொள்ளவும். நீர்கட்டு எரிச்சல் நின்று
நீர் இறங்கும்.

ஷயத்துக்கு, உப்பசத்திற்கு

187-அ. ஆவாரையன் பட்டை, கொன்றை பட்டை இலை,
கருதும்பை இலை பட்டை, இலுப்பை பட்டையும்
இலையும் காவளை சமூலமும் கட்டுக்கொடி சமூலமும்
பேராத்தி சமூலமும் இந்த மருந்தெல்லாம் எடுத்து பானை
யில் போட்டு ஒருநாள் ஊறவைத்து தண்ணீர் நிறைய
விட்டு மறுநாள் அடுப்பில் வைத்து அரை பானையாக
காய்ச்சி பின்னை ஒரு பானையில் வடித்து கொண்டு
காய்ச்சினால் வெல்லபாகுபோலே இருக்கும். சிறுதீயாய்
ஆறியவிட்டு கெட்டியாக வரும். வரச்சே இறக்கி
வைத்து கொண்டு இதில் சேரும் வகை திரிகடுகு
வெள்ளுள்ளி பொடி செய்து போட்டு தேன் கலந்து
கொடுக்கவும். இரண்டு கடுக்காய் மதியாவி கொள்ள
வம். உ ௪ ஆம். நெய், பால், கத்திரி, கட்டு முருங்கை
இலை ஆம்.

புளி தவிர்க்கவும். க்ஷயம், இருமல் உப்புசம் மாறும்.

தேவி சகாயம்.

வில்வாதி லேகியம்

வில்வவேர் பலம் ௫௰, சிற்றாமுட்டி வேர் பலம் ௰, கோரைக்கிழங்கு பலம் ௫, கொத்தமல்லி பலம் ௧, பேய்ப்புடல் பலம் ௧, நெல்பொரி பலம் ௨, தாணிதண்ணீர் விட்டு நானாழியாக காய்ச்சி வடித்து கொண்டு இஞ்சிச் சாறு நாழிவிட்டு வெல்லம் பலம் ௰, போட்டு இது வெல்லாம் இருநாழியாகக் காய்ச்சி இதுக்கு கற்கம்.

சிறுநாகப்பூ பலம் ௧, சீரகம் பலம் ௧, சுக்கு பலம் ௧, மிளகு பலம் ௧, சீரகம் பலம் ௧, திப்பிலி பலம் ௧, அதிமதுரம் பலம் ௧, ஏலம் பலம் ௧, இலவங்கம் பலம் ௧, கிராம்பு பலம் ௧, நெல்பொரி பலம் ௧, இது வறுத்து பொடிபண்ணி காய்ச்சி கஷாயத்தில் போட்டு விளக்கு போல எரியவிட்டு நெய்வுரி, தேன் உரிவிட்டு மெழுகு பதத்திலிறக்கி கிளறி எடுத்து வைத்துக் கொண்டு பதினஞ்சு நாள் தானிய புடம் வைத்து இரண்டு வேளை நாற்பது நாள் கொள்ளவும்.

தீரும் வியாதி வாயு, வறட்சி, கால் எரிவு, அக்கினி மாந்தம், பயித்திய வாயு தீரும்.

மேகத்துக்கு

விசிறி வேர், நீர்முள்ளி வேர், சிற்றாமுட்டி வேர், பேராமுட்டி வேர், பற்பாடகம் வேர், முசுமுசுக்கை வேர், கோரைக்கிழங்கு, கொன்றை, காவாளை வேர், மஞ்சம் புல்லு வேர், இடம்பம் வேர், காவட்டம் வேர், வெள்ளரி வேர், துத்தி வேர், பரமு, பெரிக்கை வேர், நிலப்பனை கிழங்கு, சிறுகீரை வேர், பொன்னாங்கண்ணி வேர், கசப்பு தராய் வேர், சாங்கம் வேர், வறட்முள்ளி வேர், கண்டங் கத்திரி வேர், முன்று அண்டை வேர், தண்ணிவிட்டான் கிழங்கு, முடக்கொத்தான் வேர், வெள்ளறுகு வேர், கொத்தமல்லி பலம் க, பறங்கி சக்கை சேர் க, கண்ட சக்கரை சேர் 1/4, இலவங்கம் பலம் க, ஓமம் பலம் க, [illegible] தேன், நல்லெண்ணெய், விளக்கெண்ணெய், வெங்காயம், எலும்பிச்சங்காயளவு அரைத்த விழுது சீரகம் கொட்டைப்பாக்களவும் சேர்ந்த இரண்டு விழுதும் ஒரு நாள் தயிர் கெட்டி தயிராய் உரிய தயிர் இருபது நாள் கலந்து சாப்பிடவும். சரீரம் குளுமை கொடுத்து பெருக்கும்.

விக்கலுக்கு

189. அ. கொக்காய் பொடி செய்து சக்கரை கலந்து பசுவின் நெய்யில் கலந்து சாப்பிட நிற்கும்.

சிறுபுள்ளடி வேரும், நெல்லி வேரும் இரண்டும் அரைத்து கருப்பு வெள்ளாட்டு பாலில் கொடுக்க தீரும்.

சவுபாக்கிய சுண்டி

சுக்கு பலம் ௮, மிளகு பலம் ௧, கிராம்பு பலம் ௨, வாய்விளங்கம் பலம் ௨, ஓமம் பலம் ௨, சாதிக்காய் பலம் ௨, சதகுப்பை பலம் ௨, சீரகம் பலம் ௧, கொத்தமல்லி பலம் ௨, ஏலம் பலம் ௨, சடாமஞ்சி பலம் ௨, பேய்புடல் பலம் ௨, சர்க்கரை பலம் ௰, பசுவின் பால் படி ௧, சர்க்கரை போட்டு காய்ச்சி சரக்கெல்லாம் சூரணம் செய்து வடியட்டு பாகில் போட்டு லேகியமாக கிண்டி கொட்டை பாக்களவு கொள்ளவும். இதுக்கு தீரும் வியாதி, சூதக வாய்வு, பயித்திய வாய்வு, வாந்தி, கழிச்சல், இருமல், வயிற்றுவலி, உடம்பு வலி, இருபத்து நாலு வகை பயித்தியமும் தீரும். கை கண்டது.

மகாவாத ராக்ஷதம்

முசுமுசுக்கைச் சாறு, வேலி பருத்தி சாறு, காட்டு முருங்கை வேர், பட்டை சாறு, கையாந்தகரை சாறு, சித்திரமூல வேர் பட்டை, சத்தி சாரணைக் கிழங்கு சாறு, மேனிசாறு வகைக்கு படி ௨, இந்த சாறெல்லாம் ஒன்றாய் கலந்து நாலு புது சட்டியில் வார்த்து வெயிலில் காய வைக்க சாறு சுண்டி காய விட்டு

சூரணம் பண்ணினது பலம் ௨, சித்திரமூலம் பலம் ௨, மிளகு, கெந்தகம், அக்கராத்தை, கடுக்காய் இதுவகைக்கு பலம் ௧, திப்பிலி பலம் ௧, இதுவெல்லாம் காட்டு முருங்கை, இஞ்சி சாறு, கையாந்தகரை சாறு, இந்த மூன்று சாற்றிலரைத்து சுண்டைக்காய் பிரமாணம் உருண்டை பண்ணி உலர்த்தி அநுபானம் தேனில் ஒரு மாத்திரை கொள்ள சுவாசகாசம், மந்தார காசம், மேக சன்னி, சிலேத்துமம், வாயு பாண்டு, வீக்கம், கட்டு, கரப்பான், சூலைகட்டு, சூலைகடுப்பு, சருவாங்க வாதம், யாடு சன்னி, தாள்வாய் சன்னி, நாவெழா சன்னி, தலைபாரம், முக சன்னி, சுரவ உப்புசம், மாரடைப்பு இவை யெல்லாம் மூ நாள் கொள்ள தீரும்.

ரெகணத்துக்கு

சீலை ஒட்டுதனை ஒரு இத்து கொண்டுவந்து பசும் பாலில் போட்டு இதில் சர்ப்பத்திரி வி ௧, சாதிக்காய் வி ௧, இலவங்கம் வராகன் ௧, இது கூட்டி போட்டு நன்றாய் வெந்த பிறகு எடுத்து அரைத்து ௩ நாணைக்கு தொடுக்க நிற்கும். இரத்தமும், சீதமும், கடுப்பும் நிற்கும்.

மேகத்துக்கு

பறங்கி பட்டை பாவு, வெள்ளறுகு பலம் ௨, மிளகு பாவு ௧ இது சூரணம் பண்ணி தின்னக்கவும் தீரும்.

வெள்ளை விழுகிறதுக்கு

ஓமம், பூண்டு, கருப்பட்டி, மிளகு, கருஞ்சீரகம்
கசகசா, கண்டு சக்கரை, கல்மதம், கல்நார்,
சோம்பு, பரங்கி பட்டை, வகைக்கு பலம் கு, இது
வெல்லாம் இடித்து கொள்க்க மதியாரி உருண்டை
பண்ணி நித்தம் அந்தி சந்தி ய்க நாள் சாப்பிடவும்.
பத்தியம் இச்சா பத்தியம். கை கண்டது. நிற்கும்:

அமராபதி கிஷாயம்

191. அ. சீந்தில் கொடி, சுக்கு, நற்சீரகம், ~~விளாம்பிச்சன்வேர்~~,
கொத்துமல்லி, முத்தக்காசு, அகில், நிலவேம்பு, சிற்றா
முட்டி, பேராமல்லி, திப்பிலி மென்பொடியிட்டு
கொதிக்கவும். சேத்த சுரம் தீரும்.

உள்சுரத்துக்கு

செவ்வியம், முத்தக்காசு, பேய்ப்புடல், கஞ்சாங்கோரை,
இருவேலி, சுக்கு இது கிஷாயமிட்டு கொதிக்க உள்சுரம்
தீரும்.

வாதபித்த சுரத்துக்கு

(௬) விளாம்பிச்சன் வேர், தாணிக்
திப்பிலி மூலம், சதகுப்பி,
காய், கடுக்காய், நெல்லிவிதை, கருகுரோகணி,
கிஷாயமிட்டு கொதிக்கவும். ~~உள்சுரம் தீரும்~~..

(௬) கஞ்சாங்கோரை, கொத்துமல்லி, சிற்றாமுட்டி
நிலவேம்பு, உளமத்தை வேர்

பித்த தோஷ சுரத்துக்கு

சிறுகாஞ்சொறி வேர், தூதுவளை, சிறுகுறிஞ்சா, நன்னாரி வேர், ஆடாதோடை, கண்டங்கத்திரி வேர், நில முள்ளி வேர், சுக்கு, சீரகம், கடுக்காய், தான்றிக்காய், மிளகு, திப்பிலி, தேன்விட்டு இடிக்க பித்த தோஷ சுரங்கள் தீரும்.

பயித்திய சுரத்துக்கு

சாட்டரணை வேர், சித்திர மூலம், இந்துப்பு, கடுக்காய் மிளகு, ஓமம், பேய்ப்புடல், கொத்துமல்லி, பறங்கி சக்கை, வெங்காரம், காயம், சுக்கு, வெள்ளுள்ளி சரிகூட்டி தேன் காசிடை கூட்டிக் கொடுக்க பயித்திய சுரம் தீரும்

சீத சுரத்துக்கு

கஞ்சாங் கோரை, துளசி வேர், பற்படாகம், விஷ்ணு கிரந்தி, நிலவேம்பு, பேராமுட்டி, அரத்தை, பேய்ப்புடல் சுக்கு, சிறுதேக்கு, திப்பிலி, விலாம்பிச்சன், சீந்தில் சரிகூட்டி கொள்ள தீரும்.

பித்த சுரத்துக்கு

முன்னை பாதிரி, நிலவேம்பு, ~~முசுக்கிய~~ காஞ்சிய சீந்தில், நன்னாரி நெய் சட்டி, விலாம்பிச்சன் வேர், சாறுவளை இருந் தொட்டி, சின்ன முள்ளி, சிறுதேக்கு, சிறு உமத்தை சித்தாமல்லி, செஞ்சாங் கோரை, கொத்துமல்லி, சுக்கு,

~~[illegible]~~ இலுப்பைப்பூ, வட்டத்திருப்பை, இது கஷாயம் வைக்க தீரும்.

சேத்தும சுரத்துக்கு ✓

கண்டங்கத்திரி, திருவேலி, ~~[illegible]~~ ஞாழ்ணைக்கிராந்தி, வாய்விளங்கம், துளசி, சுக்கு, கோஷ்டம், செங்கழுநீர் கிழங்கு, காஞ்சொறி, தூதுவளை, சேவியம், கஷாயம் இடவும் சுரந் தீரும்.

193. அ. உஷ்ட்டிண கட்டுக்கு.

முந்திரி சாறுவேளை வேரும், பசுவின் பாலும், பூண்டு சீத்த பருப்பும் இது அரைத்துக் கொடுக்க மலஞ்சலம் விடும்.

முருங்கை கொம்பை துண்டு துண்டாய் நறுக்கி கஷாயமிட்டு குடிக்க உஷ்ட்டிணகட்டு தீரும்.

குன்மத்துக்கு கஷாயம்

முருக்கன் வேர், காட்டாமணை வேர், நெருஞ்சி வேர் இது சமனாகக் கஷாயம் போட்டு நாலிலொன்றாய் காச்சிவடித்து வராகன் எடை சுக்கு பொடி செய்து கலந்து சாயங்காலம் கொடுக்கவும். இதினால் வாந்தி யானாலும் வயத்துவலியாகிலும் கண்டானால் சாத்திய ரோகம் கண்டில்லாவிட்டால் அசாத்திய ரோகமென்று விட்டுவிடவும்.

தேவி கஷாயம்.

194.அ ## வெட்டுபட்ட புண்ணுக்கு

கடுக்காய் ரூ, கருந்தூரை வேர், புங்கம் கொழுந்து
துநாய் கொழுந்து, தும்பைக் கொழுந்து, நொச்சி
கொழுந்து; கொளிஞ்சி கொழுந்து, அவரி
கொழுந்து, முசுட்டை கொழுந்து; பழம்பாசி,
கருவேலம் கொழுந்து; இரைவைக்கொழுந்து வெள்
வேலம் கொழுந்து, சாரணைக் கொழுந்து; வெள்ளைப்
பருத்தி கொழுந்து, நீர்ப்பூலா கொழுந்து, களாப்பூலா
கொழுந்து, வேப்பம் கொழுந்து, சங்கம் கொழுந்து,
உகாய கொழுந்து, நிலகம்பு, சீரகம், வெந்தியம்,
வேம்பாடம் பட்டை, சுக்கு, மிளகு, வெள்ளை
பூண்டு, ஆக உள்பட்ட கூட்டு மருந்து உயசு
கடைச்சரக்குகளும் ஆக உயகா. வகையும்
நல்லெண்ணெயால் கொதிப்பித்து எண்ணெய் சீலை
போட புண்ணாறும்.

கண்ட மாலைக்கு

சாரணைவேர், நாயுருவிவேர், கொல்லன் கோவை
கிழங்கு, கடுகு, மிளகு, பூண்டு இந்த மருந்து
தண்ணீர் அரைத்து அது விளாங்காய் பிரமாணம்
உருண்டை பண்ணி நல்லெண்ணெய் வார்த்து
அதிலே உருண்டை போட்டு அம்மாவாசைக்கு
முழுங்கவும். மத்த நாள் முழுங்கவும்.

இந்தப்படி மூன்று அம்மாவாசை கொள்ள கண்ட
மாலை நீங்கும்.

காது கேளாத பெருக்கு

கொடிவேலிவேர், சுக்கு, திப்பிலி, முத்தக்காசு, கோஷ்டம், உள்ளி, வசம்பு, இவைகளரைத்து எருக்கிலைப் பழுப்பு சாறும் கூட்டி எண்ணெ யுடன் காய்ச்சி செவியால் விடவும் தீரும். கேட்கும்.

மகா கோடா சூடு

195. அ.

இரசம், லிங்கம், அரிதாரம், சாதிலிங்கம், வெண் காரம், கெந்தகம், வெளி பாஷாணம், வெள்ளை பாஷாணம், கருகுறோகணி, அக்கிராகாரம், கொத்தமல்லி, திரிகடுகு, திரிபலை, ஆகவகைக்கு வராகனெடை கூட்டவும். சுத்தி பண்ணின நேர்வாளம் வராகன் 18/36 வராகனெடை கருப்பன் சாறுவிட்டரைத்து பிறகு துளசி சாறு விட்டரைத்து பிறகு கருப்பு வெள்ளாட்டு பால்விட் டரைத்து பிறகு கரிசலாங் கண்ணி சாறுவிட்டரைத்து பிறகு சுண்டைக்காய் மதியாரி உருண்டை பண்ணி மூன்று நாள் நிழலுலர்த்தி மூன்று நாள் வெயிலில் உலர்த்தி பிறகு உருண்டைக்கு தாபதீபம் கொடுத்து சுத்தமாக வைத்துக் கொள்ளவும். இதுக்கு தீரும் வியாதி

கழப கிட்டத்துக்கு ஆதண்டச் சாற்றிலரைத்து
பூசவும். உன்றுக்கு காடியால் தொக்கவும்.
நரைமாறாதிருந்தால் உத்தமதாளி சாற்றிலிடவும்.
ஒருதலை வலிக்கு வெற்றிலை சாற்றிலிடவும்.
காதில் புழுவுக்கு கீழாநெல்லிச் சாற்றிப் பிழியவும்.
காதுவலிக்கு சங்கம் பழச் சாற்றிலிடவும். நாசி
யாரூடத்துக்கு கோமியத்திலரைத்துப் பூசவும்.
உண்ணாக்கு வளர்ந்ததுக்கு ஆட்டு நெய்யால்
பூசவும். பல்லு நோவுக்கு, வளர்ந்தத்துக்கும்
ஆட்டு நெய்யால் பூசவும். பல்லு நோவுக்கு தண்
196. அ. ணீரில் கரைத்து கொப்பளிக்கவும். சிலந்தி
எண்ணை பட்டதுக்கு, கரப்பானுக்கும் வேப்பெண்
ணையிலரைத்து இடவும். சூலைக்கு முருங்
கையிலை சாற்றிலிடவும். புண்ணுக்கு கோதும்பை
சாற்றிலிடவும். சூலைக்கு வெள்ளியில் கொள்ள
வும். பக்க சூலைக்கு கார்போகரிசியால் கொள்ள
வும். கெர்ப்பசூலைக்கு பிரமதண்டிலை சாற்றிலிட
வும். வெந்நீரிலிடவும். கெர்ப்பவலிப்புருதிக்கு
பழங்கஞ்சியாலிடவும். வாதவலிப்புருதிக்கு
அசிஞ்சி சாற்றிலிடவும். பித்தவலிப்புருதிக்கு
கொன்னை பழச்சாற்றிலிடவும். கட்டுவலிப்புரு
திக்கு சிறுக்கீரை வேரிலிடவும். உதிர
கரப்பானுக்கு. பழஞ்சாற்றிலிடவும். வாத

1.7.'91

கரப்பானுக்கு கழுதைவிட்டை சாற்றிலிடவும்.
பித்த கரப்பானுக்கு நீர்ச்சோத்து தண்ணியிலிடவும்.
சேத்தும கரப்பானுக்கு பிரண்டை சாற்றிலிடவும்.
சிலந்திக்கு ஆடாதோடை சாற்றிலிடவும்.
வாதத்துக்கு சீரகம் வைத்து அரைத்துக் கொண்டு
ஒரு குளிகை இடவும். கிரிச்சுவுக்கு அத்திபட்டைச்
சாற்றிலிடவும். ஒட்டு கிரணிக்கு கீழாநெல்லி
சாற்றிலிடவும். வயத்து நோவுக்கு மிளகு வறுத்து
அந்த பொடியால் ஒரு குளிகை இடவும்.
குன்மத்துக்கு எருமை கோமியத்திலிடவும்.
குளிர் குன்மத்துக்கு முருங்கை பட்டை இடித்து
இளவெந்நீரிலிடவும். நாயுவேளை சாற்றிலிட
வும். குன்மத்துக்கு மாவிலிங்கப் பட்டையில்.
இடவும். வாய்வு குன்மத்துக்கு உமிக்கிதண்ணீர்
விட்டு இறுத்து இடவும். நொச்சில் கஷாயத்தில்
இடவும். மேல்கவிசைக்கு காரைவிதை வறுத்து
பொடிபண்ணி அதிலிடவும். கீழ் கவுசைக்கு
மஞ்சள் சாற்றிலிடவும். சுவாங்க வாதத்துக்கு
அரப்பத வாதத்துக்கு வேப்பெண்ணையால் காய்ச்சி
உள்ளுக்கு கொடுத்து மேலுக்கும் பூசவும்.
சந்து வாதத்துக்கு சாரணை சாற்றிலிடவும்.
நெம்மியாடிக்கி பெருங்காயத்திலிடவும்.

மேகுக்கு பூசவும். வெண்ணொலி கடுக்கி மேனி
சாற்றில் கொடுத்து மேகுக்கு பூசவும். நாய்
கடுக்கி தும்பை சாற்றில் பூசவும். நரி கடுக்கி
கூடக்கொத்தான் சாற்றிலரைத்தும் பூசவும். பில்லிக்கு
பிறாயந்தோலோடே அரைத்து குளிகைகிடவும்.
சூனியத்துக்கு சிறுநீரிலரைத்து கிடவும். குளிகை
யும், சிறுநீரும் சாம்பலும் மேகுக்கு துவளை
இடவும். இந்தப்படி மூன்றுபாகம் செய்து நெருப்
பிலும் காய்ச்சி விடவும். இது விரமொரி, பாவை
யெல்லாந் தெரிக்கும். தேல் குழிநீரில் கணி
கசத்தில் சிறந்த எண்ணெயு மரைத்து அந்த
நீரில் கலந்து ௩ நாளைக்கி குளிகை கட்டி
கொடுக்கவும். அந்த கிசாயம் உள்ளுக்கு கொடுக்கவும்.
இரத்த கிராணிக்கு நெய்யாலிடவும். வாதகிராணிக்கி
198.அ. பாவட்டை சாற்றிலிடவும். இரத்த பித்தத்துக்கு
செம்பருத்தி சாற்றிலிடவும். காய்ச்சலுக்கு வேப்பம்
பட்டை சாற்றிலிடவும். வெந்நீரில் பிழிந்து
௩ - குளிகைகிடவும். பித்த சுரத்துக்கு சக்கரை
வெல்லம், சீரகம் இதுவும் ௩ உண்ணை
இடவும். வாத சுரத்துக்கி பசுவின் தயிரும்,
ஆவாரம்பாலில் ௩ குளிகையாடவும். சீத சுரத்துக்கு
௫ இலை பிட்டில் ௩ குளிகையாடவும்.

அச்சிர சுரத்துக்கு தும்பை சாற்றிலிடவும். பஞ்ச சுரத்துக்கு அநுபானத்திலிடவும். பித்தத்துக்கு புளியிலையில் இடவும். மகா கோடி சுரங்களும் தீரும்!

இடையான் திண்டின பேருக்கு - மலடி லக்ஷணம்

இடையான் வெம்வெடித்தால் மலடி. நடத்தால் மலடி. முத்தின மலடி இந்நாலுவகை மலடிகள் லக்ஷணம். பேயினாலும், தெய்வத்தினாலும் புழுவினாலும், பித்தத்தினாலும் மலடியானவர்கள். பேயினால் வந்த மலடாகில் கறைபடுநாளில் நீர்விடும்போது இடப்பாகத்தில் வயறு நோம். இதுக்கு மருந்து நாய் நாக்கும், கள்ளி வேரும் அரைத்து புன்னைக்காய் மதியாரி இண்டு மணியளவு ...... கலந்து பசுவின் நெய்யுடன் குளித்த நாள்முதல் ஏழுநாள் குடிப்பது மருந்து குடிக்கிற மட்டும் பாலும் சோறும் தின்பது. இப்படி செய்தால் கெர்ப்பந் தரிக்கும். பித்தத்தினால் வந்த மலடாகில் நீர்விடும்போது கறைபடும்போது அமணியாயிருக்கும். இதுக்கு மருந்து சீந்தில் தண்டு, சித்தக்காச சமன் கூட்டி இவைஒக்க கொண்டு ..நீர். வார்த்து ஒ ஆக காய்ச்சி அமர்ந்த வாங்கின ஒ நெய் வார்த்து நிறைவே

வெந்தவாறே இறக்கி வைத்துக் கொண்டு இந்த
நெய் நாள் தோறும் ஒரு கழஞ்சி கொள்ளவும்.
இந்தப்படி மூண்று நாள் குடிக்கவும். கெற்பந் தரிக்கும்.
புருஷனால் வந்த மலடாகில் கறைபடும் போது
அரிசி கழுவின தண்ணீர் போலே விழும். நாய்
நாக்கு இலையும், கள்ளி வேரரைத்து கழஞ்சு
பிரமாணம் பசுவின் நெய்யால் கலந்து முழுகின
நாள் முதல் ஏழுநாள் கொடுப்பது. மருந்து ஆகிற
மட்டும் பாலும் சோறும் அசனம் பண்ணவும்.
கெர்ப்பந் தரிக்கும். வாய் விகாரத்தால் வந்த மலடா
கில் கறைபடும் போது நீர் விழும். கருக்கும். நீர்
பொல்லாததாக வரும். இதுக்கு மருந்து காயம்,
கள்ளி வேரும், சுத்தக்காசம், நாய்நாக்கும்
சீந்திற் தண்டும் எருக்கு கற்றாழையால் கொண்டு கற்றாழையின
சாறும் காடியும் விட்டரைத்து குடிப்பது. மருந்து
ஆகிற மட்டுக்கும் பாலும் சோறும் உண்பது.
இப்படி மூண்று நாள் குடிப்பது கெர்ப்பந் தரிக்கும்.
பிள்ளையுண்டு இல்லை யென்றறிய வகை :- பிள்ளை
உண்டு இல்லை என்றறிய கறைப்படும் போது
குன்றி போலிருக்கி மாகிலும் கரைப்பிடவை கழுவினா
போலிருந்தால் அத்தமா பிள்ளை இல்லை என்றறிவது.
~~இதுக்கு சோதினை~~ ஏழாம் சோதனை:

200அ. பூண்டு உ ஊமை புத்து மண்ணு கொண்டு வந்து நாழி டக்காக பிடித்து கீழும் மேலும் மண்ணிட்டு நடுக்குள்ளே துவரையை விட்டு அதில் சிறுநீர் பெந்சவைக்க முளைத்தால் பிள்ளை உண்டு என்று அறிவது இல்லாதாகில் பிள்ளை இல்லை என்றறியவும். முலையை நிறபிபார்த்தால் மெல்லிசாயிருந்ததானால் பாக்கு போலே திரண்டால் முலை சிவந்து இருந்தா லும், தொப்புள் உயர்ந்திருந்தாலும் பால்பழிலும் அரிசி கழுவின நீர் போல மாசுபடிலும் பிள்ளை உண்டு. முலைகறுத்து தொப்புள் அழுந்திருக்கிலும் தேன் போல விழுகிலும் பிள்ளை இல்லை என்றறியவும். நாயி நாக்கும், கள்ளிவேரும் மூலத்துடனே பொடி செய்து பாகலிலைச் சாறுவிட்டு கொடுத்திரந் திலே ஒக்கக்கூட்டி மத்தாநாள் காலமே கொள்ள பிள்ளையுண்டாம். மகாதேவருக்கு அபிஷேகம் பண்ணிவிக்கவும். நெய் விளக்கிட வைத்து பூண்டுநாள் பூசை செவிக்க பிள்ளையில்லாதார்க்கு பிள்ளை உண்டாம்.

புழுவினால் வெழிக்கிராலை

கீழ்வயறு பலகாலும் நோம். இதுக்கு மருந்து இலைக்கள்ளி வேரும், சாண்நாம் கொண்டுவந்து சிறுக நறுக்கி துவைத்தகலமாம். அது கொழித்து

நாழி அரிசியால் புட்டுசுட்டு தின்னவும்.

201.அ. அஜீர்ட்ட —— இன்மத்துக்கு

சீந்தில் கொடி சாறு படி உ, சங்கம் வேர் சாறு படி உ, முள்ளி வேர் சாறு படி உ, சார்வனை வேர் படி உ, முடக்கொத்தான் சாறு படி உ, மூக்கிரட்டை சாறு படி உ, பாப்பார முள்ளி சாறு படி உ, பண்ணை வேர் சாறு படி உ, தேத்தாம் வேர் சாறு படி உ, பருத்தி சாறு படி ௪, ஆயகை வகையும் கூட்டி புதுசட்டியில் வார்த்து எட்டிலொன்றாய் காய்ச்சி இதில் கற்கம் பனைவெல்லம் பலம் யஙு கூட போட்டு காய்ச்சி இதில் வசம்பு பலம் கற, நேர்வாளம் பலம் வசு, கஸ்தூரி மஞ்சள் பலம் கற, இந்துப்பு விராகன் கற, வெட்டியுப்பு பலம் கற, சயந்தலவணம் பலம் கற, பிடாலவணம் பலம் க, வளையலுப்பு பலம் க, சவ்வாக்ஷாரம் பலம் க, சோவிக்குப்பு பலம் க, ஓமம் பலம் க, கருஞ்சீரகம் பலம் க, கார்போகிச்சி பலம் க, சீரகம் பலம் உ, திப்பிலி பலம் கற, சுக்கு பலம் ற, சாபத்திரி பலம் ற, அக்கிராகாரம் பலம் உ, கோஷ்டம் பலம் க, ஆயகை வகையும் இடித்து வஸ்திரகாயம் பண்ணி வாளம் நெய இந்த குழம்பில் தூவி கிண்டி தேன் ஆவது பசுவின் நெய்யாவது பாகுபதமாய் இறக்கிவைத்து

கொண்டு ஒரு புன்னைக்கொட்டை தெரியாரி
கொள்ள வல சத்தியாம். எட்டுவகை குன்மம்
202. அ. இதில் உள்பட்ட வாய்வும், சத்தி குன்மம், வாத
குன்மம், பித்த குன்மம், பயித்திய குன்மம், வலி
குன்மம், தீரும். ௧ நாள் சாப்பிட்டு பார்க்கவும்.
~~திண்டாமலைக்காய் தனை~~

தீண்டா பானைக்கா யதனை
திடமாக யருந்து இருவது நாள்
பூண்டு இருந்த பெருரோகம்
பேய்போல் லவாறி ஓடிப்போம்
பூண்டா மசினி தனைக்கி
முன்னே சோறும் வெந்நீரும்
ஆண்டார் சொன்ன இம்மருந்து
அரணா ரானை கண்டீரோ //.

சுந்தவிதை புலம்

புத்து புணுகு (புணுகு) கொண்டுவந்து எண்ணெய் கலயத்தில் வைத்து கழல் பருப்பு பொடிபண்ணி தூவி வெயிலிலே வைக்க தயலம் விடும். அந்த தயலத்தில் கொந்தகம் அரை பணவிடை காயம் அரை பணவிடை கிந்துப்பு அரை பணவிடை, வளையலுப்பு அரை பணவிடை, நவச்சாரம் பணவிடை 6 இது வெல்லாம் அரைத்து வைத்து கொண்டு பாம்புகடிச்சால் மண்டை கொண்டால் ஒரு பணவிடை கலக்க மிடவும்.

எருக்கிருப்பான்: நசியம் பண்ண தீரும்.
தண்ணீரில் விழுந்து செத்த பேருக்கு அரைப்பணவிடை
வாங்கி சீனிகாரத்தில் மத்திச்சு நசியம் பண்ணவும்
தீரும். மண்ணுக்கிழ செத்த பேருக்கு உச்சியால்
நெற்றியால் கீறிதயிலம் விட தீரும்.

பிள்ளையில்லாத பேருக்கு ஒரு பணவிடை
வெற்றிலையால் தடவி ஆறு நாள் இருக்க வெட்டுப்
புழுசாம். செய்யான் கடிக்கி வெற்றிலையால் தடவி
தின்னவும்; கடித்த வாய்க்கி தம்பலம் வைத்து
கட்டவும், சந்நிவிணதயிலம் முற்றும்.

மூலத்துக்கு

263.அ.

செப்பு கிமிளி: ~~தொப்புளும் வலித்து~~
தொப்புளும் வலித்து நொந்து
துளக்கிட ரத்தம் விழுந்து
அப்பைக்கு தந்த மூலம்
அரியவே வெளியால் தின்னும்
தப்பர மேனி வற்றி
தறுகிடா உடலே தோன்றும்
இப்படி ரத்த மூலம்
எண்ணுதா னியம்ப லாமே.

சூலைக்கி

இஞ்சிச்சாறு பலம் 1, விளக்கெண்ணெய் பலம் 1,
கூட்டிக் குடிக்க சூலை நீங்கும்.

மூன்று நாளைக்கு இருவேளையும் குடிக்கவும்.

பழச்சாறு படி 3/4, இஞ்சி சாறு படி 3/4

ஓமம் பலம் 1/2 வெங்காசாரம் பலம் 1/4 இது
கூட்டி குடிக்கவும். இரை வயிறு, வலி குன்மம்,
எல்லாம் தீரும். இப்படி மூன்று நாள் குடிக்கவும்.

மேக சுக்கிலத்துக்கு எண்ணெய்

செங்கத்தரி பட்டை பலம் க, மூலம் பட்டை
பலம் க, வெள்ளெருக்கன் வேர் பட்டை பலம் க,
சங்கம் வேர் பட்டை பலம் க, கருநொச்சி
தாள் பலம் க, வெள்ளறுகு பலம் க, சிறுகிளா
பட்டை பலம் க, புங்கம் வேர் பட்டை பலம் க,
மாகறணை பட்டை பலம் க, வெப்பாலன் பட்டை
பலம் க, ஆதியம் பட்டை பலம் க, காட்டத்தி
பட்டை பலம் க, தேத்தாங்கொட்டை பலம் க,
கொட்டைகிராந்தி தாள் பலம் க, சிவலிங்கை தாள்
பலம் க, மருள்கிசும்பு தாள் பலம் க, முக்காரை
வேர் பட்டை பலம் க, முடக்கொத்தான் வேர்
பட்டை பலம் க, பரங்கி சக்கை பலம் க, கண்டு
பரங்கி பலம் க, வாய்விளங்கம் பலம் 1/2, திப்பிலி
பலம் க, பூண்டு சேர் கடு 1/4, வசம்பு பலம் 1/2,
காசுக்கட்டி பலம் 1/4 கனி பாக்கு பலம் 1/2, கருஞ்
சீரகம் பலம் 1, வெள்ளை குங்கிலியம் பலம் 2
கடுக்காய் பலம் 4, துரிசி பலம் 3/4, [illegible]

௨.7.'91

௨04.அ. இடித்து வஸ்திரகாயம் பண்ணி நல்லெண்ணெய்
படி 1/3 காய்ச்சசே தாவி கருகாமல் பதத்திலிறக்கி
நல்லவெல்லம் சேர் ¾ கூட்ட போட்டு ஒருவு
செய்யவைத்து ஒருகரண்டி இரண்டு நேரமும்
கொள்ளவும். மேல்புண், உள்புண், நுளைபுண்,
நுளைக்கட்டு. அஞ்சுவகை பிரமியம் கைய்கால்
முடங்கல் கடிவகை புண் பாதசக்கரம் கண்ட
சக்கரம் தீரும். இதுக்கு பத்தியம் கைப்பு,
புளிப்பு தவிர்க்கவும். பருப்பு தண்ணீர் எண்ணெய்
புண்ணாக்கு கூட்டவும். பின்னை ஒன்றுமாகாது.
ஆரோக்கிய வஸ்த்து: சித்திராமணக்கெண்ணெயில்
வாக்கி கொள்ள மேகம் பிறமேகம், வாய்வு, மேக
சுரப்பு, மேகக்கட்டி, மேகசக்கிலம், மேககிரந்தி,
வாய்வும், மகோதரம், பெருவயறு, அருவை, வயிற்று
புத்து, வயிற்று வலினை, கடிவகை புண், கண்ட
சக்கரம், பாதசக்கரம் சகலவியாதி புண்ணும் தீரும்.
இதுக்குப் பத்தியம். உப்பு, பருப்பு கீரை மிளகு
பொடி கூட்டவும். பிரமியம் கூட ஆறும்.
குருவே துணை யாகவும்.

௨05.அ. உஷ்ட்டண மேக வெட்டைக்கு

பறங்கி பட்டை பலம் ௨, ஏலம் சேர் வ, சுக்கு
பலம் ௨, நாட்டு மூலம் பலம் ௧, தாளிசபத்திரி
பலம் ௧,

இலவங்கம் பலம் ௧ இலவங்க பத்திரி பலம் ௧,
இலவங்க பட்டை பலம் ௧, கோஷ்டம் பலம் ½
சீரகம் பலம் ௧, ஓமம் பலம் ½ வாலுமிளகு பலம் ½
சாபத்திரி பலம் ¼ விலாம்பிச்சன் வேர் பலம் ௧,
வெட்டிவேர் பலம் ௧, கல்நார் பலம் ½ இலாமித்து
பலம் ½ கஸ்தூமதம் பலம் ௧, கற்கண்டு பலம் ½,
இராயபுரி சீக்கரை பலம் ½ நாட்டுமூலம் பலம் ½,
கஸ்தூரி மஞ்சள் பலம் ௧, பேரிச்சம் பழம் பலம் ½
சாதிக்காய் பலம் ௧, கோரோசனம் பலம் பூ, ?
கற்பூரம் வராகன் ௧, பசுவின் நெய் சேர்த்து
வெல்லம் இடித்து வஸ்திரகாயம் பண்ணி நெய்
விட்டு கிளறி உருக்கி கொள்ளவும். யக
வகை கிரந்தி, அஞ்சுவகை உஷ்ட்டணவெட்டை
யும், மேக ஆலை, மேகவெட்டை, மேகபித்தவாய்
வும் தீரும். சீத பிரவர்கமாய் சரீரம் திம்பமாய்
இருக்கும். சகல வசீகரம்.

//

எண்ணெய்

தும்பை வேர், துளசி வேர், பண்ணை வேர், செம்
முள்ளி இலை சாறு படி ௧, அமுக்கரா வேர், விளக்
கெண்ணெய் படி ½, வெப்பாலன் பட்டை,
துரிஞ்சி பட்டை, நிலை ஆவாரை, உசில், தகரை,
வேர், அரிஞ்சில் வேர் பட்டை, சீயாவேர் பட்டை,
மிளகரணை வேர் பட்டை, விளாத்தி பட்டை,

ஆதண்டன் வேர் பட்டை, அகத்தி பட்டை,
206. அ. வேப்பம் பட்டை, பேய் சீந்தி பட்டை, சிங்கி
பட்டை, அப்பை கிழங்கு, புளியாரணை கிழங்கு,
நீலி சமூலம், பழுபாகல் கிழங்கு, சங்கம் வேர்,
காட்டுகத்தி பட்டை, ஆகாச கெருடன் கிழங்கு,
துராய் வேர், கிரம்பிலி வேர், துடப்பம் வேர்,
கார்போகரிசி, கருஞ்சீரகம், மஞ்சள், மரமஞ்சள்,
வாய்விளாங்கம், மிளகு, கோரோசனம், கஸ்தூ
ரி பணவிடை உ, அக்கலகாரம், பெருங்
கிழங்கு, தூதுவளை, முக்காவளை, அதுவளை,
வெங்காய சாறு படி க, துராய் வேர், செங்கத்தாரி
பட்டை இதுவெல்லாம் இடித்து எண்ணெய்ப்
பண்ணவும். பிள்ளைகளுக்குச் செயலிருந்து ஒன்றை
அட்டிடை கட்டவும்.

பருதாமரைக்கு எண்ணெய்

சகல மார்ந்தையும் சகல குண்டு அச்சிரமும்
தீரும். அன்னாக்கி வெந்நீரும் சோறும் சாப்பிட
வும். இலவங்கம், சாதிக்காய், புகட்டவும்.
சக்கரை கூட்டி எண்ணெய் பண்ணவும்.

பருதாமரைக்கு கிரணம்

நாக்கிலே முள்ளு கீறினா போலே வெடிப்பாயிருக்
கும். நாவு நொவெடுக்கும். சாறு பட்டால்
எரியும்!

சந்நியினால் தொண்டை நோவெடுக்கும். அல்லது சொருகினாப் போலே இருக்கும். நாவு தடித்திருக்கும். நாவு குழைந்து பேசினால் குளறல் இருக்கும் வெகு உபத்திரம் பண்ணும். மிஞ்சினால் எவராலையும் தீராது. இதுக்கு மருந்து

நாவிலே தேய்ப்பது சீனை ஒட்டியும், செம்பு ~~நெருஞ்சி~~ நெருஞ்சியும் செருப்படை சாறும் கூட்டி இதில் சாதிலிங்கம் வராகன் ௨, பலரசகுறைக்கி அதுவும் கூட்ட கூட்டி கல்நார் கஸ்தூரி பழம் பலம் 1½ கூட்டி சர்க்கரை அனுபானம் பண்ணி நாக்கில் தேய்க்கவும்.

~~மகா சந்தினாகி தயிலம்~~

207.அ. உள்ளுக்கு கிராயபுரி சர்க்கரை பலம் ௨, கற்கண்டு பலம் ௫, சமுத்திரா பழம் பலம் ௧, சீரகம் பலம் ௧, மிளகு பலம் ௧, ஏலரிசி பலம் ௧, காட்டைமைம் பால் பலம் ௧, சாதிக்காய் பலம் ௫, திராக்ஷை ~~பலம்~~ பழம், ௧ ஆக வகையும் சூரணம் பண்ணி உள்ளுக்கு சாப்பிடவும். பத்தியம் பாலும் சோறும் கொள்ளவும். ¾ மண்டலம் கொள்ளவும் தீரும். இதுக்கு மிஞ்சினால் எவராலையும் தீராது.

மகா சந்தனாதி தயிலம்

உ07. அ. கையாந்தகரை சாறு உ, முசுமுசுக்கை சாறு
உ, பழம்பாசி சாறு உ, பொன்னாங்கண்ணி சாறு உ,
செப்பு நெரிஞ்சி சாறு உ, சிறுகீரை சாறு உ,
ஆலம்விழுது சாறு உ, நரிப்பயற்றின் சாறு உ,
ஆறைலக்கிரி சாறு உ, எலும்பிச்சன் சாறு உ,
சீந்தில் கொடி சாறு உ, ஆக சாற்றுவகை யக க்கு
அம், கிஷாயவகை நல்ல சந்தனப் பொடி சேர் உ½
வேர் சேர் உ½, விலாமிச்சன் வேர் சேர் உ½
அதிமதுரம் சேர் உ½ கிழாநெல்லி வேர் சேர்
உ½ நாணல் வேர் சேர் உ½ நன்னாரி வேர்
சேர் உ½ மாதுளம்பழம் பலம் உ½ ஆக எடு
வகையும் கூட்டி பானையிலிட்டு நீர்விட்டு
நாலிலொன்றாய் காய்ச்சி கொள்ளவும். இந்தக்
உ08. அ. கிஷாயத்தில் முன் சொன்ன சாறு வகையும் இதில்
பசுவின் பால், வெள்ளறுகிலை சாறும், இளநீரும்,
[illegible] எண்ணெயும் கூட்டி இதில் கடைச்
சரக்கு செண்பக மொக்கு பலம் 1½ தாமரைக்கிழங்கு,
[illegible]ச்சட்டி, அத்திப்பூ, தாமரைப்பூ, நெய்தல் கிழங்கு,
பூ, தண்டு, தாமரைப்பூ தண்டு, தாழங்குருத்து,
நாணல் வேர், ஓமம் பலம் லவங்கப் பட்டை,
குந்திரி பழம், இலவங்கம், சாதிக்காய், கோரோசனை,

பற்படாகம், குங்குமப்பூ, வராகன் ௨, கஸ்தூரி
பலம் ௧, இதுவெல்லாம் வஸ்திரகாயம் பண்ணி
ஏகத்துக்கு கூட்டி ஆரிய புடம் வைத்து ஒரு மரத்து
விறகாய் வைத்து எரியவிட்டு ஆறியபதமானவாறே
எடுத்து பொடித்துக் கொண்டு கோரோசனையும்
வராகன் 1½ குங்குமப்பூ வராகன் ௧, இரண்டும்
குடிச்சகட்டி கூடப்போட்டு வெய்க்கில் பதமான
வாறே எடுத்து பொடித்துக் கொண்டு ஒண்ணைவிட்டு
ஒருநாள் தலைக்கிட்டு மூழ்க அக்கினி நேத்திரம்,
உஷ்ண காய்ச்சல், உள்ளாங்கால், உள்ளாங்கை எரிவு,
பயித்தியம், உஷ்டண மேகம், மேகவெட்டை,
மேக பித்தம், சீதவாய்வு, சகலவாய்வுந் தீரும்.

ரசம் போக்கு மருந்து

கருவேலம் பட்டையைக் கொண்டு வந்து
பஞ்சனை நசுக்கி நாலுபடி தண்ணீர் வார்த்து வைத்து
அரைபடியாக காய்ச்சி ஒரு செப்பிலே வார்த்து
அதுக்குள்ளே புருத்தை விட்டு வைத்து அந்தி
நேரம் கழுவி போடவும். மூன்று நாள் இப்படி
செய்யவும். மாறியும்.

துளசி புழுத்துக்கு

209. அ. விடத்தேரிலையை பறித்து வந்து விழுதோடே
அரைத்து நல்லெண்ணெயில் கொதிக்க வைத்து
காதிலே விட்டு வாயாலே பச்சரிசி தின்ன-
கொடுக்கவும் விழும்.

எருக்கம் பட்டை, சங்கம் பட்டை, முசுமுசுக்கை பட்டை, நிலகடம்பு இலை கசக்கி, சாறு பிழியவும்? நாயி செத்து விழும் - அந்த ஈயை எடுத்து ஆவாரை இலையை கசக்கி அதில் வைத்து முடிந்து நேர்வந்த பிறபாடு ஓடிப்போம். —

மகோதரத்துக்கு

வேர்க்கும், இளிரும் விசித்திருக்கும் —
போலே தண்ணீர் விடுமென்றும் —
ஆருக்கும் தெரியா துன்றுடலை —
அடைந்தே இவைவர மறம்போலே —
சேர்க்கும் தொப்புள் கீழ்வயத்தில் —
இடமா வீங்கும் கத்துமிக்காய் —
ற்றவெட்ட இன்ன மருந்துமி
டைந்து மடந்து கொல்லுமதே. —

வசிகரத்துக்கு

சாலவே காஞ்சி கையும் —
சடக்கென வீங்கும் போத —
காரிய விழிகள் சோறும் —
குடுகிடும் புறோணி தாகம் —
தாதுடன் காடு இன்ற —
தனஞ்செயன் கேழு தாகம் —
பாரிடும் கோத சித்து —
பணம் பிது பரிக பாரிர். —

3. கொட்டை , அகில், கோரோசனம்
- ~~[illegible]~~ குங்குமம்,
இவற்றைச் சேர்த்தரைத்துத் திலகமாக
இட்டு நடந்து செல்வீராயின்
வன்னியர்கள் வந்து வணங்குவர்.
அவ்வாறு செய்யமாட்டீராயின் என் சாத்திரம்
பொய்யாகும் நெருப்பில் ~~[illegible]~~ என் புத்தகம் ~~[illegible]~~,
எரிந்து விடும். உபயோகமற்றுப்
போய்விடும்

கொட்டை தேசு மகிற்தேசும் —
கோரோ சனையுங் குங்குமமும் —
மட்டை எரித்தன் கொவேரும் —
மானா கத்தின் விதைதொன்றும் —
கிட்டாங் கரைத்து திலதமிட —
வெதிரே நடந்து செயிவிராய் —
மட்டு படாத வன்னியர்கள —
வந்து வணங்கா ரவமாகில் —
தெட்டுப் பருமைன் சாத்திரமும் —
தணலிற் பருமைன் பொத்தகமே.//

௨10. ௨. **மணி திலதம்**

சிங்கம் பழம் மூட்டை கட்டி அக்கினியால்
தைலம் வாங்கி ரசம் விட ரசம் கட்டும். ரசம் ௧,
சாதிக்காய் ௩, மனோசிலை ௫, அங்கோலதயிலம்
சூரிய புடத்தில் கரிசலாங்கண்ணி சாற்றில் பிசைந்து
தைலம் வாங்கி கெந்தகம் ௨, தாம்பரம் பலம் ௧,
? ௧அரை உளந்தி தகடு அடித்து தெட்டில் பூசி இலைக்
குள் புடம் இடவும். சுருபமாம்.

புலிவாய் கட்டு

மண்ணுளி பாம்பை அடித்துச் சட்டால் கல்லு
விழும். அந்தக் கல்லை எடுத்து முன்னே போற
மாட்டின் கழுத்தின் மணியாலேயும், பிறகே
போற —

மாட்டின் கழுத்து மணியாலேயும் கட்டினால்
புலி தீண்டாது.

நீர்க்கட்டுக்கு

படிகம் வைத்து கல்சுப்பு போட்டு வறுத்து கொட்டி
போட்டு அதின் பிறகு சட்டியாலே ஒருசேர கொதி,
கிராம்பு புதுகாரமாய் நெருப்பு விழ கருகவறுத்து
கொட்டி நெருப்பான பிறகு அருகன் வேர் ஒருபிடி
போட்டு கூட தணலான பிறகு ஒருபடி பசுவின்
மோர் வார்த்து காய்விட்டு அதிலே கருஞ்சீரகம்
பலம் 2, பிரண்டை வேர் பலம் 2, காட்டுசீரகம்
பலம் 2, சிற்றாமுட்டி பலம் 2, வெள்ளை சாரணை
வேர் பலம் 2, நொச்சில்வேர் பலம் 2, கையாந்
தகரை சமூலம் பலம் 2, நில் வேம்பு பலம் 2,
புங்கம் வேர் பலம் 2, சுக்கு பலம் 2, மிளகு பலம் 2,
ஓமம் பலம் 2, ஆனைதிப்பிலி பலம் 2, வெள்ளை
வெங்காயம் பலம் 2, வசம்பு பலம் 2, நெல்லிபருப்பு
211. அ. பலம் 2, காயம் பலம் 2, இந்துப்பு பலம் 2, தான்றிக்
காய் பலம் 2, சீரகம் பலம் 2, இதுவெல்லாம்
கூட்டி இடிச்சு சூரணம் பண்ணி வைத்துக்
கொண்டு மிஞ்சி பசுவின் மோரிலே கூட்டின
கஷாயத்துடனே ஒக்க கலந்து ஒருபுது குடுவை
யிலே பதனமாய் வைத்துக் கொண்டு இந்த ^
சூரணம் பதினைஞ்சு நாள் கொள்ள வாதகுன்மம், ^

சுவடி எண்: 822.

வைத்தியம் பல திரட்டு - பாகம் II

மொத்த பக்கங்கள்: 212 - 424.

சூலை உரு பாண்டுவும், உடம்பு வீக்கம்,
இருமல், சுவாசம், குளிர்சுரம், அனாதிசுரம்,
அசீரண பித்தம், பிச்சு தீண்டுதல் இதுவெல்லாம்
போம். பத்தியம் உப்பு, புளிப்பு தவிர்க்கவும்.
பசுவின் பால், மோர் கொடுக்கவும். தேவை,
மிளகுநீர் கொடுக்கவும். வெந்நீர் சாப்பிடவும்.

கிரந்திக்கு சஞ்சீவி தைலம்

கண்டங் கத்திரி வேர் பலம் ௪, சிறுவழுதுணை
வேர் பலம் ௪, உசிதகரை வேர் பலம் ௪, சுண்டி
வேர் பலம் ௪, முசுமுசுக்கை வேர் பலம் ௪,
பாவட்டை வேர் பலம் ௪, செம்முள்ளி வேர்
பலம் ௪, நிலவேம்பு பலம் ௪, சிவனார் வேம்பு
பலம் ௪, மலைவேம்பு பலம் ௪, நல்ல வேம்பு வேர்
பலம் ௪, ஆதண்டம் வேர் பலம் ௪, [illegible] வேர்
பலம் ௪, சிற்றாமணக்கு வேர் பலம் ௪, காட்டா
மணக்கு வேர் பலம் ௪, கன்னியாகுமரி வேர்
பலம் உ௰௫, அறுகன் வேர் பலம் ௰, சிறுகாஞ்
சொறி வேர் பலம் ௪, பெருங்காஞ்சொறி வேர்
பலம் ௪, பேய்த்தி வேர் பலம் ௪, தாழை வேர்
பலம் ௪, அத்தி வேர் பலம் ௪, வெண்பாலை வேர்
௨௧௨. அ. பலம் ௫, அசுக்கிரா கிழங்கு ௨௫, நன்னாரி வேர்
பலம் ௫, வெப்பாலை வேர் பலம் ௫, அமுக்குரா
வேர் கிழங்கு பலம் ௨௫, நன்னாரி வேர் பலம்
௫, செங்கத்தாரி வேர் பலம் ௰௫, சித்திரமூலம்
வேர் பலம் ௰௫

வெள்ளறுகு பலம் உய, புங்கம் வேர் பலம் உய, மிளகரணை வேர் பலம் ய, சன்னி, காரை வேர் பலம் ய, வெள்ளெருக்கன் வேர் பலம் ய, சிந்தில் வேர் பலம் ய, சங்கன் வேர் பலம் ய, மருக்காரை வேர் பலம் ய, கருநொச்சி பலம் ய, கொட்டைக் கிரந்தி பலம் ய, சிறுகீழா வேர் பலம் ய, பெருங்கீழா வேர் பலம் யரு, தகரை வேர் பலம் ய, ஆதண்டன் வேர் பலம் ய, முதியார் கூந்தல் பலம் ரு, நிலப்பனங்கிழங்கு பலம் ய, நுணாவேர் பலம் ரு, களர்சிங்கம் பலம் ய, சாணாகிழங்கு பலம் யரு, பொன்னாவரை வேர் பலம் ய, கொன்னை வேர் பலம் ய, நாகல் வேர் பலம் ய, நிலை ஆவாரை வேர் பலம் உயரு, மருதம் வேர் பலம் உய, முக்காவளை பலம் உய, சங்கம் குப்பா வேர் பலம் உய, கிரட்டை வேர் பலம் ய, காட்டு கத்தி வேர் பலம் உய, வாகை வேர் பலம் ய, சிறுவாகை வேர் பலம் உய, குமிழம் வேர் பலம் உய, பற்பாடகம் பலம் உய, விளாம்பிச்சன் வேர் பலம் உய, மருளா வேர் பலம் ய, பூவரசன் வேர் பலம் [illegible]உய, தேற்றான் வேர் பலம் உய, குமிளான் வேர் பலம் ய, முன்னை வேர் பலம் உய, சித்திழா வேர் பலம் ய, பெருளா வேர் பலம் ய, [illegible] வேர் பலம் ரு, முடக்கொற்றான் வேர் பலம் ய,

Rep

அப்பக் கோவை கிழங்கு பலம் ய, எட்டிவேர்
பலம் ய, ஒட்டும் வேர் பலம் ரு, நிலகடம்பு
வேர் பலம் ய, சிற்றாமுட்டி வேர் ய, பேராமுட்டி
வேர் பலம் ய, அழிஞ்சில் வேர் பலம் உய, சத்தி
213 சாரணை கிழங்கு பலம் ய, பெருவகுதிலை வேர்
தூ. அ. பலம் ய, சந்தனக் கட்டை பலம் ருய, சித்திச்சம்
வேர் பலம் உய, பாதிரி வேர் பலம் உய, மூங்கில்
வேர் பட்டை பலம் உய, ஆறை வேர் பலம் உய,
புலிதொடக்கி வேர் பலம் உய, சகாதேவி வேர்
பலம் ய, அகத்தி வேர் பலம் ய, ஆடாதோடை
வேர் பலம் உய, நெல்லி வேர் பலம் ய, அல்லி கிழங்கு
பலம் ரு, தாமரைக் கிழங்கு பலம் ரு, நெய்தல்
கிழங்கு பலம் ரு, கொட்டிக் கிழங்கு பலம் ரு,
சின்னி கிழங்கு பலம் ரு, கொய்யா வேர் பலம் ய,
முருவலி பலம் ய, திரணி வேர் பலம் ய, கோடக
சாலை, சூண்டு பலம் ய, ஆகாச கெருடன் கிழங்கு
பலம் உய, பூமிசக்கரை கிழங்கு பலம் ருய,
கிளைபனை கிழங்கு பலம் ய, பிரமிதண்டு
பலம் ய, குப்பைமேனி வேர் பலம் ய, நாணல் வேர்
பலம் ய, பசளி பலம் ய, மணத்தக்காளி வேர்

பலம் ய, வாத நாராயணன் வேர் பலம் ய, வெள்ளை
சாரணை வேர் பலம் ய, கோவைத்தண்டு பலம் ய,
துளசி முருங்கை பலம் உய, ஈஸ்வர மூலிகை
பலம் உய, பொடுதலை பலம் ய, விளாம்பிச்சன்
வேர் பலம் ய, நாணல் வேர் பலம் ய, செங்கொடுவேலி
வேர் பலம் ய, நெத்து பாலை வேர் பலம் ய, நெல்லிக்காய்
பலம் ய, பேராநெல்லி பலம் ய, ஆகவகை ௱உ௰ம் (120)
இத்தரிச்சு இடிச்சு நாலு சாலுக்க போட்டு சுத்
தண்ணீர் விட்டு அஷ்டபாகமாய் காய்ச்சி
வடித்துக் கொண்டு மெருகன் கிழங்கு சாறு பலம்,
இளநீர் பலம், பசுவின் பால் பலம், வெங்காய சாறு
பலம், எலும்பிச்சன் பழச்சாறு பலம், தேங்காய்
பால் (இவ) 3/4 சரக்கு திரவியம், கொஷ்டம் பலம் ௩,
214. அ. அக்கரகாரம் பலம் ௩, நாகேசரம் பலம் ௪,
வாய்விளங்கம் பலம் ௪, கார்போகரிசி பலம் ௪,
கருஞ்சீரகம் பலம் ௪, மிளகு பலம் ௪, ஏலவங்கம்
பலம் ௩, சாதிக்காய் பலம் ௩, வெங்காரம்
பலம் ௩, வளையலுப்பு பலம் ௪, கஸ்தூரிமஞ்சள்
பலம் ௪, சடாமஞ்சி பலம் ௪, சாபத்திரி பலம் ௪,
இலவங்கபத்திரி பலம் ௪, தாளிச பத்திரி பலம் ௩,
கற்பூரம் பலம் உ, கற்பூரசிலாசத்து பலம் ௩,

பறங்கி பட்டை பலம் ௫௰, திப்பிலி பலம் ௫,
சுக்கு பலம் ௫, நாட்டுமூலம் பலம் ௫, இந்துப்பு
பலம் ௫, நேர்வாளம் இளநீரில், பாலில், சாணிப்
பாலில் வேவிச்சது (வேகவைத்தது) பலம் ௩,
அத்திப்பூ பலம் ௩, காசுகட்டி பலம் ௫, களிப்
பாக்கு பலம் ௫, வெள்ளை குங்கிலியம் பலம் ௪,
பச்சை வெட்டு பலம் ௫, துருசு பலம் ௪, புளி
யாரையில் சத்தியானது பலம் ௩, கடுக்காய்
பலம் ௫, கொத்தமரி பலம் ௫, சீரகம் பலம் ௫,
சோம்பு பலம் ௫, கோரைக்கிழங்கு பலம் ௫,
ரேணுகம் பலம் ௩, கோரோசனை பலம் ௩,
பால்ந்தி பேரளம் பலம் ௨, நாட்டு சர்க்கரை பலம் ௫,
இராயபுரி சர்க்கரை பலம் ௫, கற்கண்டு பலம் ௫,
திராட்சை பலம் ௪, பேரிச்சின் பழம் பலம் ௰, கலிதா
பலம் ௩, கல்மதம் பலம் ௩, புல்மதம் பலம் ௩,
ஆனைமதம் பலம் ௩, வில்மினாகு பலம் ௩,
கருகோரோகணி பலம் ௫, தும்பராஷ்டகம்
பலம் ௪, அசமதாகம் பலம் ௧, காயம் பலம் ௪,
கண்டு பாரங்கி பலம் ௪, கற்கடக சிங்கி பலம் ௫,
தான்றிக்காய் பலம் ௫, நெல்லிக்காய் பலம் ௫,
செண்பக மொக்கு பலம் ௫, புனுகு பலம் ௫,
கஸ்தூரி வராகன் ௩, குங்குமப்பூ வராகன் ௨௰,

மூங்கிலரிசி பலம் ௪, விழலரிசி பலம் ௪,
நெருஞ்சிவிதை பலம் ௪, அத்திவிதை பலம் ௩,
215.அ ஆலம்விதை பலம் ௩, அரசன்விதை பலம் ௩,
கறுப்பு நெல்லரிசி பலம் ௪, கொன்றை விதை
பலம் ௪, பாதாள வயிரி பலம் ௩, மஞ்சிட்டி
பலம் ௨௰, நிரடிமுத்து பலம் ௫, தாதுவளை பழம்
பலம் ௰, விளாம்பழம் பலம் ௰, கொம்மட்டி மாதுளம்
பழஞ்சாறு பலம் ௰, நிலாகிழங்கு பலம் ௰, மகிழ்ப்பூ
பலம் ௰, அரக்கு பலம் ௫௰, நொச்சிப்பூ பலம் ௰,
பாதிரிப்பூ பலம் ௰, நாழம்பூ பலம் ௨௰, ஆதுவகை
47ருடம் முன்சொன்ன சாற்று வகையுடனே ஒக்க
ஒத்தி சரக்கை நிறுத்தி வைச்சு மற்ற சரக்கில்
லாம் எடுத்து ௩ள தண்ணீரில் விட்டு காய்ச்சி
முன்சொன்ன சாற்றுவகையுடனே கலந்து உறவு
செய்யவிட்டு க—றென்று எண்ணெய் படி ௨௰
விட்டு காய்ச்சி நிறுத்த கடைசரக்கு அரைத்து
போட்டுத் தாவி பூண்டு சாறும்விட்டு காய்ச்சி
பரிமள வாசமான பதமறிந்து வடித்து கொண்டு
விநாயக பூசை செய்து ஒருகரண்டி பிரமாணம்
௰ நாள் கொள்ளவும். இதுக்கு இன்மம்
பதினோருவகை கிரந்தியும் பறந்தோடி போம்.

ஆசனிகள் பாய்ச்சல், கிரணமும் கலமது விற-
வழியே சலம்வரும், ஆசன கண்டமாலை,
ஆசன பவுத்திரம், ஆசன கிரிச்சம், இருமல்,
சலதாரி கிரணமாஞ் தீரும். உய நாள் கொள்ள.
மேகசூலை, மேகவாதம், மேகசக்கலம், மேக-
உஷ்ட்டணம், மேக பிரமேயம், இரத்த பிரமேயம்,
சீபிரமேயம், பைய பிரமேயம், இரத்த கிரந்தி,
உன்மை கிரந்தி, அபாசன கிரந்தி, வங்கு கிரந்தி,
சூலைகிரந்தி, மேகத்தினால் கைகால் பிடிப்பு,
மேகவாத பிடிப்பு கரங்கைபிடிப்பு, ரசம் கரங்
கைபுண், நீராதே கிரந்தி வாய்வு, ரசகரங்கை
பிடிப்பு, நாள்பட்டது வயறுவலி, வீரிய விருத்தி,
உண்டாம். பத்தியமில்லை. அது அரியவும்.
பத்தியமாய் வயறும் மன்மத வசந்தனாவன்-
கண்டமாலை தீரும். இய நாள் புகை, புகைப்பு
கவுச்ச வற்றிச்ச கொண்டால் கண்டமாலை
தனைபுத்து, பிளவை மூக கவிசை ரூ, கழலை
மேகோதிரம் ரூ, பெருவயறு ரூ,
ரூ ~~பேகை~~
அகுவை உயக, பாண்டுவும், கிரந்தி வாய்வும்
வெண்டு கைகால் பிடிப்பும் பறந்தோடி போம். வெண்டு
கள் கொள்ள நாது வேகந் தீரும். வெட்டைப்
புழுவிகும். புத்திர சம்பத்துண்டாம். வேதகள்
கொள்ளவும்.

நெடுநாள் சென்ற மேடிகள் கொள்ள உடனே சம்பத்துண்டு. சன்னி யரூந் தீரும். பழைய சுரம் பாற்தோடிப்போம். புருஷ வியாதி தீர்ந்து புத்திர சம்பத்துண்டு. இந்த சிரத்திலே மேகத்தினால் கண்ட வியாதியெல்லாம் தீரும். இந்த சுகமான சஞ்சீவி எண்ணெய் காரகின்றீ மகாமுனி சொன்னது. ஆயித ஆரோக்கிய நமஸ்து.

217. அ. மேகத்தினால் கண்ட எதிர்கவிசை இடல் வாதத்துக்கு

சிற்றாமணக்கெண்ணெய் வேர் அசுர்த குமரி இரசாயனம்:-

அமுக்கரா சூரணம் பலம் உய, மெருகன் கிழங்கு சூரணம் பலம்யரு சத்தியான சிவதை வேர் சூரணம் பலம் சய, செங்கத்தாரி சூரணம் பலம் ரு, நிலவேர் பலம் ரு, சாங்கன் வேர் சூரணம் பலம் ரு, சித்திரமூல சூரணம் பலம் யரு, மிளகாரணை சூரணம் பலம் யரு, முடக்கொத்தான் தாள் பலம்ரு, கரிசலாங் கண்ணி தாள் பலம் ரு, ஆக வகையும் இடிச்சு சூரணம் பண்ணி இதில் கற்கம் —

திரிகடுகு பலம் ௨, சுரைவிதை பலம் ௧, சீரகம் பலம் ௧, தனியா பலம் ௧, நாகேசரம் பலம் ௧, ஓமம் பலம் ௧, சடாமஞ்சி பலம் ௧, வாய்விளங்கம் பலம் ௧, கடுக்காய் பலம் ௧, தான்றிக்காய் பலம் ௧, செவ்வியம் பலம் ௧, கோரோசாணி பலம் ௧, சன்னசாளை கருகு பலம் ௧, அன்னபேதி பலம் ௧, ஆகவகை 15 ௨ம் வஸ்திரகாயம் பண்ணி முன்சூரணமும் இதுவும் கூட்டி உறவு செய்ய வைத்து இம்மதியாரி தேன் வாங்கி வைத்துக் கொண்டு காலமே ௨ விரல் கொண்டு சூரணத்தில் தேன்விட்டு கிளறிக் கொள்ளவும். மாலையில் கால்வாசி கொள்ளவும். இதுக்கு தீரும் வியாதி மேகம், [illegible] பித்த வாதம், கவிசை, வெப்புப்பாவை, குன்ம வாதம், திமிர்வாதம், பழவாறணை, பாண்டு, காமாலை, பெருவயறு, மகோதிரம், பெருவயறு, மேகபிரந்தி, உஷ்ட்டிண மேகவாதம் தீரும். பூசணிக்காய் புண்ணாக்கு, சுரைகாய், அகத்திக்கீரை, உளுந்து, ஆகாது. ஒரு மண்டலம் கொள்ள, ½ மண்டலம் கொள்ளவும் வியாதி தீரும். ஆரோக்கிய நமஸ்து.

மேகத்துக்கு எண்ணெய்

௨18.அ. சித்தாமணக்கு கொட்டை ஊறு பசுவின் மோரில்
ஊறவைத்து பிறகு பசுவின் பாலிலே வேகவைத்து
காயவைத்து இடிச்ச பலம் ௪, இளநீரில் கரைத்து
கொதிக்கவைத்து எண்ணெய் வடிக்கிற சமயத்தில்
மூணு வருஷம் இரண்டு வருஷத்து கம்பு சாதமாக்கி
அதிலே தண்ணீர் விட்டுவைத்திருந்து அந்த தண்ணீர்
வார்த்து துழாவி எண்ணெய் வடித்துக் கொண்டு
அதின் பிறகு கற்றாழஞ் சாறு ௨, சித்திரமூல கிஷாயம்,
செங்கத்தாரி பட்டை ௨ சேர் ௨ அரை கிஷாயம், ௨,
சங்கம் வேர் சாறு ௪, ஊமத்தை கிஷாயம்
தாழைவேர் சாறு செம்முள்ளி சாறு அருநெல்லிக்காய்
சாறு, நெருஞ்சி சாறு ௨, வெப்பாலன் பட்டை சாறு
ஒதியம் பட்டை சாறு பிரமபூண்டு சாறு, வல்லாரை
இலைச் சாறு, கருநொச்சி இலைச் சாறு, கொட்டைக்
கிரந்திச் சாறு, ஆக சாறுகள் ௰௫-ம் தாழியில் விட்டு
எண்ணெயும் கூட விட்டு திருகோமியாய்
கூட விட்டு சூரியபுடம் வைத்து சாமத்துக்கு
பிறகு எடுத்து கிழசத்தி வைத்து இதில் கற்க
திரவியம் திரிகடுகு, ~~திரிபலை~~ தன் பலம், கருஞ்சீரகம்,

வெட்டிவேர், விலாம்பிச்சன் வேர், பூலாங்கிழங்கு,
சந்தன பொடி, சடாமஞ்சி, பலம் ௪,
கோரைக்கிழங்கு, அல்லிப்பூ, தாமரைப்பூ, வெள்ளைப்பூ
௨௧௯. அ. செண்பக மொக்கு, பாதிரிப்பூ, நாகேசரம்,
வாலுளுவையரிசி, கார்போக அரிசி, தனியா,
ஏலம், இலவங்கம், வால்மிளகு, ஆக உயா
வகைக்கு பலம் க, கோரோசனம் வராகன் ௨,
பறங்கிப்பட்டை பலம் ௨, கொல்மூக்கு சக்கை
பலம் க௨, ஆடையொட்டிவேர் பட்டை பலம் 1½
சிறுகிலவங்கப்பட்டை பலம் 1½, சாதிக்காய் பலம் 1½
கஸ்தூரி மஞ்சள் பலம் 1½, சிறுமாவலி வேர் பலம் 1½,
ஆக ௩௰க வகையும் இடித்து கூட்டிவிட்டு
பேரிச்சம்பழம் பலம் க, இராயபுரி சர்க்கரை
பலம் க, பசு அரைத்து பலம் க. இருப்பு கூட்டி
விட்டு முதல்நாள் விநாயக பூசை பண்ணி அடுப்பிலே
வைத்துக்கொண்டு முதல்நாள் ஒரு கொதி, இரண்டாம்
நாள் இரண்டு கொதி. மூன்றாம் நாள் நன்றாக கொதித்து
வெந்த பிறகு நல்ல பதத்தில் எண்ணெய் வடித்துக்
கொண்டு அதிலே நாட்டுசக்கரை பலம் ௪ விட்டு
கொடுக்கட்டி விநாயகப்பூசை பண்ணி தாபனம்
கொடுத்து முதல்நாள் செயலறிந்து கொள்ளும்படி

ஒருகொரண்டி கொள்ள இதுக்கு தீரும் வியாதி
மேககிரந்தி ௩, மேகசுக்கல், கிரந்தி ௰௧,
இரத்தப் பிரமியம், சீப்பிரமியம், வெள்ளை பிரமியம்,
தீரும். எதிர் கிவிசை, நீர் கிவிசை, வல்லை இருவ்வல்
எரபம் தீரும். ஒன்றை விட்டொருநாள் கொள்ள
½ மண்டலம் விடாமல் கொள்ள சகல கிரந்தியும்
பறக்கும். மேகோதரத்துக்கு உய௧ நாள் கொள்ள
தீரும். வெப்பு பாவைக்கு உய நாள் கொள்ளவும்.
௨௨௰.அ. தீரும். வெப்பு பாவைக்கு உய நாள் கொள்ளவும்.

குடல் வாதத்துக்கு பத்து நாள் கொள்ளவும். கல்கரைக்க நீர்
டுக்கு இருபது நாள் கொள்ளவும். கல்கரைந்து நீர்
இறங்கும். தாங்கையாம்.

மெகட்டி அட்டை — கட்டி இரை கட்டு
மேகஎரிவு, அக்கினை உய௧, பெருவயறு, விரைபாண்டு,
மேகஎரிவு, அக்கினை உய௧, பெருவயறு, விரைபாண்டு,

(7) ↑ இப்பாடலுக்கு உரை பின்பக்கம் உள்ளது.

7. கருவேப்பிலையும் கடுக்காயும்
கனைத்த பசுவின் நெய்தருக
தெளுவும் காடி தனிலரைத்து
தேக்க காய்ச்சி பிறைவளர்க்கி
அருந்தும் திருப்பும் தலைவலியும்
மடைய வலிக்கும் தலைநோவும்
மெருவ போகும் திண்ணமது.
வேறு மருந்து வேண்டாமே.

நேத்திரவாய்வுக்கு

4. கடுக்காய், சுக்கு, சீனிக்காரம், ஆகியவற்றை எலுமிச்சம் பழச்சாற்றினை எடுக்க. மூன்றையும் பொடித்து சாற்றில் கலந்து இமையின் மேல் ஊற்ற கண்ணிலிருந்து வழியும் அதிக தண்ணீரும் கண்ணின் சிகப்பும் நீங்கும்.

5. இரும்பினைச் சிவக்கக் காய்ச்சி அதில் எலுமிச்சம் பழத்தினைப் பிழிந்து அச்சாற்றில் கடுக்காய், சுக்கு, சீனக்காரம் இவற்றைப் பிழிந்து அவ்விரசத்தை இமையின் மேல் ஊற்ற கண்ணிலிருந்து பெருகும் கண்ணீரும் கண் சிகப்பும் தீரும்.

6. புளியங்கல் அரிசியைச் சுட்ட கரியையும் பொந்து மரத்தின் மருந்தையும் சேர்த்தரைத்து புருவத்திற்கு பூச போகப் பருத்த கண்சிகப்பு, தலைவலி, இடையிடையே வரும் தலைவலியும் நீங்கும்.

4.7.91

நேத்திர வாய்வுக்கு

ஏறுத இத்தந் தன்னை—
செந்நெருஞ்சி வேர், வடக்கை போரா வேர் பட்டை,
வேப்பம் பட்டை, நிலதும் ~~கடைச்~~ கொடி சமூலம்,
260.அ. விசமதாரி, வெள்ளறுகு, வெள்ளெருக்கன்
பட்டை, வெள்ளை சாட்டரணை வேர், ~~மிளகு~~
மிளகரணை வேர், உப்பிலி வேர், செங்கத்தாரி
பட்டை, செப்பு நெருஞ்சி வேர், காருதை கரிப்
பட்டை, செப்பு நெருஞ்சி வேர், பாகல்கிழங்கு,
பாக்கு, கெருடன் கிழங்கு,
கொட்டி கிழங்கு, நில கரும்பு, குப்பை மேனி,
இது எல்லாம் சமனாகச் சேர்த்து பேய்பீர்க்கு
உள்ளே இருக்கும் தான் தட்டிடை பேய்ச்
சுரை தான் தட்டை, புச்சக்காய் தான்,
தட்டை, குட்டி பிராய வேர் தட்டை
இது எல்லாம் கூட்டி வஸ்திரகாயம் செய்து
மூன்று தாருடன் கலந்து பேய்சுரை புறுடையிலே
அடைத்து வைத்து கொண்டு எந்த விஷத்துக்கும்
தட்டை சூரணம் உள்ளுக்குக் கொண்டு
தண்ணீர் வார்த்து கொப்பளிக்க குணமாகவும்.

பாம்புகடி சகலமும் தீரும்

கிரந்திக்கு எண்ணெய்

செங்கத்தாரி பட்டை வீ௫, சித்திர மூலம் வீ௫
வெள்ளெருக்கன் வேர்பட்டை பலம் ௨, நிலாவரை
வேர் பட்டை பலம் ௨, சிறுகீரை வேர் பட்டை பலம் ௨
புங்கன் வேர் பட்டை பலம் ௨, ~~மா~~காரணை பட்டை
பலம் ௨, நொச்சிவேர் பட்டை பலம் ௨, சங்கன்
வேர் பட்டை பலம் ௨, பறங்கி பட்டை பலம் ௨,
கண்டு பறங்கி பலம் ௧, வாயுவிளங்கம் பலம் வ ¼
திப்பிலி பலம் ¾, மிளகு பலம் ¾ சுக்கு
பலம் ¾, கருஞ்சீரகம் பலம் வ ¼, அம்பராத்தகம்
பலம் வ, நாககேசரம் பலம் வ, வெல்லம் பலம் ௧,
நல்லெண்ணெய் படி ௧, இதுவெல்லாம் கூட்டி
காய்ச்சி உள்ளுக்கு ஒருகரண்டி கொள்ளவும்.
சகல கிரந்தியும் விட்டுபோம். பத்தியம் கடும்
பத்தியம். கைப்பு, புளிப்பு தவிர்க்கவும். ~~வெள்ளை~~
சோறும் உண்ணவும்.

261. அ. ## புண் குட்டோரத்துக்கு

பசுவின் நெய் முச் சேர் கொண்ட படி 1. நெய்
காய்ச்சி ஒரு குத்து கருநொச்சி இலை போட்டு
கருகாமல் வெந்தவாறே இலையை எடுத்து
போட்டு பறங்கி பட்டை பலம் ய, சிறுக வெட்டி
நெய்யில் போட்டு கருகாமல் பணவெல்லம்
பலம் ய கூட்டி பதத்தில் இறக்கி வைத்து
கருணை அரைத்து நெய்யில் கலந்து ~~வெள்ளை~~ எவ்வளவு
செரிக்கத்தக்கன நெய் ஏகமாகவும் கெற்பமான
வாறே நெய் கொள்ளவும். இப்படி குறை மூன்று
மாசம் கொள்ளவும். கருவின சார்ந்தபோல் பிள்ளை
பிறக்கும். பிள்ளைக்கும் பணவிடை நெய் போடவும்.
~~பிள்ளைக்கும் பணவிடை நெய் போடவும்.~~ சிரங்கு
செவப்பு தீரும். கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்.
நெய், பால் கூட்டவும். பருப்பு தண்ணீர் கூட்டவும்.

எண்ணெய்

நல்லெண்ணெய், நெய், மணத்தக்காளி சாறு
சேர் 1, கரிசலாங்கண்ணி சாறு சேர் 1, சாட்டா
ணைச் சாறு சேர் 1, இது மூன்று சாறும் பிசைந்து
கொண்டு அதிலே அக்கு, களிபாக்கு, காசுகட்டி

சீரகம், பருத்தியிலை சாறு கூட்டி கடை சரக்கு
நாறும் நாறு காசிடை கூட்டி அரைத்து வடி
மார் கொடுக்கவும். கரும் பத்தியம்.

௨௬௨. அ. பரங்கி பட்டை ~~நாறும்~~ மாயம் நாறுக்கும்

பரங்கி பட்டை பெரியது பலம் உ, சின்னிலவங்கம் பலம் க, சுக்கு பலம் க, திப்பிலி பலம் க, மிளகு பலம் க, நல்ல சீரகம் பலம் க, ஓமம் பலம் க, பூண்டு பலம் க, நல்லவெல்லம் பலம் க, கோரோசனை, சாதிக்காய், இது இரண்டும் வகைக்கு துட்டெடை, கோசாப்பத்திரி வஉ க, இலவங்கிலிகம், வஉ க, சங்கம் வேர் பட்டை இது வகைக்கு பலம் ரு, இந்த மருந்தெல்லாம் பெறெள்ளு எண்ணெய் ஒண்ணரைப்படி, இந்த மருந்தெல்லாம் வஸ்திரகாயம் பண்ணி எண்ணெயில் போட்டு பதத்திலிறக்கிக் கொண்டு ஒரு நாள் குடிக்கவும். உப்பு, புளி தவிர்க்கவும். புழுங்கலரிசி சோறும், வெந்நீரும் வெள்ளை வெங்காயம் கூட்டி உண்ணவும். இதுக்கு தீரும் வியாதி வெள்ளை பிரமியம், சீ பிரமியம், இரத்த பிரமியம், சூலை குணம். ஆசன கண்டமாலை. மேகந்தீரும்.

ஆ. ## புண்ணுக்கு எண்ணெய்

நல்லெண்ணெய் முச்சேர் கொண்ட படியாலே
ஒரு படி எண்ணெய் காய்ச்சே காசுகட்டி இரண்டு
பலம், வெள்ளை குங்கிலியம் பலம் ௪, துருசு பலம்
௨, கருஞ்சீரகம் பலம் ௨, கடுக்காய் தூள் பலம் ௨,
களிப்பாக்கு பலம் ௨, கொட்டைகிரந்தி தூள் பலம் ௨
கருநொச்சியிலை பலம் ௨, இதுவெல்லாம் இடித்து
சூரணம் பண்ணி எண்ணெயில் தூவி கருகாமல்
பதத்திலிறக்கி பழைய வெல்லம் பலம் ௨ கூட்டி
இறக்கி ஒரு கரண்டி இரண்டு நேரமும் கொள்ள
மேல்புண், உள்புண், சூலைக்கட்டு, கைகால்
முடக்குகள் தீரும். இதுக்கு பத்தியம் கைப்பு,
புளிப்பு தவிர்க்கவும். பருப்பு தண்ணீர், எண்ணெய்
புண்ணாக்கு கூட்டவும்.

௨௬௩. அ. ## உஷ்ணம் வெள்ளைக்கு லேகியம்

மிளகு, திப்பிலி, சுக்கு, ~~லேகியம்~~, சீரகம், தேசா
வரம், கண்டு பரங்கி, சிமசி பட்டை, இதுவெல்லாம்
வகைக்கு பலம் ௨, இலவங்கம் வராகன் எடை ௨, சாதிக்காய்
வ ௨, சாபத்திரி வ ௨, இலவங்க பத்திரி வ ௨
~~இலவங்கப்பட்டை வ ௨~~
இலவங்கப்பட்டை வ ௨

கச்சூராச் சூரம்

ஏலம் வி ௨, ~~கிச்சூரம்~~ வி ௨, கோரைகிழங்கு
வி ௨, திராட்சை வி ௨, கடுகுரோகணி வி ௨,
கச்சூரா பழம் வி ௨, நாகேசரம் வி ௨, வால்மிளகு
வி ௨, கஸ்தூரி மஞ்சள் வி ௨, வெந்தியம்
சேர் க ௭, தேற்றான்கொட்டை சேர் ௭, கண்டு
சர்க்கரை பலம் ௨௰, ராயபுரி சர்க்கரை சேர் ௨,
பசுவின் நெய் படி ௨, இதுவெல்லாம் இடித்து
வெந்தியமும், தேற்றான் கொட்டையும் பொடி
ஊற வைத்து அந்த பாலைத்து ரூபா பசுவின்
நெய்யிலே வேகவைத்து வெந்தியம் இடித்து
வஸ்திரகாயம் பண்ணி பாகில் தூவி தேன் கொண்டு
சேர் விட்டு கிளறி ஆறவிட்டு வினாயக பூசை
பண்ணி வைத்து கொண்டு ~~கீர்த்திகா மதியானம்~~ தொக்கிளப் அளவு
கொள்ளவும். இரண்டு வேளையும் சீ பிரமேயம்,
இரத்த பிரமேயம், வெள்ளை பிரமேயம், பைய பிரமே
யம், அஞ்சுவகை பிரமேயமுந் தீரும். பத்தியம்
இச்சா பத்தியம்.

264. அ.

எரிகுன்மத்துக்கு

எரிகுன்மம், மாந்தபித்தம், குன்மம், சத்தி குன்மம்
வாதம் யாவைக்கெல்லாம் நெய்!

வெள்ளுள்ளி, இஞ்சி, நெல்லி, விராலிய சாஸ்த்திர
வேதி.

எரிகுன்மம், மாந்தபித்தம், குன்மம், சுத்தி குன்மம், வாதம் இவற்றிற்கு நெய்

17. வெள்ளைப்பூண்டு, இஞ்சி, நெல்லி, சாத்திர பேதி எடுக்க, இளநீர், பால், இவை யிரண்டையும் வகைக்கு 1.3லி எடுக்க. மேற்கூறிய மூலிகை மருந்துப்பொருட்களை இடித்து கலவையில் சேர்த்து காய்ச்சி 1.3லி நெய்யாக எடுத்துக் கொள்ளவும்.

18. கோஷ்டம், வெண்காரம், இந்து, சிறுதிப்பிலி, கொத்துமல்லிவிதை, கிராம்பு, வசுவாசி, செங்கொட்டை, ஆகியவற்றை வேண்டிய அளவெடுத்து இடித்து தேவையான அளவு (1.3லி) நெய்யில் கலந்து காய்ச்சிக் கொள்ளவும். அளவறிந்து கொடுக்க குன்மம் தீரும்.

எரிகுன்மத்துக்கு

எரிகுன்மம், மாந்தபித்தம், குன்மம், சத்திகுன்மம், வாதம் - இவைக்கெல்லாம் நெய்:-

வெள்ளுள்ளி இஞ்சி நெல்லி
திரவிய சாஸ்த்திர வேதி
தெள்ளிய இளநீர் பால்
கொள் சரி இவை நாழி நாழி
கொள்ளிவை இதமாய் வெந்திட
கதித்திடு நாசி நால்
மெள்ளவே வெந்து நாழி
நெய்யதை விடுதல் நன்றே. 17.

நன்றதே கோஷ்டம் மேல்
நல்கி வெண்காரம் இந்து
சென்றுற மத்தை தன்றிர்
திருதிப்பாலி கொத்த மல்லிகை
மென்றிகிராம் பூவ சவாசி
மிக்கசெவ் கொட்டை கூட்டு
மென்றிவை வெந்தநெய் நாழிதான்
உண்ணவே குன்மம் போமே. 18.

19. வேயமாந்தம், பித்த குன்மம், எரிக்கும் குன்மம், சத்தி குன்மம், வாதம், வலிக்கும் குன்மம், ஆகிய நோய்கள் தீர்க்கும் பழயான நெய் உறக் கேட்பிராகு.

20. செங்கழுநீர், நெய்தற் கிழங்கு, சிறுகீரை, தண்ணீர் விட்டான், முசுமுசுக்கை, கற்றாழை, பொன்னாங்காணி, விலாமிச்சன் வேர், கல்நெருஞ்சி, நன்னாரி, மிளகரணை

21. முத்தக்காசு, சீந்தில் கிழங்கு, நீர்ப்பூலாங் கிழங்கு, பொன் வளையம் எனும் தாமரை வளையம், சிற்றாமல்லி, பேராமல்லி, சீதேவி, வெள்ளறுகு, கொத்துமல்லி, சிற்றாமுட்டி வேர்,

போதுமன்றே வேய மாந்தம்
பொருமியே பித்த குன்மம்
தவிமதே எரிக்கும் குன்மம்
தடையற சத்தி குன்மம்
வரமதா வான வாதம்
மறுபடா வலிக்கும் குன்மம்
தாமதா படாமல் தீரும்
தகுதியாம் நெய்ய தாமே. 19.

செங்கழுநீர் நெய்தல் சிறுக்கீரை
தண்ணீர்விட்டான் ~~தாளி~~ கிழங்கு முசுமுசுக்கை
தண்குமரி பொங்கி பொன்னாங்
கண்ணி விளம்பிச் சன்வேர்
கற்றை நந்தி நன்னாரி
ஊறை = ளை/கரணை வேது. 20.

265. அ.

ஓது முத்தங் சீந்திலுடன்
கிழங்கு கீர்ப்பழ மூலா
போது வசனம் பொன்வளையம்
திக்கவுஞ் சித்தமல்லி பேரமல்லி
சீதேவி வெள்ளறுகு கொந்த
சித்திராமுட்டி வேர் காறு. 21

22. மயிர்மாணிக்கம், சடைச்சி, பாலைவேர்
நிலப்பனை, இருவேலி, கையாந்தகரை,
பூமிசர்க்கரைக்கிழங்கு, மரவள்ளிக்
கிழங்கு ஆகியவற்றையும் எடுக்க.

23. மேற்சொன்ன அனைத்து வகைகளையும் இடித்துப் போட்டுக் கொள்ளவும்.
1.3லி எண்ணெய், .. 2.6லி
நெல்வகைகள், காரம் ஏறு பங்கு 12.9லி
தண்ணீரில் மருந்துச் சரக்குகளைப் போட்டு பருத்து
கொதிநீராக்கி நான்கிலொன்றாய்ச் சுருக்கிக்
கொள்ளவும்.

24. சாதிக்காய், மரமஞ்சள், இலவங்கம், கொத்து
மல்லி, கச்சோலம், வாய்விடங்கம், கீல்நார்,
நற்சீரகம், அரத்தை ஆகியவற்றையும்

25. சடாமாஞ்சில், கடுகுரோகணி, சிறு
நாகப்பூ, செஞ்சந்தனம், நெல்லிவேர், பாலை
விதை, செவ்வியம், செவ்வள்ளிக்கொடி
—, சதகுப்பை, ஆகியவற்றையும்.

கூறு மெய்ம்மா ணிக்கம் —
கொள் சடைச்சி பாலை வேர் —
திலப்பனை இருவேலி சாரிடு —
கையாந் தகரை பூழி —
சக்கரை மரவை கிழங்கு —
செந்தே ரிலை வசனகு செரு.
— 22.

செரு மிதுவைலா கெல்நாழி எண்ணெய்க்கு
நெரு மெருநாழியாம் நெல்லாடை கறோரொன்று
— காரகு
இத்திணையுஞ் சேர்த்தே இருகல்நீர் பாண்டத்தில்
வைத்தெரித்து நாலினொன்றாய் இவை.
— 23.
வைத்து தோயந்தனில் வன்காதிக்காய் இலைகள்
அத்தமோ மரமஞ்சள் சொல்லவஸ்கம் — கொத்தமல்லி
கச்சோலம் வாய்விளங்கம் கன்னார் மரமஞ்சள்
நந்தீரக மரத்தை நாரு. — 24.

நாரு சடாமஞ்சி சந்துநீர் கடுகுரோகணி
சீரதேவு சிறுநாகப்பூ — செஞ்சாந்து — நெல்லிவேர்
பாலைவரை வந்தியஞ் — செவ்வல்லி கொடியிப்பா
பால் உசதுப்பு ஐயந்து. — 25.

௨௬. தேவதாரம், சந்திரபேதி, மஞ்சிட்டி, ஆகி-யவற்றை வகைக்கு 50 கி எடுக்க. புனுகு சட்டம் கோரோசனையையும் சம அளவெடுக்க.

ஏந்து தேவதாரம் இந்த சாஸ்த்திர வேதி
சேர்ந்து மந்திரிச்சட்டி இரண்வகைக்கு போந்துவம்
266.அ. ஒன்றாறையும் புனுகுசட்டம் கோரோசனையும்
சேர்ந்தபடி சேரு நீரை = மீதுள்ள 26
ஜுடக் (எழுதாமல் உள்ளது) வாருட்டளைது

விஷ்ட்டரிணம் வெள்ளை ஒழுகிறதுக்கு

ஓமம் பலம் ௨, பூண்டு பலம் ௨, கருப்பட்டி பலம் ௨, மிளகு பலம் ௨, கருஞ்சீரகம் பலம் ௨, கசகசா பலம் ௨, கண்டுசர்க்கரை பலம் ௨, கல்மதம் பலம் ௨, சோம்பு பலம் ௨, பரங்கிப்பட்டை பலம் ௨, கல்நார் இரண்டு பலம் இதுவெல்லாம் ~~இகத்து~~ சேர்த்து இடித்து ~~கெளிக்காய்~~ நெல்லிக்காய் ~~மகியானா~~ அளவு உருண்டைசெய்து இரண்டு நேரமும் கொள்ளாகிறதும். பத்தியம் இச்சா பத்தியம்.

267.அ. மந்தாக்கினிக்கு

வேப்பிலை ஒரு பிடி, கொன்றுகா வேளை ஒரு பிடி, சுணை காவளை ஒரு பிடி, ~~பிண்ணா~~ பூண்ணட ஒரு பிடி, மஞ்சள் ஒரு பிடி, கவளாங்கட்டி ஒரு பிடி, உப்பு ஒரு பிடி, இதுவெல்லாம் ஒரு புது சட்டியில் போட்டு

மேல்சட்டி மூடி எரியவிட பற்பமாம். இந்த பற்பம் இரண்டு வேளையும் கொள்ள மந்தாக்கினி பேதி குணமாம்.

268. அ. தாமிர பற்பம்

கள்ளிப்பால், புளியிலைசாறு, இதுவெவ்வேறே வைத்து செம்பைக் காய்ச்சி பாலிலுந் ~~தோய்ச்ச~~ தோய்த்து ஏ. ஏழுசெவிருகு போலே அடித்து ஒரு கலசத்திலிட்டு புளியிலைசாறும், விட்டு வாய்சீலைமண் செய்து புடமிடவும். இப்படி பத்து புடம்போட பற்பமாம். பற்பத்தை பரணியில் சிமிளிலடைத்து இஞ்சி, தேனில் பணவெடை (500மி) கொள்ளவும்.

கெந்தக செந்தூரம்

கெந்தகம் வீ.க, நாகம் வீ.க, இரசம் வீ.க, மூன்றும் கத்தாழை (கற்றாழை) சாற்றிலரைத்து சதுரக்கள்ளிபால் தேங்காயிலடைத்து ஏழுசீலைமண் செய்து காட்டு எருமுட்டையில் புடம் போட்டு இந்த மருந்தை முப்பது நாழிகை அரைத்து பின்பு தேங்காயிலடைத்து அறுபது நாழிகை புடம் போட்டு ஆறின பிறகு எடுத்து இந்த செந்தூரத்தில் ~~கரு~~

ஒரு பணவெடையும், எட்டு பணவெடை வெள்ளிக்கு
கொடுக்க பசுக்கும்.

பவுத்திரத்துக்கு

உமத்தஞ் சாறு படி ௧, புது செங்கல் ஏழுபொடி
வேகப் போட்டு சாற்றை ஒரு பலகையில் வார்த்து
செங்கல் பொடியை ஒண்ணொண்ணா போட்டு
கண் கொட்டாங்கச்சியை பலகையின் மேலே
மூடி ஆவி காட்டவும்.

நீரழிவுக்கு

கொட்டிக் கிழங்கு கொண்டுவந்து மேல் புறணியை
சீவிப் போட்டு சூரணம் பண்ணி மூன்று விரல்கொண்டு
சாப்பிடவும்.

269. அ. நீர்க்கட்டு உஷ்ட்டிண வாயுவுக்கு

கற்கண்டு, ஏலம், கீழாநெல்லிவேர் அரைச்சுக்
குழப்பி கொடுக்கவும்.

உஷ்ட்டிண வாயுவுக்கு

பிண்ணை சாறு படி ௧, ஓமம் பலம் ௫, சட்டியிலே
உறப் போட்டு ~~தெளுவல்~~ வெயிலால் உலர்த்தி ஓமத்தைப்
பொரித்துக் கொண்டு பழைய வெல்லத்தில் உருண்டை
பண்ணிக் கொண்டு சாப்பிடவும்.

மூலத்துக்கு

அரிதாரம், கெந்தகம், நவச்சாரம், சவுக்காரம், வெண்காரம், குப்பை மேனிச் சாறு வார்த்தரைத்து மூளையை சத்தி பதிமூன்று நாளைக்கி போட்டு மூன்று நாள் தயிரும் சோறும். மூன்று நாள் கட்ட முளை விழும்.

சத்தி குன்மத்துக்கு

மிளகு, திப்பிலி, இந்துப்பு, பொடி செய்து நெய்யில் வெல்லம் குழப்பி திங்கவும். இதுவும் சந்தணம், நெய்யில் குழப்பி திங்கவும். மாவிலிங்கம் வேர் பட்டை, முருங்கை வேர் பட்டை, கஸ்தூரிமஞ்சள், இந்த மூன்று வகையும் அரைத்து எலும்பிச்சங்காயளவு சாப்பிடவும். நெய் பால் கூட்டவும்.

பஞ்ச லவணம்

ஆருதின்னாப்பாளை தூக்கு க, பிரண்டை தூக்கு க, எருக்கம் பூ தூக்கு க, மாவிலிங்கம் பட்டை சேர் க, மிளகு பலம் ய, ஓமம் பலம் ய, வெள்ளைப் பூண்டு பலம் ய, கொடிவேலி பலம் ய, இது சூரணம் பண்ணி தின்னக்கவும். மந்தாக்கினி குணம்.

வெள்ளைசூத்துக்கு

கிம்பிளிக்கை ஒரு கிளை பறித்து மிளகு கூட்டி போட்டு அரைத்து உருண்டை பண்ணி நிழலுலர்த்தி, சீந்தியிலைச் சாறுவிட்டு உரைத்து போடவும்.

270.அ.

பீனிசத்துக்கு

நல்லெண்ணெய் படி ௧, செம்பைகிலை சாறு படி ௧, சூரிய புடம் வைத்து மூழ்கவும். வெள்ளெருக்கு காஞ்ச கழி ஒடித்து புகை ஏத்தவும்.

இரத்த கிராணிக்கு

சாதிக்காய் பிஞ்சு பலம் ௧, காசுகட்டி பலம் ௧, சீரகம் பலம் ௧, களிபாக்கு பலம் ௧, அபினி பலம் ௧, இது வறுத்து பொடி பண்ணிக் கொண்டு பழைய வெல்லத்தில் அநுபானம் பண்ணி சாப்பிடவும். சிறு பிள்ளைகளுக்கு பயிறளவு கொடுக்கவும்.

வயறு உப்புசத்துக்கு

வேப்பிலை ஈர்க்கு, அரிசி வறுத்து கொட்டிப் போட்டு உப்பும், ஓமமும் வறுத்து கொட்டி போட்டு சட்டியில் படி தண்ணீர் விட்டு காய்ச்சி கொடுக்கவும்.

எரிவுக்கு விரேசனம்

சிற்றுக்கள்ளி பாலும், ஓமமும் பச்சையாக அரைத்து பாலில் போட்டு காய்ச்சி புளியம் கொட்டை அளவு உருட்டி கொடுக்கவும். எரிவுக்கு சித்தாமணக்கு கொட்டை இளநீரில் புடக்கி இளநீர் விட்டு எண்ணெய் உலர்த்தி இராத்திரிக்கும், காலமே ஒரு கரண்டி சாப்பிடவும்.

27\. சுக்கு, அரத்தை எருக்கம் வேர், மணமுள்ள
நொச்சியின் கொழுந்து, வசம்பு ஆகியவற்றைச் சமஅள
வெடுத்து இடித்து 1.3லி தண்ணீரில் போட்டு
குடிநீராகக் காய்ச்சி 325 மி.லி அளவு நாள்தோறும்
குடிக்க சன்னி வாத சுரங்கள் தீரும்.

"ஏற்ற சுக்கோடரத்தை யெருக்கம் வேர்
நாற்ற நொச்சிக் கொழுந்துடனேற்றுச்
சேர்த்தே நீருழக்காக்கித் தினமே கொளின்
மாற்றலாகுஞ் சன்னி வாத சுரங்களே"
தேரன் வெண்பா. 27.

[illegible] – பக்கம் 378 (சுக்கு)

28\. திப்பிலி, கோட்டம், பற்பாடகம், சிறுகாஞ்சொறி
சிறுதேக்கு, கண்டங்காலி, கோரைக்கிழங்கு
சுக்கு, நிலவேம்பு, சீந்தில் கிழங்கு, ஆகியவற்றை
வகைக்கு 2½ கி நறுக்கிப் (பொடிக்க) 2.6லி தண்ணீரூற்றி
இடித்த பொருட்களைப் போட்டு 325 மி.லி யாய்ச்
சுருக்கிக் கொடுக்க சுரங்கள் தீரும்.

வெட்டைக்கு

சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், சீரகம், கடைகிறு, சிறுநாகப்பூ, அசமதாகம், தாளிசபத்திரி, முந்திரிப்பழம், சீனிச்சர்க்கரை, இஞ்சி, பசுவின் நெய் சேர், இஞ்சி, மேல் புறணி சீவி போட்டு வடியட்டு சர்க்கரை இஞ்சியல் துணித்து பசும்பால் ஒரு படி ஒரு பானையில் விட்டு வெடுகட்டி ஒரு விறகால் எரிவிட்டு பால் சுண்டின பிறகு இஞ்சி அரைத்து கடைச்சரக்கு சூரணம் பண்ணி நெய்விட்டு லேகியம் பண்ணி சாப்பிடவும். கைப்பு, புளிப்பு தவிர்க்கவும். நெய், பால் கூட்டவும்.

சுரத்துக்கு

271. அ. ஏத்த # சுக்கோ டாத்தை எருக்குடன்
நாரத்தை நொச்சிக்கொழுந்து காந்தமும்
சேத்தங்கு # ஒழுக்காகாச்சி தினம்கொள மாந்தளங்க
சுன்னி வாத சுரங்களோ.

திப்பிலி கோஷ்டம் பற்படாகம் சிறுகாஞ்சொறி சிறுதேக்கு

திப்பிலி கோஷ்டம் பற்படாகம் -
சிறுகாஞ்சொறி சிறுதேக்கு -
மெய்ப்பாவு கண்டங்காலி முத்தம் -
வெறுகொம் புடனே சிலகோம்பு
கைப்பாஞ்சீந்தி லொறென்று
கழஞ்சே கால்கொண் டிருநாழி
. . . . ஒழுக்காக்கி
எகசும் சுரங்கள் கெருமின்னே. 28,

29. புறசுரம், பகட்டு சுரம், மாறல்சுரம், உரத்தசன்னி, தாபசுரம் வாதம், பித்தம், கபம் ஆகியவை தன் ஊக்கித முறைப்படி மாறி நடப்பின் உண்டாகும் இருபத்தெழுவகை சுரங்களும் மேற்சொன்ன மருந்தால் தீரும்.

30. சிறுகாஞ்சொறி, பற்பாடகம், சீந்தில், கோரைக்கிழங்கு, நிலவேம்பு, சுக்கு ஆகிய மருந்துப் பொருட்களைச் சம அளவெடுத்து தண்ணீர் சேர்த்து முறைப்படி குடிநீராய்க் காய்ச்சி அளவறிந்து குடிக்க அனைத்துச் சுரமும் குணமாகும்.

31. சிற்றாமுட்டி சுரத்துக்கு க் கொடுக்கும் முறையான அமிர்தமாகும். வாதம், பித்தம், சிலேத்துமம் மூன்றும் பிறழ்பட்டு நோயுண்டாதல் (முப்பிணி) தீரும். பித்த சுரம் தீரும்.

பத்தி எகும்பிற சரமோடும்
பகட்டும் சரம்பாஞ்சு நாள்மாறல்
உத்த தொருநாது நாளா
உாத்த சன்னி தாபசரம்
பித்த வாத கப இவையோர் தின்மை
பேசு மிருபத் தெழ்நாடம்
வெத்த சரங்க ளிருசெபன்றி
பிறப்பட டகல பொயிவருமே.

29.

திருகாஞ் சொறி பற்பாடகம்
சிந்தில் முத்தம் நிலவேம்பு
இருகா சுக்கு இவைகூட்ட
எல்லா சரமுந் தீர்ந்திடுமே.

30.

சித்தா முட்டி சுதகுமாத்தம்
செப்பு கிரித்தோ சம்போம்
பித்த சரமெல்லாம் பிணமசியும்
சுத்தமுடன் வாரத்து பூண்முலையாள்
மங்கை நவீர் மருந்தேர
ராஞ்ச வேண்டாம் நினைந்து

31.

32. <u>அரத்திற்கு விரோசனம்</u>

நொச்சியிலை, நாரத்தை, ஆடாதோடை,
சங்கிலை, துளசி, ஆகியவற்றை எடுத்து
2.6லி தண்ணீர் ஊற்றி குடிநீராய்க் காய்ச்சி
325மி.லி அளவு
எட்டிலொன்றாய்ச் சுருக்கிக் கொள்ளவும்.
சரி
அதில் சுக்கு, மிளகு, திப்பிலி, வெள்ளை உள்ளி
பெருங்காயம், அரத்தை ஆகியவற்றைப் பொடி
-யாக்கித் தூவி விட்டு ~~இ~~ அளவறிந்து
கொடுக்க நளிர்சுரம், சன்னி, நடுக்கல் தீரும்.

~~விரோசனம்~~

சுரத்துக்கு விரோசனம்

272.அ.

நொச்சியிலை நாரத்தை ஆடாதொடை
நுண்ணியதோர் சிவிகிலையும் துளசி கூட்டி
இச்சையுள நிருநொச்சி அப்பை விட்டு
எட்டொன்றாய் காய்ச்சி அதின் மேலே தானும்
மெச்சுபெருந் திரிகடுகு வெள்ளை உள்ளி
மேவிய காயமும் மரத்தைமென்பொடியாய் தூவி
நச்சுவிசி மானகேள் குளிராய் நளிர்சுரமும்
சன்னியுடன் நடுக்கல் போமே. 32.

விரேசனம்

முத்தின காஞ்சொறைக் கிழங்கு கொண்டு வந்து தணலில் புதைத்து எடுத்து பிழிந்து நாலு கடுக்காய் அரைத்து வடியிட்டுக் கொடுக்கவும். பேதிக்கும். சுரம் விடும்.

அங்கடி மருந்து

மனோசிலை க, அரிதாரம் பலம் க, கிராம்பு, சாதிபத்திரி, அக்கிராகாரம், திப்பிலி, உ, சுக்கு உ, சீரகம் உ, பெருங்காயம் க, அரத்தை, கோரோசனை ஜெயம் ~~நாரசாணி ஜெலம்~~, தைவதாரம் க, இவை இடித்து நெய் நாசியாற் கலந்து எரித்து வடித்து காசத்தினை (காசளவு) நெய் நக்கவும். புண்களுக்கு பூசில் போகும்.

பூனைக் கடிக்கு

வெற்றிலை, எருக்கம் பூ கொடுக்க பனைவிதை ஆட்டுப்
பாலில் கொள்ள, வெள்ளை பாவட்டை குறிஞ்சாவேர்
பாலில் கொள்ளவும்.

விரேசனம்

அழிஞ்சில் பருப்பு உரி, நேர்வாளம் பருப்பு உரி,
தண்ணீர் விட்டரைத்து வழித்து நீரில் கரைத்து ஆமணக்கு
எண்ணெய் போல் உஷ்ணத்தைலம் எடுத்து கொண்டு
பூசித் தடவி முகர பேதிக்கும்.

கண்ணோவுக்கு

நந்தை கூரிவேர் பிருங்கி சிவழுவந்தி நல்லெண்ணெ
யாதல் தோய்த்து விளக்கில் கொளுத்தி கலத்தில் பிறத்தியாய்
பிடிக்க சலம் விழும். அதை முலைப்பாலில் உரைத்து
கண்ணிலிட பல நோவுந்தீரும்.

சகல கிரந்திக்கும்

273-அ.

பறங்கி பட்டை, சிவனார் வேம்பு, வெள்ளறுகு,
சங்கங் குப்பி, செருப்படி, கிரந்தி நாயகம், இதுவெல்லாம்
காயவைத்து இடித்து தூள் பண்ணி பற்பங்கி தீர்த்தத்தில்
குழப்பி குடிக்க சகல கிரந்தியும் தீரும்.

பத்தியம்: பாஷாணம்;

விக்கலுக்கு

புடம் பண்ணி எடுத்த கொம்பு, மயில் பீலியைத் தீயில் வாட்டி ~~[illegible]~~ தேனில் சேர்த்து நக்க விக்கல் மாறும் உறுதி.

33. குன்மத்துக்கு

ஆதண்டை வேர், வசம்பு, வெள்ளருகு
ஆகிய மூன்றையும் முறைப்படி குடிநீராக்கி
அளவறிந்து கொடுக்க பித்தகுன்மம்,
வாய்வு தீரும்.

(சி) ராலட்ட பதி

பாஷாணம்

சித்ரகத்தி இலைசாறும், பசுவின் பாலும் சமனாக கிட்டு ஏலம் பொடி செய்து போட்டு காலமே மூன்று நாள் தின்ன வயறு கசியும். மாத்து அடுகஞ்சி காய்ச்சி கொடுக்கவும்.

ஆ. அரையாப்புக்கு விரோசனம்

ரசம் கழஞ்சு (5 கராம்), சோமநாதம் கழஞ்சு (5 கராம்) நேர்வாளம் கழஞ்சு (5 கராம்) சட்டி காயவைத்து எலும்பிச்சன் சாறு பிழிஞ்சு அதில் இரதமரித்து காயமும், நேர்வாளமும் உரைத்து லேகியமாக்கி வீக்கத்தில் மூன்று பொதுது போடவும்.

குன்மத்துக்கு

~~ச —— று மாதிண்ண —— வேரும்.~~

கூ —— று மாதண்டை —— வேரும்
கொர்வசம்பு வெள்ளுள்ளி
தெறாங் கிஷாயந் தினாங்கொள்ள
வீறுகெ —— பஞ்ச குன்மம்
வாய்வும் பறந்திடு மென்றே
தஞ்ச முனிக்கோ னுரைத்தானென்றான்.

33.

குன்றுமணி இலை அரைத்து வெண்ணையில் மத்திச்சு சோற்றில் சுருளாக்க ஆனியம் போரது. ~~க்கச~~ கஞ்சாவும் தேனும் தேவ மாறும்.

எரிகாச்சலுக்கு

274. அ. கொன்றை வேரும், இருப்பை வேரும் இரண்டை பொடி அடப்பு விட்டு சாறு பிழிக்கிக் கொடுக்கவும். தீரும்.

மாவிலிங்கம் வேரை அரைத்துப் பால்

முள்ளி வேரும் பசுவின் பால் விட்டரைத்து இளம் வெந்நீரில் குடிக்கவும் ✓

ஊராத்து பதினெட்டு வெட்டுக்கு

முற்றின எட்டிமரம் பட்டையை வெட்டி வந்து உலர்த்தி இடித்து பொடி நாழி முத்தெருக்கஞ்செவி பொடி நாழி வெள்ளவிந்தம் மஞ்சள் பொடி நாழி, நெல்லிக் காய் பொடி நாழி ஆக கூட்டி புது பானையில் வைத்து ஒரு வெருகடிப் பிரமாணம் தேனில் கொள்ள பதினெட்டு குட்டமும் தீரும். நரை திரை மாறும். பத்தியம் பச்சரிசி பால் விட்டு ஆக்கி தின்னவும். தண்ணீர் காய்ச்சி குடிக்கவும். கொள்ள இளமை மண்டலம் தேனில் கொள்ளவும். ஈளை, இருமல், பெருவயிறு போம். இப்படி நெய்யால் முகொங்கி பாலொடு சிறுகா குடிக்க சிலந்தி விப்புருதி போம். நெல்லிக்காயால் கொள்ள பித்த கோபம் முன்னூற்றிருபது தீரும். பிரண்டை உப்பு அரைத்து தின்ன சூலம் போம்.

34. வாத சுரத்திற்கு ஏழு நாட்கள், பித்த சுரத்திற்கு ஆறு நாட்கள், கபத்திற்கு ஒன்பது நாட்கள், தொந்த சுரத்திற்கு பத்து நாட்கள் என்று கூறுவர்.

35. பெருவாகை, முன்னை, உள்ளி விளா, பாதிரி, குமிழம்வேர், வேம்பு, சீந்தில், கண்டங்கத்திரி, சதாவேரி, கடம்பு, கோரைக்கிழங்கு

வாத சுரம் ஏகுநாள். பின்பித்தம் ஆறாம்நாள்
ஓதுங் கபத்துக்குத் தொன்பது நாள்
திறவே தோஷ சுரம் பத்து நாள்.
கொண்டவெல்லாங் கணமையா அந்த தினே. 34.

வேளைவேர் பெருவாகை முன்னை உள்ளி
.வெண்டியது கிராமாத்திரியும் குமிளம் வேரோடு
காவிலிளா சிம்புடனே தீந்தி தானும்.
கண்டங்கத்தரி சதாவேரி கடம்பு முத்தம்
மெலியதோ விதைத்துக் கிணாந்தான் சேர்க்கில்
. . . . . வை தன்றுதன்று விதைனைபடண்ணி
பாவியனை கூட்டிடு வாரிதனைத் தானும்
பாஷாச்ச மருந்தெல்லாம் பணமும் பாஷே. 35.

பணம்பாஷா மின்னமுந்தா துறைக்க கேளும்
பாஷேகாண. கதிரெல்லி பேர்த்தா ணிக்காயக்
கிணம்பாஷாரு சாறணைவேர் நேர்வாள முள்ளி
கேருசின்னால் கொழுவேலி கிராம்பு வந்தி
. . . தன்டியமாங். மோச்சுதுகாண் பயித்திய மெல்லாம்
தாணிதுக்கு விதைமுள்ளே சாந்தே கேளும்
குணம்பாஷாம் மணித்துடன் கூற லாமோ.
கூக்கைகா மருந்தெல்லாம் குணமும் போச்சே.

பித்த சுரத்துக்கு

நாவில் தண்ணி இராது. இசங்கு, பேராமுட்டி - ~~விஷ்ணுகிராந்தி~~ விஷ்ணுகிராந்தி, சுக்கு, சிறுதேக்கு, கொத்தமல்லி இது கஷாயம் வைத்து குடிக்கவும்

வாத சுரத்துக்கு

பஞ்சமூலம், ஆத்துமுள்ளி [?], தூதுவளை, கஞ்சாங்கோரை, மஞ்சள் கட்டு [?], முருங்கைப் பட்டை, காக்கொடிவேர் [?], போட்டு கஷாயம் வைத்துக் குடிக்கவும். தகா

பொன்னரிதாரத்தை அகல் சட்டியில் வைத்து முலைப்பால் விட்டொரு ~~சாமம்~~ 3 மணிநேரம் உரை வைத்து பாசி பேதிப்பா.. வினை ~~சாமத்தில்~~ சாமத்தில் ஒருசாம மறைத்து பயிறளவு உருண்டை ~~செய்து~~ செய் நிழலுலர்த்தி சுக்கு கஷாயத்தில் ஓர் உருண்டை உரைத்திடவும். சர்வ சுரமும் தீரும்.

வேப்பம் கொட்டை, முருங்கை கொழுந்து ஒரு பிடி ஒரு மிளகு கூட வைத்தரைத்து இளம் ~~வெந்நீரில்~~ வெந்நீரில் கரைத்து குடிக்கவும். பசும் கண் சாணி ஒரு எலுமிச்சங்காயளவு அரைப்படி காடியில் கலந்து கொள்ளவும். ~~பகலிக்கி~~ பகல் வேளைக்கு பசுவின் பாலிலே தினை அரிசி சமைத்துச் சாப்பிடவும்.

பச்சைப்பயறு ..... உடைத்து ... முப்பதுநாழி
ஊறவிட்டு அந்த தண்ணி படிரயில் அரைபலம்
சர்க்கரை விட்டுச் சாப்பிடவும்.

மந்திரம்:-

ஓம் சரவண பவா சண்முக காய நமா
ஆரைக் கடித்தாலும் எங்களாரணைக் கடிக்குமோ விஷம்.
விஷம். அங்கிலிணைப் போடா
அங்கிரை அங்கிரை நசிமசி பருபரு அவா.

விஷமருந்து:- ~~காயா~~ ஞாயா மேற்கே போன கட்டிவேர்
விநாயக பூசைபண்ணி அதின் பட்டை எடுத்து ~~வெள்ளி~~ தக்
தின்றன பேர்க்கு கொடுக்கவும். ௨௰

பூரான் கடிக்கு

முசட்டை இலை பறித்து பூசி மேலேயுங் கட்ட
குறையும்.

பிள்ளையில்லாதவளுக்கு உண்டாக

நாயுருவி வடக்கே போனவேர் பாலிலரைத்து
ஆண்பிள்ளை குடிக்கவும். பெண்டுகள் நாவல்பட்டை
ஒரு காசிடை பசுவின் பாலிலரைத்துக் குடிக்கவும்.
கெர்ப்பந் தரிக்கும்

விஷம் மீள

சிறாநெல்லி சமூலமும், உள்ளி வசம்பு கூட்டிப்பொடித்து
நசுக்கி இரண்டு நாசியிலும் பிசிய விஷம் மீளும்.

36. <u>சஞ்சீவி மாத்திரை</u>

[illegible] செய்யப்பட்ட

நாபி, அரிதாரம், இரசம், கெந்தகம், வெண்காரம், தான்றிக்காய், சுக்கு, மிளகு, நேர்வாளம், ஆகியவற்றை வகைக்கு 7.5கி எடுக்கவும்: கையாந்தகரைச் சாற்றில், மேற்சொன்ன மருந்து சரக்குகளைப் பொடித்து ஒன்று சேர்த்து ~~[illegible]~~ ஏழு நாட்கள் அரைத்து 32 மி.கி அளவுள்ள மாத்திரைகளாய் உருட்டிக் கொள்ளவும். இதனைச் சஞ்சீவி குளிகை என்று அகத்தியர் கூறியுள்ளார்.

கோடமாலைக்கு

நிலை ஆவாரை சமூலம் இடித்து வஸ்திரகாயம்
பண்ணி எருக்கம் பழுப்பு வதக்கி சாறு பிழிந்து
சாம்ராணி
கொண்டு அந்த தட்டடை ~~[illegible]~~ குழப்பிக்
கொள்ளவும். பத்தியம்.

சஞ்சீவி மாத்திரை

277. அ.

இரவி நாவி அரிதாரம்
இரதம் கெந்தகம் வெண்காரம்
வசமே தான்றிக் காய்சுக்கு
பருத்த மிளகு நேர்வாளம்
அருமை என்றும் எண்ணாதே
ஆன கழுஞ்சு பதினைஞ்சே.
கையார் தகரை சாறுதன்னில்
கனக ஏகுநாளரைத்து
மெய்யா பயறு பிரமாணம்
மிகவே உருட்டி விடுவீராய்
அய்யா சஞ்சீவி குளிகை
அருளிச் செய்தார் ரகத்தியரே.

36.

கலிக்கம்

37. பெருங்காயம், வெண்காரம், படிகாரம், கடுக்காய், இரசம், இந்துப்பு, பீர்க்கஞ்சாறு, எடுத்துக் கொள்ளவும். சரக்குகளைப் பொடித்து பீர்க்கஞ்சாற்றில் அரைத்து உருண்டையாய்ச் செய்து கொள்ளவும். விடம் தீண்டப்பட்டவர்களுக்கு, இவ்வுருண்டையை இழைத்துக் கண்ணில் கலிக்கமாக இட விடம் தீரும்.

நாளிகா இருதம்

38.

சதுரக்கள்ளிப்பால், கெந்தகம், வெங்காயம், வசம்பு, மிளகு, சுக்கு, ஓமம், கடுக்காய், திப்பிலி ஆகிய மருந்துப் பொருட்களைப் பொடித்து. தேங்காயில் துளையிட்டு அதனுள் செலுத்தி துளையை அடைக்க. பின் அடுப்பெரித்து அனலுக்குள் தேங்காயை வைத்து குறிப்பிட்ட நேரம் வேகவைத்து எடுத்துக் கொள்ளவும். ஆறிய பிறகெடுத்து காய்ச்சிய வெல்லப்பாகினை ஊற்றி அரைத்து அவ்விழுதை வயிற்றுக்கவலையில் நோயாளியின் வன்மை, நோயின் தன்மையை அறிந்து உட்கொள்ள வாதகுன்மம், வயிற்றுவலி பெருவயிறு, புறநீர்க்கோவை, கண்ணில் தோன்றும் பிறநோய்கள் நீங்கிவிடும். வெண்பாஷாண நீரானது மலம் வழியாக வெளியேறும்.

கலிக்கம்

காயம் சாரம் படிக்காரம்
கடுக்காய் சிரோதம் இந்துப்பு
பேய பீர்க்கன் சாற்றுதனை
பேணி அரைத்து உருண்டைபண்ணி
மாயம் போலே விரைந்திடில்
வருவர் கண்ணி லிடுவீராய்
பேயம் போம்விஷ மும்போம்
பிழைத்து போவான் கண்டீரே. 37.

நாளிகா கிருதம்

சதிரப் பாலும் வெண்ணெயும்
தயிர்தம் கெந்தகமும்
உள்ளி வசம்பு மிளகுசுக்கு
ஓமம் கடுக்காய் திப்பிலியும்
ஒருதென்னங் காயில் வைத்து
தீயில் புடமா வெந்திறக்கி
வெள்ளைப் பாகை விட்டரைத்து
திவிடியத்து காலம் கொள்வீராய்
வாத குன்மம் வயறுவலி
பின்னையும் வயறு பெருவயறு
பிறைகிர்க் கோவை கண்ணில்
பிறப்பிறக் காணா மெகறைந்து
வலத்தில் விருந்தி குமே. 38.

39. சன்னிக்கு மணி ; ஆனந்த பைரவி

பஞ்சதாரை 20கி, அதிமதுரம், 15கி, இஞ்சி 10கி, ஏலம் 5கி வெண்காரம், சீனக்காரம், சவர்க்காரம், காடிக்காரம் அப்பளாகாரம் ஆகிய ஐந்தையும் தேவையான அளவு எடுத்து முறைப்படி பொரித்துப் பசும்பாலில் கலந்து உட்கொள்ள சன்னி, பித்தம், தலைவலி ஆகியவை தீரும்.

பைரவி

40. சாதிலிங்கம், வெண்காரம், மிளகு, ஆகியவற்றை எடுத்து பிருங்கன் சாற்றில் அரைத்து அவ்விழுதை 30 மி.கி அளவுள்ள மாத்திரைகளாய் உருட்டி நிழலில் உலர்த்திக் கொள்ளவும். அதை வெந்நீரில் இழைத்துக் கொடுத்திட சுரம் தீரும்.

ஆதி ஆனந்த பைரவி

41. சாதிலிங்கம், மிளகு, வெண்காரம், நாபி கெந்தகம் ஆகியவற்றை ச் சம அளவெடுத்து முறைப்படி இடித்து எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்துக் குளிகைகளாய்ச் செய்து கொள்ளவும். இதன் பெயர் ஆதி ஆனந்த பைரவியாகும்.

சன்னிக்கு மணி ஆனந்த பைரவி

பஞ்ச தாரை இருகழஞ்சு
பருத்த மதுரம் முக்கழஞ்சு
இஞ்சி தாளும் இருகழஞ்சு
ஏலந் தானு மொருகழஞ்சு
அஞ்சு காரந் தான்கூட்டி
ஆவின் பாலில் கொள்வீராய்
சன்னி பித்தந் தலைவலியுந்
தானே ஓடி இறந்திடுமே. / 39.

பைரவி

278.அ. சாதி லிங்கம் வெண்காரம்
தழைத்த மிளகு பெருநாடி
போத மெருலிங்கம் நிறைய
புரிய முருங்கன் சாற்றிலரைத்து
வேதம் சொன்ன பயிறளவாய்
மிகவே உருட்டி விடுவீராய் 40.
வாதம் தீரும் சுரந்தீரும்
மணி ஆனந்த பைரவியை //

ஆதி ஆனந்த பைரவி
சாதி லிங்கமும் மிளகு வெண்காரமும்
நீதி உதாபி கெந்தகம் நிறைபொடியாகவே
கோதிலாக எலும்பிச்சன் சாற்றி லரைத்து
ஆதி ஆனந்த பயிரவி யாகுமே. / 41.

கழிச்சலுக்குப் பரணி மருந்து

42. ஆவாரை, கொன்றை, நாவல், வில்வம், அத்தி, மெருகங்கிழங்கு ஆகியவற்றைச் சமமாக எடுத்துப் பொடித்துக் கொள்ளவும். இம் மருந்தைத் தேனில் குழைத்து உட்கொள்ள காவேரி ஆறு போலும் கடல் போலும் உள்ள கழிச்சல் தீரும்.

பரணி

- சுவை - மற்றும் அளவுகள்

43. கெந்தகம், இரசம், அரிதாரம், நிர்விடம் இந்துப்பு, மனோசிலை, விட்கெண்டம் மான்கொம்பு, கொட்டாங்கச்சியை நெருப்பில் சுட்டு எடுத்தது, ஆகிய அனைத்தையும் சம அளவு எடுத்து முறைப்படி சுத்தி செய்து மணிச்சாறு ஊற்றி அரைத்துக் கொள்ளவும். பிறகு தேவையான அளவு தேங்காய்ப்பால் விட்டு அரைக்கவும்.

சூதம் வராகன் ரு, சீலை வீ உ, கெந்தம் வீ அ, காந்தம் வீ யகா, லோகம் வீ ௩யஉ, குமரிச்சாற்றில் அரைப்பு நாள் ௩ அரைத்து கடலை பிரமாணம் உருண்டை பண்ணி நிழலுலர்த்தித் தாய் உலர்த்திக் கொள்ளவும்.

கழிச்சலுக்குப் பரணி மருந்து

ஆவாரை கொன்றை நாவல்
அழகிய வில்வ மத்தி
மேவிய மருத்த மிஞ்சில்
விருகுடன் சமனா கூட்டி
பூரிய குழி னானை
புரியதோர் தேனில் கொள்ள
காவேரி ஆறும் வற்றி
கடல்களும் சுவறு மென்னே. 42.

பரணி

கெந்தகம் இரதம் அரிதாரம்
கிடந்த நிறுவிஷம் இந்துப்பு
வந்தனவை வாச சாரம்
மனோசிலை விஷகெண்டம் மான்கொம்பும்
கொட்டாவி கச்சி சுட்டுகிது
சமநிறையாய் யொறுக்க வானம்
பரவு பத்துந் தந்த வெள்ளி
மணிசாற்ற வார்த்தரைத்து தேய்ந்த
தேள்காய் பால்வாதி துறையே. 43.

அரைத்த மருந்தை 300 மி.கி அளவுள்ள
மாத்திரைகளாய் உருட்டி நிழலிலுலர்த்திக்
கொள்ளவும். வெந்நீரில் மாத்திரையை கரைத்துக்
கொடுக்க (நோயாளியின் வன்மை, மென்மை
நோயின் தன்மைக்கேற்ப) பதின்மூன்று
வகை சன்னியும், சுரம், வாடங்கள் போன்ற
நோய்கள் குணமாகும்.

அரைத்ததை மருந்து பயிறாளவாய்
அன்பாய் ஒடுக்க வல்லீராய்
சன்னி பதின்மூன்றும் சுரம்விஷம்
சகல ரோகமும் ஓடி தெறித்திடுமே. ||

279. அ. நாக பற்பம்

நாகம் பலம் ௧0, அரைப்பொடி ௪ ௧0, ஆடுதின்னாப் பாளை சாற்றிலரைத்து வில்லைதட்டி உலர்த்தி அகலிலே வைத்து மேலே மண்கலயம் மூடி சீலை மண்ணிட்டு ஒரு தண்ணீர் குடத்திலே பாதி மண் போட்டு அது நடுவே அந்தக் கலசத்தை வைத்து மேலே மண்ணினாலே மூடி மூன்று நாளெரித்து நாலாம்நாள் மருந்தை எடுக்க பற்பமாம். சகல வியாதிக்கும் அநுபானம் செய்து தரவும். ~~பண்ணிக்கொள்~~

இரச பற்பம்

இரசம் பல அ, அதை ஒரு தோண்டியிலே வார்த்து மேலே ஒரு தோண்டி மூடி இருப்புத்தந்தியினாலே கட்டி ஏழு சீலைமண் செய்து புடம்வைத்து இரண்டு நாள் எரித்து

3 நயந்த நாளையிலே சூரணமாம்.

இரச லோகம்

அப்ரப்பொடி பல ௰௨, இரசம் பல ௰, கெந்தி பல ௫, வெண்காரம் பல ௪, ~~கற்றாழை சாற்றிலரைத்து~~ கற்றாழைச்சாற்றிலரைத்து வில்லை தட்டி உலர்த்தி ஒருபெருஞ் சட்டியிலே தாழைமடல் சோறு கொண்டுவந்து உலர்த்தி அந்த சட்டியிலிட்டு

அந்தியில் நடுவே வைத்து மேல்சட்டி மூடி நீறுசாமம் எரித்து வைத்துக் கொள்ளவும்.

கோடாசூரி குளிகை

சூதம், கெந்தி, நாபி, தாரம், சிலை, மணி, இருவி, தாம்பரம், திரிகடுகு, திரிபலை, வெட்பாலை பட்டை, கழற்சிப்பட்டை, வெண்காரம், அக்கராகாரம், சாதிலிங்கம், நிர்விஷம், வகைக்கு பலம் க. சுத்தி சரி நேர்வாளம். கையாந்தகரை சாற்றிலரைத்து இருபது நாள் மிளகு பிரமாணம் உருண்டை பண்ணி வைத்துக் கொள்ளவும்.

280. அ. ## சந்திர சேகரம் குளிகை

சூதம், கெந்தி, சிலை, சிங்கம், காந்தம், அப்பிரகம், தாம்பிரம், தாரம், நிமிளை, நேர்வாளம், திரிபலை, திரிகடுகு, கோரைக்கிழங்கு, எவ்வாச்சாரம், சத்திசாரம், வெண்காரம், இந்துப்பு, வகைக்கு பலக, எலும்பிச்சம் பழம், ஒருச்சிலை, இடச் கொடுவேலி, கார்த்திகைக்கிழங்குச் சாறு ஒவ்வொரு பாலைவிதை, சாற்றில் ஒவ்வொரு 3 நாள் ஜாமம் அரைத்து உருந்து பிரமாணம் உருண்டை பண்ணவும். சுரம், சன்னி ரோகங்களுக்கு அனுபானத்தில் கொடுக்கவும். கைப்பு, புளி தவிர்க்கவும்.

தாளிசமாத்திரை
~~சன்னி பாதகத்துக்கு ஐயாவ மாத்திரை:~~

280. ஆ. தாளிச பத்திரி, மிளகு, திப்பிலி, சீரகம், சுக்கு யூ ௨,
ஏலம் யூ ௨, இலவங்கம் பல ௨, நாகேசரம் பல ௨,
வெட்டிவேர் பல ௩, இடித்துச் சூரணம் பண்ணி நல்ல
வெல்லம் பல ௪, உழக்கு தண்ணீரில் கரைத்துக் காய்ச்சி
திருகிவரும் போது சூரணம் போட்டு கிளறி மடையிலே
குளிகை பண்ணவும்.

சன்னி பாதத்துக்கு ஐயாவ மாத்திரை

நெல்லிக்காய், கெந்தகம், பல ௭, ரசம் பல,
கடுகுரோகணி பல ௯, இலவங்கம் பல ௭, மிளகு பல ௬,
ஆமையோடு இரண்டு. கெந்தகமும், இரசமும் சுத்தி
பண்ணி பிறகு இரண்டையும் கூட்டவும். அந்த
மருந்தை துளாக்கி எல்லாம் ஆமை ஓட்டில் வைத்து
மேலேயும் மூடி பிறகு மண் ஓட்டில் வைத்து மேலேயும்
மண்ணோட்டாலே மூடி சீலை மண்ணிட்டு புடம்
போட்டு எடுத்து மேலோட்டை தள்ளிப் போட்டு
ஆமையோடு மருந்து எருக்கிலைச் சாறு விட்டரைத்து
உருண்டை பண்ணவும். சன்னிக்கு நேர்வாளம் சுத்தி
~~கத்தாழை~~ கற்றாழை மடலில் சாணியில் பிளியல் பாலிலே சுத்தி
பண்ணி பிறகு கடுகுரோகணி, திப்பிலி மூலம், இலவங்கம்,
சுக்கு கிஷாயத்தில் நெகவரைத்து சிறுபயிறளவு உருண்டை
பண்ணி கிஷாயத்தில் இடவும். சுரம் தீரும்.

281. அ. காந்த செந்தூரம்

காந்தத்தை பொடி செய்து சட்டியை காயவைத்து முருக்
சாரத் தோலை கருக்கிவிட்டு அதிலே காந்தத்தை விட்டு
வறுக்கும் போது இவையெல்லாம் மாறும். இதை செந்தூரம்
கடல் சோறி உருண்டை சோற்றியை எடுத்து வந்து
இதன் வாயிலே எலும்பிச்சன் ~~பழ~~ காய் கத்தை விட்ட
ரைத்து இதில் வாயில் சாறை விட திமக்கும். பதினஞ்சு
கழஞ்சு ரசம் விட்டு சட்டியிலே வைத்து மூடி சீலைமண்
செய்து புடமடக்கி மூட்டம் போட்டு எடுக்க
செந்தூரமாம்.

கண்ணுக்கு பச்சை உருண்டை

~~துரிசி~~ துருசு முக்கழஞ்சி, ~~துத்தம் கழஞ்சு~~ சுத்த நாகம், தலைஒடு கழஞ்சு, வெள்ளை பீங்கான
வெண்கல்து கழஞ்சு, சங்கு கழஞ்சு, ஆரிலை தாமரை கழஞ்சு, ~~சங்கு
கழஞ்சு~~, மிளகு கழஞ்சு, ~~வெள்ளை பீங்கான் கழஞ்சு~~, மிளகு கழஞ்சு,
~~ஆரிலைத் தாமரை கழஞ்சு~~, எலும்பிச்சன் பழச்சாறு
விட்டரைத்து காடியால் கரைத்து உருண்டை பண்ணி
நிழலுலர்த்தி முலைப்பாலில் உரைத்திடவும்.

கண்ணில் பூவுக்கு

சுரைப் பூவின் தண்டு செம்பில் பிசிந்து சாறணைக்கொ
கொண்டரைத்து கண்ணுக்கு எலும்பிச்சன் பழச்சாற்றில்
இடவும். கருவேலம் பூ பறித்துவந்து நாத்தீரகமாவ

கூட்டி கிழக்கு சிவ சூரியனுக்கு காட்டி சீலையில் தோய்த்து கண்ணில் பிழியத் தீரும்.

குட்டத்துக்கு

282.அ. நிலப்பனைக் கிழங்கு, சுத்தி பண்ணின வேர், பேய்ச்சுரை சாறிலரைத்து குடிக்கத் தீரும்.

சூலைக்கு

வேப்பிலைச் சாறு மூன்று துளி, நல்லெண்ணெய் அரைக் காசில் மிளகு அரைத்து குழப்பிக் கொடுக்க குணமாம்.

மேலத்துக்கு

காயம் கொண்டுவந்து காலமே மிளகு பிரமாணம் எருமை வெண்ணெயில் முழுங்கவும்.

கோதரத்துக்கு

ஆடுதின்னாப்பாளை இலை, சிறுகாஞ்சொறி இலை, குப்பை மேனி இலை, இது மூன்றும் மருந்தும் சமனாகக் கொண்டு அரைத்து ஐம்பது எலுமிச்சம் பழச்சாற்றில் மருந்தை கரைச்சு இழாவி குறுக்கக் காய்ச்சி குழம்பு பண்ணி எலும்பிச்சங்காயளவு கொள்ளவும். இருமலாய் இருக்கவும்.

சர்வ சுரத்துக்கும் குளிகை

வெள்ளைப் பாஷாணம், கெவுரிப் பாஷாணம், மனோசிலை கல்சுண்ணாம்பு இந்த நாலு மருந்தும் சுத்தி பேய்மிரட்டி சாறுவிட்டரைத்து சிறுபயறு பிரமாண உருண்டை பண்ணி

நிருவர்த்தி பத்துநாள் சர்க்கரை இளவெந்நீரில் கொடுக்கவும்.

காது செவிடுக்கு

குதிரை லத்தியும், இஞ்சிச் சாறும், நல்லெண்ணெயும் காய்ச்சி செவியிலே ஊத்த ~~கேர்க்கும்.~~ கேட்கும்.

~~கத்தாழை~~ கற்றாளை நாத்தத்துக்கு

முப்பாசியை அரைத்து உடம்பெல்லாம் உருட்டிப் போடவும்.

பொன்னாவாரை முத்தின வேரை வெட்டி வந்து உலர்த்தி பொடிசெய்து நெத்தியிலிட்டு சொல்ல நினைத்த காரியம் செயம்.

வசீகரத்துக்கு

283. அ. பெருங்குளை வலிக்கு! - அகத்தியிலைச் சாற்றில் உப்பைக் கரைத்து நசியம் பண்ணவும். இஞ்சியிலை, தும்பையிலை நசியம். சிறுக்கீரை எண்ணெயும் சேர்க்கவும்.

கண்ணுக்கு! - வெள்ளை காக்கிட்டான் வேர் வெந்நீரில் உரைத்திட புகைச்சல் மாறும். தகரைச் சாற்றில் படல மாறும். ~~[illegible]~~யால் அழுகண் தீரும். மாதளம்பூ சாற்றிலிட ஆணிப்பூ மாறும். வெள்ளைக் குன்றிமணி வேர் பூசத்துநாள் காலை இரும்பு படாமல் கெல்லி பிடுங்கி நாவினிக்க விதைத்திண்டாது.

எண்பத்து நாலு நஞ்சுக்கு

வெள்ளைக் குன்றிமணி வேர் பூசத்துநாள் காலமே இரும்பு படாமல் கெல்லி நெய்கி நாவிலிருக்க விஷந் தீண்டாது.

நாகப்பட்டையாவது. கொட்டையாவது உரி இடித்து காடியில் நெரிந்து இறுத்து பசுவின்நெய் கலந்து கொடுக்கவும். சகல நஞ்சுந் தீரும்.

சூலை கட்டுக்கு

இருப்பை இலை பிழிந்த சாறும் எண்ணெயும் கலந்து கொடுக்கவும்.

சன்னிக்கு

மூக்கத்தாரி, மிளகரணை, சம்பகம் பட்டை, ஓமம், கிழுவப்பட்டை, வெள்ளைநொக்கு, அக்கிராம் பட்டை, சிறுகளா, சித்திர கொஞ்சி பட்டை, குமிளம் பட்டை, மூலம், கண்டு பாரங்கி, திப்பிலி, செவ்வியம், இலவங்கங்களை பிழிச்சு சாறு எண்ணரைப்படி தண்ணீர் வார்த்து அரைப்படியாகக் காய்ச்சிக் குடிக்கவும்.

இசிவுக்கு

பொன்னாங்கண்ணி சமூலம், அவிச்ச சாறு பிழிந்து மிளகு, திப்பிலி, வெள்ளைப்பூண்டு, தும்பராஷ்டகம். அரைத்து இழைப்பி குடிக்கவும்.

நாயுருவி வேர் ஓரிலைத்தாமரை அரைத்துக் கொடுக்க கல்விகும்.

284 அ.

பக்க சூலை

கண்டங் கத்திரி வேர், சாரணை வேர், அசமதாகம், உள்ளி, வசம்பு, இவை இளவெந்நீரில் அரைத்துக் குடிக்க சூலை தீரும்.

இருமலுக்கு

நாயுருவி சுட்டு தேனையிட்டு பெருங்காயமிட்டு குடிக்கவும்.

பித்தத்துக்கு

தாமரைத்தண்டு பல சுப நெல்லிமுள்ளி பல சுப, தாணி பதக்குநீர்விட்டு நாலிலொன்றாய் காய்ச்சி கற்கம் சந்தனம் அதிமதுரம், கச்சோலம், நாகப்பூ, இலவங்கத் தோல், முந்திரிகைபழம், அல்லிப்பூ, தாமரைவளையம், திரிபூவில்லாத்து, செங்கழுநீர் கிழங்கு, நன்னாரிவேர், விளாம்பிச்சன் வேர், இருவேலிவேர் இவை ஒவ்வொன்றுக்கு கழஞ்சு கொண்டு அரைத்து காடி நாழியும், பால் குறுணியும் புகட்டி நாலுநாள் எரித்து வடித்து ஆறின வானே புழுகு, புனுகுசட்டம், கற்பூரம், கஸ்தூரியும் கரைத்து வைத்து தலையில் வார்ப்பிக்க பித்தம் தெளியும்.

சுரத்துக்கு

சிறுகாஞ்சொறிவேர், கூராநெல்லிவேர், குமிளம்வேர், கோரைவேர், மைதாங்கிவேர், பேராமுட்டிவேர், பற்படாகம், முத்தக்காசு, நன்னாரிவேர் சிலமும், பெருங்குரும்பை, தேவதாரம், கடுகுரோகணி

அதிமதுரம், கோஷ்டம், திப்பிலி, மரமஞ்சள்,
திரிகோலம் இவை எட்டொன்றாய்க் காய்ச்சி தேன்
காசிடை, மென்பொடி திப்பிலியிட்டு குடிக்கவும்.

சுத்தி

285.அ.

கோரய சுவாச பர்பம்:- சுக்கு, மிளகு, திப்பிலி,
கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், முத்தக்காசு,
விழலரிசி, செவ்வியம், கொடிவேலிவேர், ஏலம், இலவங்கம்,
சிறுமூலம், தேவதாரம், கோஷ்டம், மஞ்சள், இளவுப்பு,
கராம்பு, இந்துப்பு, திப்பிலி, நேர்வாளம் இவை ~~கோசா~~
குழைந்து புடமிட்டு பொடிசெய்து வெருகடி தேனில்
கொள்ளவும்.

பிள்ளை பெற மாட்டாமல் மரித்தால்

செம்பை விதை அரைத்துக் கீழ் நோக்கித் தடவ
விழும். புங்கம் பட்டை அரைத்து தலையில் தப்ப
வாயிலும் தடவ விழும்.

சுத்தி

கௌரி பாஷாணம், எலுமிச்சம் பழச்சாறு வார்த்தரைத்து
சீலையில் முடிந்து சுண்ணாம்பு தண்ணியில் போட்டு
காடாவியாங்கிரமாக எரிவிட சுத்தியாம்.

சாதிலிங்கம் முலைப்பால் வார்த்தரைக்க சுத்தி

அரிதாரம், ஆரை இலை வாங்கிக்கொண்டு சீலையில்

முதிர்ந்த பசுவின் கோமியமாவது (காருபாலது) டோகேந்திரத்தில்
முன்னாள் நெபாக்கினியாய் எரிக்க சத்தியம்.

மயில் துத்தத்தை நயாக்கிட்டரைத்து அடை
பண்ணி சட்டியில் போட்டு அடுப்பில் வைத்து எரிய
சேவிக்கும். சத்தி. இப்பால் துத்தம் சீலையால் முடிந்து
சுண்ணாம்பு தண்ணியால் போட்டு ~~எரியட~~ எரியட சத்தி.

ஏகவிசி மொடிபண்ணி கரண்டியால் விட்டு
நெய்யாட்டு வறு கொதிவரவிட சத்தி.

கெந்த ஆமணக்கெண்ணெய் வெள்ளாட்டுப்
பால் பசும்பால் சத்தி.

வெள்ளைப் பாஷாணம் அரைத்து சீலையால்
முடிந்து சுண்ணாம்பு நீரில் எரியட சத்தி.

சிங்கட்டங்கு

கலைக்கொம்பு சீவி மாங்கொட்டையும்
பெருமை மோரில் அரைத்து கொடுக்க கட்டும்.

~~சிங்கட்டங்கு~~

ஆத்திமுகில், அரசன்முகில், அரைத்து
இளவெந்நீரில் குடிக்க நீர்க்கட்டும்.

கோவை சமூலமும் உலர்த்தி சூரணம்
பண்ணி தின்னவும். கட்டும்.

தென்னம்பாளை அரிசி, பசுவின் பாலில்
அரைத்துக் கொடுக்க கட்டும். கஸ்தூரி மஞ்சள் சுட்டு
இளவெந்நீரில் கொடுக்க கட்டும்.

நீர்விட

அசுக்கராசமூலம் சூரணம் பண்ணி தயிரில் கொடுக்க கட்டும். கொடிவச்சனை இரண்டு இடித்து சட்டியிலிட்டு நீர்வார்த்து இரையமிட்டு எவிக்காரம் சுடுப்பி போட்டு குடிக்க விடும். அதுவளை வேர்ப்பட்டை, வெள்ளரி விதை, வெங்காரமும் சுட்டு சாறு பிழிஞ்சு அரைத்துக் கொடுக்க விடும். வெள்ளரிவிதையும், திப்பலிமூலமும் வெந்நீரில் கொடுக்க விடும். சுருவிகை வேர்க்கு இரையம் இட்டு எவிக்காரம்சுட்டு பனைவெட்டு கலந்து குடிக்க விடும்.

குன்மத்துக்கு

பெருங்காயம் பலம் 1 (35 கிராம்), சுக்கு வசம்பு பலம் 2 (70 கிராம்), சிவதை வேர் கோஷ்டம் ½ (70 கிராம்), மிளகு பலம் 2 (70 கிராம்), சிவதை வேர் பூரி சித்தி! இவை இடிச்சு வெருகடி விஸ்திர வெந்நீரில் கொள்ள குன்மம் போம். காயம் பண்ணி

சூலைக்கு

திப்பலி, திப்பலிமூலம், சவ்வியம், கொடிவேலி, ~~நவச்சாரம்~~ நவச்சாரம், வகைக்கு புற இவை பசும்பாலில் வேவிச்சு நெக அரைத்து பசுவின்நெய்யால் கிளறி தின்ன சூலை போம்.

287.அ. **வயறு வியாதிக்கு விரோசனம்**

இந்துப்பு பழஞ்சாற்றில் கொள்ள அசுவை, பிலிகை,
அட்டவி, குன்மம், வயத்தில் வியாதி தீரும். சிவதைவேர்
இளவெந்நீரில் குடிக்கவும். மோருஞ் சோறும் உண்ணவும்.

சாதிலிங்கம் பூக, கடுக்காய் பூக, நேர்வாளம்
பூக, சுக்கு பூக, திப்பலி பூக, பழஞ்சாற்றிலரைத்து
உருண்டை பண்ணி நெய்யால், சீ.னி விடவும்.

இரசம், கெந்தகம், மிளகு, வெண்காரம்,
வேர்க்கொம்பு, கடுக்காய், சமானகொட்டை இவை
அரைத்து கருப்புகட்டியால் மத்திச்சுக் கொடுக்க குளிர்ந்த
தண்ணீர் குடிக்க செரியும். வெந்நீர் குடிக்க மாறும்.

கருவேப்பிலை, வேப்பிலை, கடுக்காய்,
விளக்கெண்ணையால்
கொளைத்து வடித்துக் கொண்டு
கொடுக்க கழியும். மோருஞ் சோறும் உண்ணவும்.

~~மாத்திரை உண்டை~~

~~சாதிலிங்கம், பூக, கடுக்காய் பூக, நேர்வாளம்~~
~~பூக, சுக்கு பூக, திப்பலி பூக, பழஞ் சாற்றிலரைத்து~~
~~உண்டை பண்ணி..~~

மாத்திரைக்கு உண்டை

கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சுக்கு, மிளகு
திப்பலி, இந்துப்பு இரசம், கெந்தகம், அரிதாரம்,

இவை ஒரொன்று கழஞ்சு சிவனார்கொட்டை ஒடும்.
இவையும் போக்கி சுத்தி பண்ணி கையாந்தகரை
சாற்றிலரைத்து உருண்டை பண்ணி நெய்யால் தேனில்
கருப்பாவி கட்டியால் தண்ணீரிலிடவும்.

கள்ளிப்பால், பசுவின்நெய், வெங்காவளி,
மிளகு, அழிஞ்சிவேர், அரைச்சுக் கொடுக்கவும். நெய்
பசுவின் பால் ~~பத்து~~, மாற்று.

மாந்தைக்கு

நேர்வாளம், நொச்சிக் கொழுந்து, ஆமணக்கு 5 கழஞ்சு,
மிளகு, முலைப்பாலிலரைத்து மிளகுப் பிரமாணம் உருண்டை
பண்ணி முலைப்பாலில் கொடுக்கவும்.

கண்ணுக்கு

288-அ. பொன்னாங்கண்ணி, சிறுகீரை, சிறுதாணை சமூலம்,
சீந்திக்கொடி, விளாயிலை அரைத்து உருண்டை பண்ணி
நிழலிலுலர்த்தி முலைப்பாலில் போட்டு சாதியாம்.
பகல் நட்சத்திரம் தெரியும். சாறணையின்
அவுரிச் சாற்றில் உரைத்து கண்ணிலிட நன்றாம்.

சீந்தில் பற்பம்

சீந்தில் மேல்தோல் போக்கி பசுவின் பாலில் குடிக்க
வீரியமாம். வெந்நீரில் கொள்ள பாண்டுவும் போம்.
பசும்பாலில் எட்டுநாள் கொள்ள அக்குள் பிரமியம்
போம்.

திப்பிலி மிளகு சுக்குடனே தின்ன வயிற்றில் புழு
சாகும். தயிரில் எட்டுநாள் குடிக்க எல்லாவாதமும்
போம். நெய்யால் பிள்ளை உண்டாம். கருப்பு மாறும்.
இரதம் விட்டு சாறிற்கு எட்டுநாள் கொள்ள தம்பனமாம்.
~~கண்ணுக்கு~~
சுனைப்பாலில் குடிக்க சுரம் மாறும். வெப்பன் நொடியுடன்
கொள்ள பதினெட்டு குட்டமும்போம்.

தங்க பற்பம்

கற்றாழை பற்பமுடன் சேர்மானம் சேர்த்தும் பழஞ்செம்
பிலே பிஞ்சு உணவுக்கு அரிதாரம் நொடி போட்டுக்
கொடுக்க அடுக்கும் பால் சோறு தின்னவும்.

சித்திராமுட்டி யெண்ணெய்

சிற்றாமுட்டி வேர் பதக்கு, பசுவின் பால் பதக்கு,
தேவதாரம், சதகுப்பை, செவ்வியம், சிறுமூலகம், செவ்
வள்ளிக்கொடி, மஞ்சிட்டி, கோஷ்டம், ஏலம், கிலவங்கம்,
மிளகு, கொத்தமல்லி, அதிமதுரம், மாஞ்சில் இவைஅரைத்து
கரைத்து வடித்து மூழ்க கண் வியாதி, தலைவியாதி
தீரும்.

சந்தனாதி எண்ணெய்

அ. சந்தனம், கிலவங்கம், விளாமிச்சம் வேர், இருவேலி,
வேர், முத்தக்காசு, நன்னாரி வேர், நெல்லி, தாமரை
வளையம் கிழங்கு இவை ஒன்றுக்கு இருபதும்,
நாற்பது நாழி விட்டு பத்து நாழி ஆக்கக் காய்ச்சி கொத்து
எடுத்துப் போட்டு இதில் அரைத்துக் கரைத்து வெந்து

சந்தனம், ஏலம், இலவங்கம், பச்சிலை, நாகப்பூ, வெள்
இருவேலிதண்டு முன்னை தக்கோலம் நன்னாரிவேர்,
கோஷ்டம் மஞ்சிட்டி, செம்பருத்தி, கோஷ்டம்,
செவ்வள்ளிக் கொடி மலம் - செஞ்சந்தனம், கருகு
ரோகிணி, இலுப்பைப்பூ. புனுகு சட்டம், பச்சை கற்பூரம்
இவை ஒன்றுக்கு முக்கழஞ்சு கொண்டு இந்த கிழாயத்தில்
அரைத்துக் கரைத்து எண்ணெய் இருநாழி பால் பதத்தில்
வடித்து வாங்கத் தரும். சகல வியாதியுந் தீரும்.

கலியாண கிருத நெய்

நிலைப்பனைக் கிழங்கு, சித்தாமணக்கன் வேர், நெருஞ்சி,
வேர், சிறுவழுதிலை வேர், சிற்றாமல்லி, பேராமல்லிவேர்,
பேய்தும்மட்டி வேர், பங்கம் பாளை வேர், முத்தக்காசு,
சாரணை வேர், நீர்வள்ளிக் கிழங்கு. தராய் வேர்,
அமுக்கிரா வேர், கொட்டிக் கிழங்கு, விழுதி வேர்,
சீந்திதண்டு, உத்தாமணி வேர், இடித்து கலந்தண்ணிலே
காய்ச்சிவடித்து அன்னாழி தண்ணியாக்கி இதிலரைத்து
கரைக்கும் மருந்து அதிமதுரம், இருப்பைப்பூ, கோஷ்டம்,
கிஷாயம் தேவதாரம் மஞ்சட்டி நெருஞ்சில், வெண்பாலை
அரிசி, அதிவிடையம், தேவியம், முந்திரிப் பழம், பேரீச்ச
சம்பழம், ஏலம், இலவங்கம், இந்துப்பு, நாகம், சவுக்காரம்,
அத்தி, திப்பிலி, பிச்சிப்பூ, கடுநெல்லி, தாணி, விளாம்பழம்,
இருவேலி, விலாம்பிச்சன், சந்தனம், தக்கோலம்,

291. அ. நாகப்பூ, நன்னாரிவேர், சிற்றாமல்லி, பேராமல்லி, சாரணை
பாளை, பூக்குறட்டை வேர், செங்கழுநீர்க்கிழங்கு, செவ்வள்ளி
கொடி, நெல்லிக்காய்ச் சாறு, பேயன்வாழைக் கிழங்குச் சாறு,
கரும்பஞ் சாறு, இளநீர், வெள்ளரிக்காய்ச் சாறு, மாதளம்
பழச்சாறு, பூசணிக்காய்ச் சாறு, பால் இவை ஒவ்வொன்றுக்கு
ஒத்த மருந்தும், நெய் நாழி அரைத்துக் கரைத்து பதத்தில்
வடித்து நக்க சகல ரோகமுந் தீரும்.

கிராணிக்கு நெய்

பங்கம் பாளை, முத்தக்காசு, சிறுகாஞ்சொறி, முக்காவேளை,
நாய்வேளை, சிவனார் வேம்பு, வேர் மலக, சுக்கு மலக,
தேற்றான் தோல், உயநு, குறுணி தண்ணீர் வார்த்து நாழி
யாகக் காச்சி வடித்து நெய் நாழி விட்டு இதில் திப்பிலி,
சிறுதேக்கு, சிறுமூலம், விழலரிசி, காயம், அதிவிடயம்,
இந்துப்பு, அசமதாகம், சீரகம், இலவம்பிசின், குடசபாலை,
கொடிவேலி வேர், மிளகு, வகைக்கு பல2, அரைத்து பதத்தில்
வடித்து நக்கவும்.

வயறு வலிக்கி

திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சீலை,
சாம்பல் நறுக்கிந்தாளி. இவை பொடி செய்து தேனில்
குழைத்து முழுங்கவும்.

காதில் புழுவுக்கு

பொன்முசுட்டை வேர், எண்ணெயில் எரித்திட மாறும்.

௨௭. 1. '௯௨

௨௯1. அ. பித்த சுரம்:- சீந்தி தண்டு, ஓரிலைத் தாமரை, கொத்த மல்லி, செம்மையா இவை காய்ச்சிக் கொடுக்கவும்.

குடிநீர்:- சித்தாமுட்டி வேர், மிளகாரணை வேர், அகில் பட்டை, சீந்திற்றண்டு, தான்றிக்காய், காய்ச்சி கொடுக்கவும்.

சீத சுரம்:- ஆடாதோடை, பற்படாகம், வட்டத்திருப்பி, சந்தனம், நன்னாரி, சீந்தி தண்டு, கண்டங்கத்திரி வேர், சுக்கு சிறுவழுதிலை வேர், பூசினி தண்டு, கொத்துமல்லி, காய்ச்சி பொரிமாவு தூவி கொடுக்கவும்.

புளவை புண்ணுக்கு மருந்து:- பிராயம் வேரும், துடரி வேரும் அரைத்து எண்ணெயில் குழைத்துக் கட்டவும்.

ஒடுவுக்கு:- அரிசி அரிக்கிறக்கல் பொடி செய்து எறும்பு பொடி செய்து களிம்பு உள்ள கலத்தில் இரண்டு பொடியும் சிறுக்கக் கூட்டி நல்லெண்ணெய் விட்டு வடிக்கொண்டுரைத்து குழம்பாக்கி வைத்துக் கொண்டு திரியிலே தடவி புண்ணிலிட மாறும்.

ஆவாரம், அரசம், அத்தி, தோல், வேம்பு, அதிமதுரம், நத்தை சூரி வேர், கொதிப்பித்து [illegible]வும்.

ஒட்டிய புண்:- வெள்ளைப் பாஷாணம், கௌரி பாஷாணம், துருசி, கெந்தகம், துத்தம், கழஞ்சு, எருக்கிலைச் சாறு, பூமத்தைச் சாறு, நல்லெண்ணெய் வார்த்து கொதிப்பித்து புண்ணிலிடவும்.

அரைப்பொடி பதின்கழஞ்சு, கோதகம் கழஞ்சு, காந்தம் கழஞ்சு, கற்றாழம்பூ சாறுவார்த்தரைத்து பின்பு சுக்கு, மிளகு, திப்பிலி, அசமதாகம், கருஞ்சீரகம், சீரகம், கடுகு, இந்துப்பு, இவை ஒரொன்றுக்கு கழஞ்சு கொண்டு பொடி செய்து முற்பட்ட அரைத்த மருந்து கலந்து கொண்டு வெருகடிப் பிரமாணம் கொள்ளவும். சத்திகுன்மம், வலி குன்மம், பாண்டு ரோகந் தீரும்.

272. அ. தூதுவளை நெய் இருமலுக்கு

ஆடாதோடை இலை, பிரமி, தூதுவளை பழம், இண்டிலை சமூலம், சடைச்சி பூசணிப்பூ, கற்பூரவள்ளி, ஓரிலைத்தாமரை சமூலம், கீழாநெல்லி இவை ஒரொன்றுக்கு சாறு, நெய், கடுகுரோகணி, ஏலம், அருநெல்லி, தாணி, மிளகு, திப்பிலி, வேர்க்கொம்பு, உள்ளி, வசம்பு, இவை ஒரொன்றுக்கு கழஞ்சு கொண்டரைத்து கரைத்து பதத்தில் வடித்து கொள்ளவும்.

புண்ணுக்கு மருந்து

துருசி புடமிட்டதில் தில்லை மெழுகிலே சேர்த்து ரொட்டி பண்ணி கட்ட புண் ஆறும்.

துத்தம், துரிசி, கடுக்காய், இங்கிலிகம், ஒதியம் பட்டை, இதாம் வெண்ணெயில் அரைத்துக் கட்டவும்.

பச்சைக் கற்பூரம், கற்பூரம், குங்குமப்பூ, கோரோசனை, கஸ்தூரி வெண்ணெயிலரைத்து இவை மேனி சாத்திலிடவும். மேக ஊறல் மாறும்.

தெய்வ கோடாசூரி

இரதம், பச்சை – நாபி, இருவி, கெந்தகம், அரிதாரம்,
கெவுரி, அக்கரம், வெண்காரம், வெள்ளை பாஷாணம்,
தொட்டி பாஷாணம், திப்பிலிமூலம், அதிமதுரம், சாதிலிங்கம்,
சாதிக்காய், வாய்விளங்கம், சதகுப்பி, கடுரோகணி,
கொத்தமல்லி, குரோசாணிஓமம், அதிவிடையம், ஓமம்,
சீரகம், கருஞ்சீரகம், சுக்கு, மிளகு, தான்றிக்காய், கடுக்காய்,
கடுகு, துத்தம், நெல்லிக்காய், துரிசு, ஏலம், லவங்கம்,
கிராம்பூ, தேவதாரம், சந்திரபூசாரம், நவ்வாச்சாரம்,
சவுக்காரம், எவ்வாச்சாரம், நமச்சாரம், எருக்கன்வேர்,
கொடுவேலிவேர், நொச்சிவேர், இரதம், கற்பூரம்,
கொருவேலிவேர், நொச்சிலைவேர், இரதம், கற்பூரம்,
இரதபற்பம், பச்சை கற்பூரம், வங்காள பச்சை, சுத்தி
பண்ணின நேர்வாளம், கஞ்சகாரம், ஆகிய வையெல்லாம்
அடவிலே கழுவ்சு கொண்டு கூட்டி அரைக்கும் படிக
இம்பை மேனி, துளசி, நொச்சில், வேப்பிலை, முருங்கை,
தகரை, மணித்தக்காளி, பால்கிலை, சாட்டரணை,
கையாந்தகரை கடைநாள் ஆக அன்பத்தொரு பால்வார்த்து
மூன்றுநாள் வகைக்கு இப்படி மூன்று நாளைக்கி அரைத்து
சிறுபயிறு பிரமாணம் உருண்டை செய்து நிழலுலர்த்தாய்
உலர்த்தி மூன்றுநாள் வெயிலிலே உலர்த்தி வைத்துக்கொண்டு,
நாற்பது நாள் முத்திரை போட்டு அதின் பிறகு எடுத்துக்
கொள்ளவும். அநுபானம் காட்டாமணக்கு பாலிலுரைத்திட
வெண்குட்டத்துக்கு பூசவும். உள்ளுக்கு காடியில் கொடுக்கவும்.

உத்தாமணி சாற்றிலரைத்துக் கட்டத்துக்கு பூசவும். ஏனை
மண்டை கரப்பானுக்கு வியா குப்பைமேனி சாற்றில் திருக்கவும்.
செருப்புப்படைச் சாறும் ஆம். கபால விப்புருதிக்கு பிரண்டைச்
சாறுவிடவும்.

௨௯௪. அ. ## இலகுவில்வாதி லேகியம்

வில்வ பத்திரிவேர் பல ௫௰, சுக்கு, மிளகு பல ௨, திப்பிலி
பல ௪, செவ்வியம் பல ௧, தாளிச பத்திரி பல ௨, சிறுநாகப்பூ
பல ௧, திப்பிலிமூலம் பல ௧, கொடிவேலிவேர் பல ௧, ஏலம்
பல ௧, இலவங்கபத்திரி பல ௫, சீரகம் பல ௧, கொத்தமல்லி
விதை பல ௧, நன்னாரி வேர் பல ௧, அமுக்குறாகிழங்கு பல ௧,
அதிமதுரம், பல ௧, இலவங்கம் பல ௯, தூதுவளை வேர்
பல ௨௰, முத்தக்காசு பல ௧, விளாம்மிச்சன் வேர் பல ௧,
வாய்விளங்கம் பல ௧, வெள்வேலம் பல ௫௰, இஞ்சிச்சாறு,
கொம்மட்டி, மாதளம் பழச்சாறு, தாணி பதக்கு தண்ணியில்
வில்வ பத்திரிவேர், கஷாயம் போட்டு இரண்டு படியாக
இறக்கிக் கொண்டு வெல்லம், சர்க்கரை, கலந்து சூரணம்
போட்டு கிளறி அதிலே தேன் ஒருபடி விட்டு கிளறி
க்ஷயம், இருமல், அன்னத்ரேஷம், உள்ளுக்குக் கொள்ளவும்.

பித்தத்துக்கு அமிர்தத்தைலம்

சீந்தில் சாறு, முசுமுசுக்கைச் சாறு இதுக்குக் கற்கம்.
சந்தனம், விளாம்பிச்சன், இருவேலிவேர், கோஷ்டம்,
பச்சிலை, சாதிக்காய், தக்கோலம், பருப்பு கச்சோலம்,
அதிமதுரம், செங்கழுநீர், தாமரை வளையம். அகில்
கிழங்கு

295. அ. நெய்தற்கிழங்கு, கொட்டிக்கிழங்கு, இலுப்பைப்பூ, இவை தண்ணிவிட்டுக் கொண்டு இடிபலம் இவைச்சாறு ஒவ்வொன்று நாழியில் புகட்டி அரைத்துக்கரைத்து எண்ணெய் இருநாழி, அரியும், பால் அன்னாழியும் புகட்டி இருநாழி முலைப்பால் புகட்டி பதத்தில் வடித்து புழுகு, கற்பூரம், சேர்த்து தலைக்கிட்டு மூழ்க பித்தமெல்லாந்தீரும்.

அமாதச் சூரை, இரத்தபித்தம், மொசிவபித்தத்துக்கு

சீந்தில்தண்டு, பெருந்தும்பாய், தரித்து துவைச்சு சாறு கொண்டு நாலஞ்சு பிரகாரம் வடியட்டு வெயிலிலே வைத்தால் தெளியும். இறுத்துப் போட்டு உலர்த்தி பொடிசெய்து ~~[illegible]~~ வைத்து இந்த அமிர்த சர்க்கரையுடனே கச்சோலம், சீரகம், பச்சிலை, கோஷ்டம், நெல்லிபருப்பு வாகு, ஏலம், அரேணுகம், முந்திரிப்பழம், இலவங்கப்பூ, தாது மாதளை, தாமரை வளையம், தாதுகற்பூரம், கஸ்தூரி, சந்தனம், செஞ்சந்தனம், அகில், சுக்கு, மிளகு, திப்பிலி, இலுப்பைப்பூ, அமுக்கிரா வேர், சதாவேரி கிழங்கு, தற்கோல பிட்டில், நெருஞ்சில்வேர், கர்க்கடகசிங்கி, சாதிக்காய், விலாமிச்சன் வேர், இவை ஓரொன்றுக்கு இருகழஞ்சு கூட்டிப் பொடி செய்து முற்பட்ட அமுக்கராயுடனே கலந்து சேர்த்து வைத்து இவை கூறு கண்டு சர்க்கரையும் கூட்டி நேரத்துக்கு ~~விராகனிடை~~ ஒருகடைப் பிரமாணம் தேனும் நெய்யும் கூட்டிக் குழைத்து முழுங்க பித்தம், பிரமேகம், பித்தத்தால் வந்த வியாதி தீரும்.

296.அ. ## பித்தத்துக்கு எண்ணெய்

எண்ணெய் நாழிக்கு எண்பது தீந்தில் இலையை ஒன்றாக்கி கட்டி எண்ணெய் சேர்க்க எரியட்டு இலையைப் போட்டு எரித்து வைக்கவும். மூழ்கவும். பயித்தியம் தீரும்.

மயிர் கழியாதுக்கு:-

கையாந்தகரைச் சாறு, முசுமுசுக்கைச் சாறு, தீந்தில் தண்டுச் சாறு, தாழை விழுதுச் சாறு, அபலிச் சாறு, இவை ஒரோன்று நாழி.

கற்கம்:- அதிமதுரம், கண்டிக்க வுளாவித்து நாஞ்சில் ஏலம், இலவங்க பட்டை, சாதிக்காய், தக்கோலம் பிட்டில் சந்தனம், விலாம்பிச்சன் வேர், செங்கழுநீர்கிழங்கு, கோஷ்டம், அதாலரிசி, நன்னாரி இவை ஒரோன்றுக்கு கழஞ்சு 2 அரைத்து கரைத்து எண்ணெய் புகட்டி எரித்து வடித்து தலை மூழ்கவும். மயிர் ஏறும்.

~~[illegible]~~

எட்டி பழத்தில் கனி இரிபலை மூவழக்கு, மிளகு, பேய்ச்சுரை ரதம், மூன்றுமா விடையில் கூட்டி கூட்டி இருநாழியும் புகட்டி குக்கையில் புகட்டி எண்ணெய் இருநாழியும் புகட்டி வைத்து உகுதினவாரே தலையில் வார்க்க மயிர் ஏறும்.

சவுபாக்கிய சுண்டி

சுக்கு பலம்-5 பூரு திப்பிலி பல 2, மூலம் பல 4, மிளகு பல 4, கருகரோகணி பல 4, ஓமம் பல 2, தேற்றான் கொட்டை பல 4, அதிவிடையம் பல 4, சாதிக்காய் நாரத்தம் காய் பல 3,

297. அ. இஞ்சி பல சு, சாதிக்காய் பல சு. சாபத்திரி பல [illegible],
லவங்கம் பல [illegible], ஏலம் பல உ, கொத்தமல்லி [illegible], கடுக்காய்
பல ரு, தான்றிக்காய் பல ரு, பசுவின் பால் சு, தேன் உழக்கு
நெய் உழக்கு, சர்க்கரை பல உய, நெல்லி பருப்பு பல உ,
இது கூட்டி லேகியம் பண்ணி இருக்கவும். சகல
கிராணியும் தீரும். இச்சா பத்தியமாய் இருக்கவும்.

கரப்பான் எண்ணெய்க்கு

நவச்சாரம் பல ரு, எவ்வாச்சாரம் பல க, துவர்ச்சிரி
பல க, சயிந்த லவணம் பல க, பொட்டிலுப்பு பல க,
எருக்கன் கரி பல க, இவையெல்லாம் அரைத்து பரணியில்
வைத்துக் கொண்டு வேண்டினதுக்கு அண்ணாம்பல் மத்திச்சு
ஆக்கிராணம் பண்ணவும். சன்னி தீரும்.

கிருதம்:- மகா அதிமதுர கிருதம்

அதிமதுரம் பல சு, சீரகம், விளாம்பிச்சன் வேர்,
லவங்க பத்திரி, நாகப்பூ,
கொத்தமல்லி, ஏலம், லவங்கம், தாமரைக்
கோஷ்டம், சந்தனம், நெய்தல் கிழங்கு, தாமரைக்
கிழங்கு, வெட்டி வேர், நன்னாரி வேர், காட்டு எருமைப்
பால், நெல்லி பருப்பு, முந்திரிகைப் பழம், பாகற் கிழங்கு
பொன்னாங் கண்ணி வேர், சிறுக்கிரை வேர், நெரிஞ்சி
வேர் இவை எல்லாம் சமனாக ஒரொன்றுக்கு அரைபலம்
இவை எல்லாம் பசுவின் பால் விட்டரைத்து
விழுக்காடு கூட்டி எல்லாம் பசுவின் பால் விட்டரைத்து
கரைத்து பசுவின் நெய் நாழி கலந்து பசிப்பித்து
பதத்தில் வடித்து கொள்ளவும். உள்ளுக்கு உச்சிக்

காரண்டி அரைவு கொள்ளவும். சர்வ பித்தத்தையும்
கை நடுங்குகிறதுக்கும், உஷ்ட்டிணமாகிறதுக்கும்,
நாக்குலர்ந்தும், வாய்வறண்டு காமாலை பாண்டுவும்,
பிரமியம். மூத்திரக்கிரிச்சு, அந்தரதாகம், இது பிரகாசமாம்.

298. அ. கலியாண கிருதம்

வெள்ளருகு, வல்லாரை, தாழைக்கிழங்கு, நெருஞ்சில், கற்றாழை,
கரும்பஞ்சாறு, பூசணிக்காய், செவ்விளநீர்,
இவை எட்டுவகையும் வகைக்கு பதக்கு விழுக்காடு.
கலனே தூணிநீர்விட்டு கஷாயம் தூணியாகக் காய்ச்சி
இதுக்கு பசுவின் நெய்விட்டு இதுக்கு கற்கம் திரிபலை,
துமட்டி, ஏலம், தேவதாரம், முசுமுசுக்கை, நன்னாரி,
மரவள்ளிக்கிழங்கு, மஞ்சள், மரமஞ்சள், சிற்றமல்லி, பேரா
மல்லி, நாணல், தாது. சிற்றரத்தை, கோஷ்டம், சிறு
வழுதிலை, நாகப்பூ, தாது. மாதுளை பழம், கொம்மட்டி
மாதுளை, தாளிசபத்திரி, சிறுசெண்பகம், மஞ்சட்டி,
நெய்தல் கிழங்கு, நில ஆமணக்கு. தாமரைவளையம்,
சந்தனம் இவை ஒரொன்றுக்கு கழஞ்சு கூட்டி பசுவின்
பால் தூணிவார்த்தரைத்துக் கரைத்து பதத்தில் பிசைந்து
வடித்துக் கொண்டு தேன் சர்க்கரையுடனே கொள்ளவும்.
பித்தம், காரிரோகம், ஆம்பல பயித்தியம், பாண்டுவும்,
திணவு, சுரம், மூர்ச்சை, மருந்தீடு, சுக்கிலம், உடம்பு
நடுக்கல், உடம்பு போர்ப்பிர காசமாம்.

299.அ. பூசணிக்காய் சாறு, கருப்பன் சாறு, தண்ணீர்விட்டான்
சாறு, கருவாழை கிழங்கு, நீர்க்கற்றாழையின் சோறு,
நாணல் சாறு, இளநீர் இவை ஒன்றுக்கு குறுணி விழுக்க
காடு கூட்டி, பசுவின் பால் தூணி, பசுவின் நெய்யும்,
கற்கம், அமிர்த சர்க்கரை, நிலப்பனைக் கிழங்கு,
தாமரை வளையம், கோத்தான். அமுதவள்ளி கிழங்கு,
இலவம் பட்டை, நெல்லிமுள்ளி, முத்தக்காசு, ஏலம்,
இலவங்கம், இலவங்கபத்திரி, பாலை கிழங்கு, நாகப்பூ,
நெய்தல் கிழங்கு, நன்னாரிவேர், அதிமதுரம், தேவதாரம்,
தகரம், மஞ்சிட்டி, வெட்பாலையரிசி, இருப்பைப்பூ,
முந்திரிப் பழம், சிறுகறை, செண்பகமொட்டு, நல்ல
சந்தனம், செங்கழுநீர் கோஷ்டம், சுக்கு, மிளகு,
திப்பிலி, பெருங்குரும்பை, கடுக்காய், தான்றிக்காய்,
நெல்லிமுள்ளி கைநறு, கல்மதம், கிராம்பு, சவ்வியம்,
கச்சோலம், வெந்தியம், கற்கடசிங்கி, சடாமாஞ்சில்,
துத்துருக்கன் பிசின், சிறுதேக்கு, மஞ்சள், சிறுமூலம்,
சீரகம், கடுகுரோகிணி இவை ஒன்றுக்கு கழஞ்சு 5 கிராம்
கூட்டி முந்தின பால்வார்த்தரைத்துக் கரைத்துப்போட்டு
அருந்தவும், காலையும் மூன்றுவிரல் கொண்டது
சாப்பிடவும். அசாத்திய சுரம், பயித்திய சேத்துமம்,
எரிச்சல் இவையெல்லாம் தீரும். பத்தியம்.
கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்.
எருமைப்பால், மோர், மாங்காய் தவிர்க்கவும்.

ம் ஏத இல்லை.

44. கஸ்தூரி மாத்திரை

அன்னம், பவளம், ஆட்டுக்கல், வெள்ளை முள்ளம் பன்றியின் விதை, நண்டுக்கல், காந்தபற்பம், ஆகியவற்றை வகைக்கு மூன்றரையும் பன்றியின் கருப்பிண்டம், குரங்கின் கருப்பிண்டம் ஆகியவற்றை வகைக்கு ஒரு எடையாகவும் எடுக்கவும்.

45. பாம்புக்கல், பவழம், முத்து ஆகிய மூன்றையும் வகைக்குப் பத்தரையாகவும் கோங்கு, குங்குமம் கஸ்தூரி, கோரோசனம் ஆகியவற்றை வகைக்கு மூன்றரை எடுத்து பிராந்தியை ஊற்றி ஒன்பது நாள் அரைத்து தூதுளங்காய் அளவுள்ள உருண்டைகளாய்ச் செய்து நிழலில் உலர்த்திக் கொள்ளவும். வேண்டிய போது பிராந்தியில் கரைத்துக் கொடுத்திடவும்.

46. இம்மாத்திரை பதின்மூன்று வகைச் சன்னியையும் இருபது வகை சிலேற்பனத்தையும் நாற்பது வகை பித்தங்களையும் எண்பது வகை வாதங்களையும் போக்கும். இவ்வாறு பல் பிணிகளையும் இக்கஸ்தூரி மாத்திரை போக்கும்.

301. கஸ்தூரி மாத்திரை

வெள்ளை பவளம் ஆட்டுக்கல்
வெளுத்த மூன்று பணவிடை
குள்ள நண்டுக்கல் காந்தபற்பம்
துலங்க வகைக்கிடை மூன்றினவே.
உள்ள பன்றிக்கல் தம்போகவடி
உகந்த குரங்கு கல்லுடனே
மெள்ள வகைக்கிடை ஒவ்வொன்றாய்
மேவும் பாம்பு கல்லிறையே. ॥. 44.

பாம்புக் கல்லுந் தன்னிறையாய்
பவழ முத்து பத்தெனவே
கோங்கு குங்குமம் கஸ்தூரி
கோரோ சனமும் மூன்றிடையாய்
பாங்காய் பிராந்தி தனைவிட்டு
பருவட னைன்பது நாளரைத்து
தெம்பித் தண்டை தான்செய்து
சேராய்ப் பிராந்தியி லருந்திடவே. // 45.

அருந்திடச் சன்னி பதின்மூன்றும்
ஆன சிலேஷ்பம் இருபதுவும்
வருந்திய பித்தம் நாற்பதுவும்
வாத வகை எண் பதுவும்
இருந்த பீடங்கள் நீங்கியிலங்கும்
பிணிகள் போமெனவே
இருந்த தாது விளாங்காய் போல்
திகழும் கஸ்தூரி உண்டையாதே //. 46.

அச்சிரத்துக்கு

சித்திராமணக்கெண்ணெய், தாழை, முளைசாறு, வெங்காய்ச்சாறு, கொதிக்க வைத்து பதமா இறக்கிக் கொடுக்க தீரும்.

காசிரோகத்துக்கு:- திப்பிலி பல ௪, சித்திரை மூலம் பல ௩, வாயுவிளங்கம் பல ௨, தும்பராஷ்டகம் பல ௨, மிளகு பல ௨, சுக்கு பலம் ௨, சிறுதேக்கு பல ௨, தான்றிக்காய் பல ௪, கடுக்காய் பல ௪, அதிவிடையம் பல க, இலவங்கம் பல க இலவங்கபத்திரி பல ௨, சீரகம் பல ௩, கொத்தமல்லி விதை பல ௩, கருஞ்சீரகம் பல ௮, லோகசெந்தூரம் பல ௨, நாகசெந்தூரம் பல ௨, சக்கரை பல ௰க, தேன் ௲. கையாந்தகரை பொடி பல க, இந்த மருந்தெல்லாம் தேத்தாம்கொட்டை பால் வார்த்தரைத்து மத்த மருந்தெல்லாம் இடித்து சூரணம் பண்ணி தேனும் சர்க்கரையும் மருந்தோடே கூடபோட்டு பிசைஞ்சு தின்ன காசரோகம் தீரும். பத்தியம் கைப்பு, புளிப்பு தவிர்க்கவும். மண்டலம் கொள்ள தீரும்.

சகல இருமலுக்கு மருந்து

சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், களிப்பாக்கு, கருஞ்சீரகம், இந்துப்பு, தேத்தாம்கொட்டை, மஞ்சள், கொடிவேலி வேர், கண்டங்கத்திரி, தூதுவளை வேர், சாரணை வேர், வெலிப் பருத்தி வேர், நொச்சில் கொழுந்து, ஆடாதொடை இலை இவை சமனாகக் கொண்டு சிவக்க வறுத்துப் பொடிபண்ணி பனங்கற்கண்டு கூட்டித் தின்னவும். தீரும். பத்தியம் கைப்பு, அரைவாசி, புளி தவிர்க்கவும். பால் அரைவாசி கூட்டவும்.

நாடி வட்டணம்

47. அன்னம், கோழி, யானை, மயில் ஆகிய
-வற்றைப் போல் வாத நாடி நடக்கும்
அட்டை, ஆமை போல் பித்த நாடியும்
தவளை, பாம்பு போல் ஐய (சிலேத்தும)
நாடியும் நடை பயிலும் என்பர் புலவர்.

30.1.'92

303. அ. ## பழவாதக்கி

பழுபாகல் கிழங்கு, பினியறுணைக் கிழங்கு, பிரண்டைக் கிழங்கு, நாயுருவிவேர், சிறுதும்மட்டி வேர், பண்ணை வேர், மணத்தக்காளிவேர், சிறுகீளா வேர், சுண்டை வேர், நத்தை வேர், சித்தவரைக்கிழங்கு, நாற்கோவைக் கிழங்கு, சாட்டாறணை வேர், சீரவெங்காயம் இவை பசுவின் நெய்யால் கொதிப்பித்து காசிடை வாங்க திரும். பத்தியம் வெந்நீரும் சோறும் உண்ணவும்.

வாந்தி பிராந்திக்கு

நல்ல கஞ்சிரக்கும் மிரியாதும் வெள்ளுள்ளி இவை வெந்நீரிலரைத்துக் கொடுக்க நிற்கும். தேவிசகாயம் குருவே துணை.

பின்பக்கம் சில எழுதப்படாமல் காலியாக உள்ளது

304. அ. ## நாடிலக்ஷணம்

அன்னமே கோழி ஒணான்
மயிலென நடக்கும் வாதம்
பின்னையோ ரட்டை அதுமை
பெருகிடற் பித்த மாகும்
சொன்ன தேன் மொசியி னல்லாயி
சத்தியே தவளை பாம்பு
திண்ணிலை அய்ய மென்று
இயம்பினார் புலவ ரிந்தே.

(47)

வாத நாடி குணம்

48. வாதநாடியின் குணத்தைக் கேட்பீராக! பாம்பைப் போலவும் மயிலின் அசைவைப் போலவும் ஆணையின் அசைவைப் போலவும் மனிதரின் வாதநாடி செயல்படும் என்று தெய்வப்புலவர் கூறியுள்ளார்.

49. பித்தநாடி, தாகநாடி என்றழைக்கப்படும் தவளையைப் போலவும் குருவியைப்போலும் குரங்கினைப் போலும் நடை பயிலும் அவற்றையொத்தே செயல்களும் இருக்கும். முறைமையையும் கூறினோம். நீ பார்த்துக் கொள்வாயாக!

50. சிவனின் நாடியின் நடையைத் தெரிந்து கொள்வீராக. அன்னம், புறா போன்று நடை பயிலும் வாதநாடி, பித்தநாடி, சிலேத்துமநாடி ஆகிய மூன்றும் இவ்வாறே நடை பயிலும்.

வாதமே ஒரு நாடி
வருமென்று தன்னைக் கேளீர்
ஓதவே மாம்பு போலும்
மயிலது வசைவு போலும்
நீதிசெ ராணை போலும்
நிரந்தரு கின்னா ரத்தின்
சோதியார் சொல்ல நீநாரீ
துலங்கிளை முலையார்க் கென்றே. (48) உ

பித்தமா யொரு நாடிப்
பெரியதோர் தாக நாடி
தத்திய தவளை போலுந்
தரும்பொருட் குருவி போலும்
கத்திய கவிகள் போலும்
கருமமே பாரும் ....
சுத்தமாய் சொன்னோம் சொன்னோம்
துணிந்துநீ பாரு மென்றே. (49) ந

சிவந்திரு நாடி தன்னை
தெளிந்துகேள் மாத ராங்குச்
வண்ணிற வென்னம் போலுந்
தவந்தரு மிறாவை போலுந்
தங்கிய நடைப்ப தாகும்
வரந்துகொள் நாடி மூன்றும்
நடக்குமிப் படிகண் டாயே. (50) சு

51. பாம்பு போன்று நடைபயின்று பின் தவளையின் அசைவைப் போலானால் ஈ.சநாடி ஆனது என்று எண்ணிக் கொள்ளவும். முதலில் அன்னம் போன்று இருந்து பிறகு புறா, கோழியைப் போன்று நடை பயிலின் நாடி உத்தமமாக உள்ளது என்று கருத வேண்டும்.

52. பாம்பு போன்று நடைபயின்று தவளை-யைப் போல் மாறினால் பித்தம் அதிகமாய் விட்டது. தவளையைப் போன்று நாடி நடை பயின்று பிறகு மயில் போன்று மாறினால் பித்தநாடியும் ஈ.சநாடியும் கூடியுள்ளதென்பது பொருள்.

53. பாம்பு போன்றிருந்தது அன்னம் போன்று மாறினால், ஈ.சநாடி அணைந்துள்ளது என்று அறியவும். சிலேத்தும நாடியானது அயர்ந்துள்ள போது (பதித்திருக்கும் போது), நரம்புகள் சோர்வுற்று தாக்கத்தை யுண்டாக்கும். தூக்கத்தைப் போன்று மயங்கி இருக்கும்.

முன்னமே பாம்பு போலே
முயன்றுபின் தவளை யான
பின்னிய வீச நாடி
வந்துதென் றத்துக் கொண்டு
அன்னமே முன்ன மாகி
அசிவினாய் பிறாவு கோழி
உன்னிய நாடி யான
உத்தமம் நாடி யாமே. ந// (51)

பாம்பு போல் நடந்து பின்னை
பாகியைத் தவளை யானால்
வெம்பெரும் பித்தம் கூடி
நின்றது விளைவ தாகும்
தாம்புகல் தவளை போலே
தரித்துபின் மருசை யானால்
நாம்புகல் பித்தம் வீச
நாடியும் கூடி னாலே ந/ (52)

305.அ. இன்னமும் பாம்பு போலே
இருந்திப்பி னன்ன மான
துன்னிய வீச நாடி
வந்ததொன் றற்றுக் கொண்டு
கன்னகே வாய்ய நாடி.
நாம்பசித் திருந்த போது
மன்னிய உறக்க மாகும்
நாகம்போல் மயக்கு மன்றே. / ந (53)

54. நாடியானது பசித்திருக்கும், கண்மூடி தூங்கும் நாடி, தமைதியோடு மோகமும் கொண்டுள்ள நாடி, துடிப்புள்ள நாடி மலச்சிக்கல் ஆனதால் மயில் போன்று நடை பயிலும். அழிந்த சிறகு போன்று இருக்கும்.

55. சன்னி வாதத்தின் நாடியின் குணத்தைக் கேட்பாயாக! நிலைபெற்ற சிறகுக்கட்டானது மூஞ்சுறுவினைப் போலவும் மயிரானது பறப்பது போலவும் அமைந்து மந்தப்பட்டு ஊரும்.

56. மந்தமான பிறகு நாடியானது . . போல் நடப்பினும் பாம்பு போல் குறைந்த அசைவுடன் நடப்பினும் சன்னி வாத நாடி என்றறிக. அறிவானைப் போன்றும் வாசனையுடையதுமான தந்தலையுடையவனே. உண்மையையே யாம் கூறினோம்.

மெத்தவே பசித்த நாடி
விசிதுயிற் கின்ற நாடி
முத்தமிழ் புரிவா ரோடே
மோகத்திற் சென்ற நாடி
~~விசிதுயிற் கின்ற நாடி~~
இத்திறம் கடித்தா யோடு
மதுரை மலைசிக் கானால்
மத்திமழ் மஞ்சை யாகும்
வருந்திய சிறகு போலாம். 8//
(54)

சன்னிவா தத்த நாடி
தருகுணந் தன்னைக் கேளாய்
மன்னிய விறகு கட்டு
மறுவருந் தீறு போலும்
பன்னரு மயிர சைந்து
பறப்பது போல வாகும்
முன்னரு மந்தப் பட்டு
நடந்தது வுபாய மாமே. 9//
(55)

மந்தமே பட்ட பின்பு
மறைத்தி டெம்ப டந்தால்
வந்ததோர் பாம்பு போலே
வருந்தியே நடப்ப தானால்
முந்தவே சன்னி வாத
முயன்றுமே தரிவா னோடே
சந்தமன் குழலி னாளே (56)
சாத்தியம் சொன்னோம் சொன்னோம் 10//

57. நாடியை, ஆட்காட்டி விரல், நடுவிரல்
மோதிர விரல் கொண்டு வாத, பித்த
சிலேத்துமத்தை அறியும் போது அவை
மந்தப்பட்டால் திருத்தமடையாது.
இதுவே உண்மை. நாடியானது மேல்
நோக்கி நடந்தாலும் மரணமடைவான்.

58. நாடி தன் வகிதப்படி இன்றி மாறி
இருப்பினும் இலயிப்பின்றி பிறழ்ந்து
போனாலும் மந்தப் பட்டுப் போனாலும்
பல காலங்கள் மிகவும் மெதுவாக
குறைந்து கொண்டே தலை மேல்
நோக்கி நடப்பின் மரணம் நேரிடும்
என்று சொன்னார் சோதிடர்.

59. நெஞ்சு, உடல் வற்றி வருதல் நரம்பு
வெளியே தோன்றுமளவுக்கு வற்றி வருதல்,
நாக்கும் கண்ணும் மஞ்சளைப் போன்று
வெளுத்துப் போதல், அண்டம் வீங்குதல்,
மேலண்ணம் தேய்ந்து போதல், ஆகிய குறி
குணங்கள் உண்டாயின் இறந்து
போவது உண்மையே.

பொருந்திய விரலுக் கிட்ட
போத்தியே நாடி தன்னை
வருந்தியே மந்த பட்டால்
வார்குழல் மாதே கேளாய்
திருந்தியே வாரா தென்று
செப்பினோம் முன்மை யென்று
தருமைரு மேலே நோக்கி
வருகிறுஞ் சாவு தானே. 11 (57)

306.அ.
நாடிதான் புரண்ட தானே
நன்றென வாரத் தாலும்
கூடியே மந்த பட்டால்
குவிமுலை மாதே கேளாய்
நீடியே நின்று நின்று
நித்தமுந் தலைமேல் நோக்கி
வாடிய சோதி சொன்னார்
வாதனை மரண மென்றே. 12 (58)

நெஞ்சுமே உடலும் வத்தி நீர்
நிலைமெற நரம்பு தொண்டில்
பஞ்சுபோல் நாவும் கண்ணும்
பாண்டமும் வெளுப்ப தாகில்
கொஞ்சியை வண்டம் வீங்கி
குழுகிடா மலமுந் தீயிற்
துஞ்சுவ தன்மை யென்று
சொல்லுவ தன்மை யாமே. 13 (59)

60. உடல் குளிர்ந்து போதல் கண்ணின் பார்வை ஒரு குறிப்பிட்ட இடத்திலேயே நிற்றல், குத்திட்டு நோக்கல் நாடி ஒன்றோடொன்று மாறுபட்டு நிற்றல் ஆகிய குறிகுணங்கள் ஏற்படும் பொழுது மூன்று அல்லது ஐந்து நாட்களில் மரணம் நிகழும் என்பர்.

---

61. நாடி பார்க்கும் போது புருவம், உச்சி, கழுத்து, நெஞ்சு, கணைக்கால், ஆண்களின் விதையுறுப்பு, முழங்கால், கால் விரல்கள், கைக்குழி ஆகிய இடங்களில் பார்ப்பது உபயோகமானது.

62. மேலுள்ள இடங்கள் மட்டுமன்றி உள்ளங்கை, மூக்கு, மிரட்சியைத் தருகின்ற கண், காற்பிரண்டை, கழுத்து ஆகிய இடங்களில் இரண்டு விரல்களும் நாசியில் ஒரு விரலும் உரியவை என்பார் மேலோர்.

யூகிமுனி:-

உடம்புதான் இருந்தா லப்போ
அடையகண் வட்ட மிட்டால்
இடந்தரு நாடி தானு
மிருந்திடம் விட்டா லப்போ
படர்ந்தோர் நாடி சென்றால்
பார்த்தனி லென்னா லாகும்.
மடிந்தநா ளஞ்சில் மூன்றில்
வார்மதிப் பென்று சொல்லே. 14//
(60)

நாடிதான் பார்க்கும் வாறு
நலம்பிறை புருவ மூச்சு
கூடிய ~~நெஞ்சு~~ கண்டம் நெஞ்சு
இறைவிலா பரண்டை யண்டம்
மூடிய முழங்கால் லார்க்கு
முடைகழல் விரலுங் கையில்
நீடிகைக் குதியில் நாடி
பார்ப்பது நிருப மாமே.
15// (61)

இத்த லம்பா றாகி
லியலுனா லிடமே பார்க்கில்
வைத்த லங்கை மூக்கு
மிரண்டுகண் காற்பி ரண்டை
சித்தசேர் கண்டந் தன்னில்
விரலிரண் டென்னா மூடி
வித்தக னாசி லென்று
விரலை விதித்தார் மேலோர். 16//
(62)

63. ஆட்காட்டிவிரல், நடுவிரல், மோதிரவிரல் ஆகிய மூன்று விரலை வைத்து நாடி பார்க்கும் போது வாதம், பித்தம் இவை இரண்டிலும் துடிப்பு ஏற்படுமாயின் உடன் மரணம் நிகழும் என்று அறிந்து கொள்ளவும்.

64. நாடிகள் புரண்டதன் பின்னரும் நீங்கள் தெளிவுடன் எழுந்து நடப்பீரென்றால் மரணம் இரண்டரைநாளில் ஏற்படும் என்பது தெரியும். வேகமாக ஆட்டல் கண்டாலாயின் நாட்கள் எட்டாகும் என்பதைத் தெளிந்து கொள்வீராக!

65. மூன்று விரல்களில் பெருவிரலின் முன் பக்கம் நடுவிரலில் தோன்றுவது பித்தம். அதற்கு இடப்பக்கம் சிலேத்துமத்தைக் குறிக்கும். பித்தம் அமைதியாய் நடையாலும் ஐயமும் வாதமும் ஒன்றுடன் ஒன்று கலக்கும். அதனால் வாழ்க்கை துன்பத்துடன் அமையும்.

307 அ.

கண்டவிற் றுடிப்பு ~~மூத்த~~ மூன்று
கடியடு றிநைவை யூன்றில்
விண்டலம் மணிலம் பித்த
மேவிய நாடி போகில்வர்
ஒண்டொடி மாதே கேளாய்
உயர்ந்ததோர் துடிப்புண் டாகில்
மண்டுநைய எழுந்து பாயில்
மரணமென் றறிந்து கொள்ளே. 17//
(63)

புரண்டது ரெண்டு மேலே
புரிந்துகீர் நடக்கு மாகில்
விரண்டறை நாள தென்று
இங்குனி மரண மெங்க
அருண்டமின் குழலி னாளே
அத்தினா லெட்ட தாகும்
திரண்ட நாள் வந்த தென்று
சிக்கென தெளிந்துக் கொள்ளே. 18//
(64)

மூன்று விரலார் பெருவிரலிக்கீழ்
முன்கை தனிலே முன் பார்கில்
தோன்றும் பித்தம் நடுவெதாம்
துலையாச சேத்தும மிடத்தென்ப
ஆன்ற பித்த மேற்தோடு
மேயம் வாதம் சந்திக்கும்
கான்ற வையம் வக்கிரமாய்
கருகி யோடும் கண்டறோ. 19
(65)

66. நடக்கும் பொழுதும் பசிக்கும் பொழுதும் அதிகமாகச் சாப்பிடும் பொழுதும் பெண்களுடன் உறவு கொண்டிருக்கும் பொழுதும் ஆடவர்தம் வலக்கையைப் பிடித்து நாடி பார்க்க பொருந்தாதிருக்கும். பெண்களுக்கு மேற்கூறிய நிகழ்வின் போது இடக்கை பார்க்க பொருந்தாமையைக் காட்டும்.

67. ~~[illegible]~~ எறும்பினின்று எழும் புழுவினைப் போல் வலது நாடியானது தன்னுடைய இயல்பினைப் போலல்லாது வேகமாகும், இளமை மிக்க பெண்களுடன் சேர்ந்து வந்தால் மற்றோருக்கும் விளம்புவாராக!

நடக்கில் பசிக்கில் மிகவுண்ணில்
நங்கை மார்கள் கூடக்கூடிக்
கிடக்கிற கைகால் மிகவுணில்
கோணா ணாடி தொன்றாவர்
மடக்கை பொன்னுக் கறந்தனக்கு
அமலா வலக்கை தனைபார்க்கில்
நடக்கை உடைய தனையாரே
தப்பா திவைகள் தப்பாதே. (66) 20/

பெருகுசெ ரங்கி தன்னில்
பிறட்டாறு புகுவே போல்
திமிறவே வலது நாடி
நின்றது வேக மாகிற்
குருகுசேர் மடவா ளோடே
கூடிநீ வந்தா யென்ன
வெருவுறு தோகை கல்லாய்
விளம்புநீ மண்ணு ளோர்க்கே. (67) 21/

308.அ. பின்பக்க ஒளை எழுதப்பட வில்லை.

309.அ. தூதுவளை லேகியம்

தூதுவளை வேர் பூ.அ, சீரகம் பு.க, திப்பலி பு.உ, பறங்கிப்பட்டை பு.க, அமுக்கிறாகிழங்கு பு.க, நன்னாரி வேர் பு.க, கண்டங்கத்திரி வேர் பு.க, கடுக்காய் பு.உ, மிளகு பு.உ, ஏலக்காய் பு.வ, தாளிசபத்திரி பு.வ இது சூரணம் பண்ணி பசுவின்நெய்

(*) கண்டங்கத்தரி வேர், சின்னி வேர், சிறுபுள்ளடி வேர்,
வில்வ வேர், ~~பெருங்குமிழ் வேர்~~, ~~சிற்றாமுட்டி~~
வேர், ~~பேராமுட்டி வேர்~~

முசுமுசுக்கை சாறு, ஆடாதோடைச் சாறு, இஞ்சிச்சாறு,
வகைக்கு சேர் ர, நெய்யால் விட்டு காய்ச்சி தேற்றான்
விதை புக, அரைத்துப் போட்டு சர்க்கரை பல ௧, தூளாக்கி
போட்டு தேன்விட்டு கிண்டி லேகியமாக்கி ~~கொட்டை~~
5 முதல் 10 நாள்
~~பாக்களவு~~ இரண்டு நேரமாய் கொள்ளவும். இருமல்,
க்ஷயம், ~~[illegible]~~ வறட்சி, அக்கினி மாந்தம், சுரம் இவை
தீரும்.

ரேணுகா வரதன் தயிலம்

மூங்கிலுப்பு பு ௧, பேராமுட்டி பல ௧, இரண்டும்
சிதைத்துப்போட்டு நுயஉ படி தண்ணீர் விட்டு எட்டிலொன்றாய்
காய்ச்சி இறுத்து கொண்டு இதில் நல்லெண்ணெய் சுபடி
விட்டு இமிளம் வேர், முன்னை வேர், கொடிவேலிவேர்,
முள்ளிவேர், ~~X~~ மளகரணை வேர், சிற்றா மணக்கன் வேர்,
பேராமணக்கன் வேர், நன்னாரி வேர், தண்ணீர்விட்டான்
கிழங்கு, நிலைப்பனைக் கிழங்கு, சடைத்தன் குதம்பை,
சார்த்தணை, இண்டம் வேர், மருள்கிழங்கு, விளாம்பிச்ச
சன், பாலை வேர், பாதிரிவேர், இவை வகை ஒன்றுக்கு
பு ௩, ~~[illegible]~~ [illegible] இடித்து பத்துபடி தண்ணீர் விட்டு
இரண்டு படியாக காய்ச்சி முன் கஷாயத்தில் விட்டு
இனி கடைச்சரக்கு வகை:- வாய்விளங்கம், திரிகடுகு,
இலவங்கப்பூ, மஞ்சாடி, குங்கிலியம், இந்துப்பு,
சதைகுப்பை, அகில்கட்டை, சந்தனம், கோரோசனை,

310. அ. ஓமம், கிராம்பு, சடாமாஞ்சி, திப்பிலிமூலம், அதிமதுரம், சிறுதேக்கு, சீரகம், கருஞ்சீரகம், அரைத்தை, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய், இவை வகைக்கு துக்காணி எடை அரைத்து பசுவின் பாலில் அரைத்துக் கரைத்து சூடவிட்டு எரித்து பதத்தில் வடித்துக் கொண்டு. உள்ளுக்கு கொள்ள மேலுக்கும் பூசிவர துவளையிட தீரும் வியாதி. விறைவாதம், கைவாதம், இருகால் வாதம், சப்பாணி, சன்னி வாதம், ஒருகை வாய்வு சகல வாதமுந் தீரும்.

வெள்ளி பற்பம்

310. ஆ வெள்ளி தகடு தட்டி கள்ச்சி நாலுதரம் நல்லெண்ணெய் மோர், காடி, கோசலம், கொள்ளுசாறு தோய்க்க சுத்தியாம்.

சுத்தியான தகடு பத்திலொன்று தாளகமரைத்து ஏயத்தகட்டுக்கு பூசி, பூவரசம்பட்டை கிஷாயத்தில் பூவுடனரைத்து கள்ச்சி மூசையிலிட்டு குக்குடபுடம் வைத்து பத்திலொன்று தாளகமரைத்து நாலாமிரித்து தகட்டில் பூசி நாலுபுடம் போட பற்பமாம்.

வெள்ளிய தகடு வைச்சின கள்ச்சிமுன்பு போல் கொள்ளு கிஷாயம் காடி எண்ணெய் கோசலம் தோய்க்க சுத்தி பத்துக்கொன்று வெள்ளி பற்பம் வங்க பற்பம், பருத்திக் கொட்டை, நெய் நறுக்கி

கோணிப்பட்டு ஒண்ணரை சாணளவு அகலங்கொண்டு
வந்து நறுக்கின பருத்திக் கொட்டையை பரப்பி
வெள்ளியம் இருபது கழஞ்சி, புளியிலைதளம், தகடு
தட்டி அதின் மேல்வைத்து அதின்மேல் பருத்திகொட்டை
பரப்பி திரியாகத் திரட்டி சீக்கென கட்டி திரியை
இரண்டு புறத்திலும் கொளுத்தி விராட்டி அடுக்கி
புடம்போட பற்பமாம்.

பவள பற்பம்

311. அ.
பவழம் பழச்சாற்றில் சுத்தி பண்ணி எருக்கம் பால்
வார்த்து மூன்றுநாளரைத்து இலையால் வைத்து புடம்
போட பற்பமாம்.

முத்து சுத்திவகை நிண்ணயம்:—

முத்துசங்கம் பழச்சாற்றில் பூவந்திபழச்சாற்றில்
இளநீரில் மூன்றுநாள் ஊறவெடுத்து முள்ளிபழச்
சாற்றிலரைத்து மூசையில் கெசபுடம்போட பற்பமாம்.

மனோசிலை நறுக்கி ஒரு சீலையில் முடிந்து
நாய்மூத்திரத்தில் (3 மணி நேரம்) ஒருசாமம், கோசலத்தில் இருசாமம்
வேகவைக்க சுத்தியாம்.

சாதிலிங்கம் முலைப்பாலிலொருநாள்
பழச்சாற்றிலொருநாள் ஊறவைத்து நெருப்புமேல்
சுத்தியாகும். காயம் வெற்றிலைச் சாற்றில் சாமம்
ஊற சுத்தி. சுத்திசவட்சாரம் காடிகோசலத்தில்
மூன்றுநாளைக்கு ஊற சுத்தியாகும்.

நாணற்று

~~1.92~~

312.அ. சுத்தி:- எவ்வாகசாரம், கழுநீரில் ~~அரைத்து~~
உலர்த்த சுத்தி. எட்டிக்கொட்டை, குப்பைக்கீரைச்
சாற்றில் ஒருசாமம் வேகவைக்க சுத்தியாகும்.

இந்துப்பு காடி கோசலத்தில் நனைத்து உலர்த்த
சுத்தியாம். வெடியுப்பு பசுவின் கோமியம் ~~த்தில்~~ பழஞ்சாற்றில்
நனைத்துலர்த்த சுத்தியாம்.

வளையலுப்பு மோர் கோசலத்தில் நனைத்து
எலுமிச்சை ~~புளிச்சி~~லையில் சுத்தியாம். அரளிவிதை நல்ல உப்பு
வறுக்க சுத்தியாம்.

குங்கிலியம் திரிபலை வேகசுத்தி. உமத்தம்
விதை பழச் ~~சாற்றி~~ சாற்றிலூற சுத்தியாம். சீரகம் இருவகையும்
வறுக்க சுத்தி.

சுண்ணாம்பு நீரில் ஓமம் ஒருசாமம் ஊற
சுத்தியாம். மிளகு மூன்று நாழிகை மோரில் ஊற சுத்தி.
3 மணி நேரம்
சுக்கு சீவி சுண்ணாம்பு பூசி ஒருசாமம் உலர்த்தி கழுவ
3 மணி நேரம்
சுத்தி. திப்பிலி, கொடிவேலி கஷாயத்திலூற ஒருசாமம்
ஊற சுத்தி.

தாம்பர சுத்தி:- செம்பு தகடு தட்டி சிவக்க காய்ச்சி
காடியிலும், கோமியத்திலும் மூன்றுதரம் தோய்த்து பழச்
~~சாற்றில்~~ சாற்றில் கெந்தகத்தை அரைத்து தகட்டில் பூசி பத்து புடம்
போடவும்.

அரைப்பொடி சுத்தி:- அரைப்பொடி எண்ணெயில்
காயப் போட்டு மூன்று பங்கு சாதிலிங்கம் ஒருபங்கு கோசலத்
தில் அரைத்து புடம் மூன்று போட்டு நாவல்பட்டை நீர்ப்புடங்
கள் பத்து போடவும்.

காந்தம் காடி மோர், பழச்சாறு இதில் இரண்டு நாழிகை ஊற சுத்தி. கெந்தகம் நாலிலொன்று எருக்கம்பால், பூவரசம் பட்டை ரசம் போட்டு குக்குடபுடம் மூன்று தரம் போட சுத்தி.

313. அ. **அப்பிரக சுத்தி**

அப்பிரகம், கறுத்த அப்பிரகந்தன்னை ஓட்டில் காய்ச்சி வெள்ளை பசுவின் பாலில் தோய்த்து காடியில் இரண்டு நாழிகை ஊறவைத்து பின்பு பழஞ்சாதத்தில் இரண்டுதினம் ஊறவைத்து தானியத்தில் பத்துநாள் ஊறவைத்து இனி காடி தெளித்திடித்து புதுதுணியில் தாவி நெல்லு போட்டு மெத்திட்டு கானாவே தேய்க்க பொடி உதிர்ந்திடும். உதிர்ந்த பொடிஎடுத்து எருக்கம்பாலில் அரைத்து சட்டியில் வைத்து மேல்மூடி சீலைமண் செய்து பத்துபுடம் போட்டு எடுத்து ஆலம்விழுது கஷாயத்தில் ஐம்பது புடம் போட எடுத்து அந்த செந்தூரம் எடுத்து இரும்பு சட்டியில் பாலவார்த்து ஒருநாளூற வைக்க பாகமாம். பின்பு நிழலுலர்த்தி வைத்து கொள்ளவும்.

இரச சுத்தி

செங்கல் பொடி ஒருபிடி சித்திரமூலம், மஞ்சள் தேவதாரம் சந்தணம், கையாந்தகரை, கோவை வெற்றிலை, கிலைப்பனை, சார்வனை, பூவரசம் பட்டை, முருங்கைவேர், பாகைஇலை, அத்திஆல் கொன்றை வேம்பு பட்டை இதில் மத்திக்க சுத்தி.

கெந்தக சுத்தி:- இரண்டு படி காட்டாமணக்கும் பாலில் காய இந்தவிதம் மூன்றுதரம் காய்ச்ச சுத்தி பாலில் சுத்தி.
இசிவெட்டி சட்டி வைத்து ஆட்டுபால் விட்டு மேல்வடிகட்டி
கெந்தகத்தைப் பரப்பி மூடி எரியட சுத்தி.

வாளம் காடியில் பத்து நாள் ஊற சுத்தி.
சாணிபாலில் ~~ஊற~~ வேகவைத்து நஞ்சு போக்கி அரைக்கீரை
~~சாற்றில்~~ சாற்றில் வேக சுத்தி.

314.அ. கெவுரி பாஷாணம் சுத்தி:- பாஷாணம் நறுக்கி
சீலையில் கட்டி ~~அஞ்சு~~ ஐந்து நாள் பசும்பாலில் ஊற வைத்து பின்பு
அரைக்கீரை ~~சாத்தில்~~ சாற்றில் ~~அஞ்சு~~ ஐந்து நாள் ஊற சுத்தி.

தொட்டி பாஷாணம்
தொட்டி அரிதார சுத்தி:- டோளாந்திரமாக கட்டி ஒரு சாமம் வேக
கோசலத்தில் கற்றாழையில் வேகவைக்க சுத்தி.
வைக்க சுத்தி. ~~கத்தாழையில்~~

அரிதாரம் சீலையில் தோளாந்திர
அரிதார சுத்தி:- கோசலத்தி
மாகக் கட்டி கற்றாழைச் சாற்றில் ஒருநாள் பழம் காடியா
லொருநாள் பூசணி தண்ணீரில் ஒருநாள்
லொருநாள் வேக சுத்தி.

இரத்த பித்தத்துக்கு:- கடுக்காய் வராகன் எடை வ-௨, அதிமதுரம்
வ-௧, சுக்கு வ-௫, சீரகம் வ-௧, ஏலம் வ-௧, எலும்
பிச்சன் வேர் ஒருபிடி சந்தனம் பாக்களவு தென்னம்பாளை
ஒருபிடி மாதளம் கொழுந்து ஒரு பிடி ஆவாரங்கொழுந்து
பிடி செவ்வாழை கொழுந்து பிடி ஆடாதோடை — பிடி

தண்ணீர்விட்டான் கிழங்கு, முத்தக்காசு, அதுக்கும் பாதி வெள்ளை சர்க்கரை கூட்டி தேனில் நெய்யில் கொள்ள தீரும் வியாதி இரத்த பித்தம், கைகாலெரிவு, எலும்புருக்கி, உழலைநோய், உடம்புருக்கி, மேகசுரம், தாதுவிர்த்தனை, இருபதுவகை மேகம், பிரமியம், மூத்திரக்கிரிச்சி, மூத்திர தோஷம் இவைகள் தீரும்.

(ஒரு எண் மானி உள்ளது)

325-அ. பிள்ளை பெற மாட்டாதாற்கு

வெலிப்பருத்தி பிரண்டை வளையமாக்கி சுத்தி இரண்டு கால் நடுவில் போட பிள்ளை விழும்.

குன்மத்துக்கு:-

நெருஞ்சிக் கிழங்கு, சாத்தாவாரிக்கிழங்கு, கருணைக் கிழங்கு, மூன்று வகையும் சிறுக சிறுக நறுக்கி முக்கிழங்கு பொடி முன்னூறு கழஞ்சு, கற்றாழை, எருக்கிலை சதுரக்கள்ளி, நொச்சியிலை, கையாந்தகரை, சங்கிலை, வெலிப்பருத்தி, உப்பிலை, இந்த வகையெல்லாம் வெவ்வொன்று இருணி கூட்டி முருங் கெல்லாம் ஒரு பானையிலிட்டு முருங்கையிலைச் சாறு இருணி வெற்றிலை சாறு இருணி இரண்டு வகை சாறும் பானையிலிட்டு சீலைமண் செய்து எரிவிட கரியாம். அந்த கரியை கோமியத்தில் கரைத்து சீலையில் வடியிட்டு சுண்ட காய்ச்சியதில் கடுக்காய் தான்றிக்காய், சாதிக்காய், திரிகடுகு,

சவுக்காரம், கருஞ்சீரகம், இந்துப்பு, சீனிக்காரம்,
வாசுகுவை, காயம், கடுகு, பொட்டிலுப்பு, இவை சரி
நிறையாகக் கூட்டிக் கலந்து வறுத்து ஆறிக்க பொடி
செய்து முன்பொடி இரண்டு கூறும் இந்துப் பொடி
ஒரு கூறும் ஆக மோருக்கு கழஞ்சியும் கூட்டிக்
கொள்ளவும். பத்தியம் முருங்கைக்காயும், இலையும்
வெள்ளாட்டு உப்பு கண்டமும், தூதுவளை பருப்பும்
கூட்டவும். கைப்பு, புளிப்பு தவிர்க்கவும். 18-
குன்மம் தீரும்.

எரும்புருக்கிக்கு :-

பூவரசம் காய், பூவரசிலை, பாவட்டம் வேர், இது
326-அ. வெள்ளாடு சமன் கூட்டி தண்ணீர் விட்டு காய்ச்சி
பிசைந்து இறக்கி இருத்துக் கொண்டு நெய் பால்விட
அதிமதுரம், ஒரு பலம் அரைத்து காய்ச்சி வைத்துக்
கொண்டு ஒரு கழஞ்சி கொள்ளவும். தீரும்.

எண்ணெய் :-

பொன்னாங் கண்ணி வேர், எலும்பிச்சங் காய் ~~[illegible]~~ அமை
சிறுபுள்ளடி வேர் பாக்களவு பொன்னாங் கண்ணி சாறு
கரிப்பயிற்றுச் சாறு, பசுவின் பால், இளநீர், ஏலமில
வங்கம், அதிமதுரம், செம்புக்கீர், கோஷ்டம்,
சீரகம், கருஞ்சீரகம், செண்பகப்பூ, மிளகு,
ஒரொன்று கழஞ்சு கூட்டி நல்ல எண்ணெய்
கூட்டி எரித்து தேய்க்கவும். சிறு பயிறிட்டு
தேய்க்கவும்.

௧ சீறும் அழைக்கும். நாள் யாவும் உன்னை
அறியாய் உண்டாம். யாவும் அவர்க்கு
ஏது உண்டாம். இவன்தனையின் விஷங்கு
இருந்தும் மறைந்தாலும் போம். தீயது நாம்
உன்னை

வேப்பங் கற்பம்

வேப்பம் பூ பிடி, பிஞ்சு பிடி, வேப்பம் பழம் தோல் பிடி இது நாலும் சமன் கூட்டி நூறு வருஷத்து வேப்பம் பட்டை உரல் போட்டு மூன்று நாள் ஊறின பின்பு இடித்து காய்ச்சி குழம்பாய் இறக்கி இந்த நாலு தினையும் போட்டுக் கிண்டி வைத்துக் கொண்டு இளநீரில் கொள்ள நரை மாறும். பகலில் நட்சத்திரம் தெரியும். ஐய நாள் தின்ன வெயற்ற புடி மாறும். ஆறு நாள் தின்ன இரத்த சன்னி தீரும். ஏழு நாள் தின்ன மூலம் மாறும். பனிரெண்டு நாள் விராசிக தின்ன பித்த காசி தீரும்.

~~327. அ. சோகை, காமாலைக்கி:- மிளகு உழக்கு சார்வார்த்தரைத்து ஒரு புன்னைக் காயளவு தெவட்டி தின உள்ளி ஆழாக்கு எண்ணெ தீரும்.~~

~~விப்புருதிக்கி:- கழற்கொடி வேர், துவரை வேர், அவரி வேர், ஆர்க்க மொடனி வேர், ... ஆக கூட்டி நல்லெண்ணையில் எரித்து எருக செய்து~~

327 அ. சோகை, காமாலைக்கி:- மிளகு, உழக்கு, உள்ளி, ஆழாக்கு, அர்க்க பொடி செய்து ஆழாக்கு பிணாக்கு ஒரு பிடி கையாந்தகரை அரை வார்த்தரைத்து ஒரு புன்னைக்காயளவு தெவட்டில் ஏரப்பு தின்ன தீரும்.

327 துவிப்புருதிக்கி:-

கழக்கொடிவேர், துவரைவேர், ஏலம், முள்ளிவேர்,
அவுரிவேர், ஆக்கூட்டி நல்லெண்ணெயில் எரித்து
ஒரு காசளவு உள்ளுக்கு கொள்ளவும். தீவிடும்.
இரத்தமாக்கறைந்து போம். கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்.
இலிகியம் திரிபலை ~~சத்தில்~~ சாற்றில் வேக சத்தி.

பஞ்சவச்சிர பராங்கியாதி லேகியம்:-

செம்பு காவியம் பலம் ௪, பறங்கிப்பட்டை சேர் ௪,
கண்டு பறங்கி பூ ௪, சுக்கு பூ ௪, மிளகு பூ ௪,
திப்பிலி பூ ௪, சீரகம் துட்டைடை ௪, மிளகு பூ ௪,
திப்பிலி பூ ௪ கொத்தமல்லி பூ ௪, வாய்விளங்கம்
பூ ௪, சாகிறா? பூ ௪, நீர்முள்ளிவிதை, தம்பராஷ்டகம்,
விசகோல் விதை, இலவங்கபட்டை, தக்கோலம்,
இலவங்க பத்திரி, சதகுப்பை, வெப்பாலரிசி, விளா
மரிசி, கொத்தமரிசி, கஸ்தூரி மஞ்சள், கொட்டி
சாந்து, விளாம்பிச்சன், கடுகு ரோகணி, வச்சிர
தந்தி வகைக்கு துட்டைடை ௪, தான்றிக்காய் பூ அ,
கடுக்காய் பூ அ, நெல்லிக்காய் பூ அ, கச்சூரம்
துட்டைடை அ, முந்திரிபழம் துட்டைடை அ,
ஏலம் துட்டைடை அ, கிராம்பு துட்டைடை க,
சங்கு பற்பம் துட்டைடை க, பவளபற்பம்
துட்டைடை க, நிலாவரை துட்டைடை க,
ஆவாரை மொசுக்கு பூ க, முடக்கால், முக்காவேளை,
சிவனார் வேம்பு,x சிலப்பனை, தூதுவளை, தேற்றாம்
வேர்,

(X) நாகேசரம், கருஞ்சீரகம், சயிந்தலவணம், சிவனார் வேம்பு, கோர்வளம், யானைகடுக்காய், செவியம்,
தேவதாரம். மரமஞ்சள், திப்பிலிமூலம், சீரகம், சிறுதேக்கு, யாம்பூரல், ஆனைதிப்பிலி, வால்மிளகு,
அதிவிடையம், அன்னபேதி, காந்தபேதி, நத்தைசூரி, குத்திரபாசி, கோஷ்டம், அக்கரகாரம்,
உருத்திரவிதை, மாசிக்காய்பேதி, எலுமிச்சைதாரம், வகைக்கு துட்டைடை ௪, சாதிக்காய், சாதிபத்திரி,
கோரோசனை, தாளிசபத்திரி துட்டைடை ௨. லவங்கம் ...௨,

பாதிரிவேர், நொச்சிவேர், நாமபாலை, வில்வவேர்,
மிளகரணை, வெள்ளறுகு, மாவிலங்கன், சங்கன்
குப்பி, காட்டு முருங்கை, கொடிவேலி, திக்கிலி
வேர், பெருங்கிழங்கு, வருமிடி, கொங்கை,
முன்னு சண்டை, சூரிய காந்தி, சந்திர காந்தி,
329. அ. சிற்றாமுட்டி, பேராமுட்டி, தண்ணீர்விட்டான்,
காந்தாரி, வல்லாரை, மூலம், குட்டிக்கால் வேர்,
ஆற்று முள்ளி, போச்சமஞ்சபட்டை? சோமிவேர்,
காட்டு எலும்பிச்சன்வேர், பிரப்பங்கிழங்கு, இஞ்சி,
வெல்லம், தேன் திரு வெல்லாம் கூட்டி லேகியம் பண்ணி
கடுக்காய் மதியானி அளவு கொள்ளவும். இதுக்கு தீரும்
ஐயாதி வாதம், பண்பத்து நாது, அக்கினி மாந்தம்,
மேமந்தம், மேககட்டு, மேக சூலை, கபால சூலை,
பக்க சூலை, மேல்கவுசை, பெருவயறு, சன்னி பாதம்,
மந்தகாசம், சயித்திய இருமல், அன்ன திரேகம்,
அதிசாரம், விஷபாதம், காமாலை, காலெரிவு, கிராந்தி
புண், அரையாப்பு, அண்ட வாதம், எலும்புருக்கி,
மேகமுருக்கி, சோகை, ரத்தக்கட்டு, பாஷாண கட்டு,
பிடிவாதம், சொறிவாதம், குடல்வாதம், கெற்ப்பப் பிள்ளை
தண்டு பிளவை, நெஞ்சு பிளவை, கொளை பிளவை,
பெரும்பாடு, காச்சல், கண்ணெரிவு, காலெரிவு,
மூத்திர வகை கிராணி பித்தம், சேத்துமம், நஞ்சு
தீரும். மை கண்டது. சிப நமஸ்த்து 10)

— ரூ. 3

அகத்தியர் சூத்திரம்

(68) 1. செம்புப்பற்பத்தைச் செய்யும் முறை கீழே கொடுக்கப்பட்டுள்ளது. 490கி தாமிரத்தைக் குகையினில் வைத்து, அதன் மீது 35கி முட்டையையும் 70கி நவச்சாரத்தையும் கல்வத்தில் போட்டு தூளாக்கிக் காரத்தையும் சேர்க்க.

(69) 2. தாமிரத்தின் மீது அப்பொடியைத் தூவியதால் செம்பினுடைய ஊறல் நீங்கும். வங்கத்தை உருக்கி அதை சுட்டு வைத்த தாமிரத்தில் ஊற்றி விட களங்கம் (அழுக்கு) நீங்கும். குகையில் 35கி அளவு வைக்க. அண்ணத்தில் களங்கத்தை வைத்து 15 முறை நீற்றுக் கொள்ளவும்.

(70) 3. நீற்றியதை 35கி எடுக்க. காரத்தை 9கி எடுத்து எலுமிச்சம்பழச்சாற்றால் அரைத்து 3மி.கி அளவுள்ள உருண்டையாகச் செய்து அதில் மேற்சொன்ன நீற்றின செம்பைக் கொடுக்க வெங்கலம் போலாகும். அதில் 17½ கி அளவெடுத்து கல்வத்தில் போட்டு பொடித்துக் கொள்வாயாக!

340. அ. ## அகஸ்த்தியர் சூஸ்த்திரம்

பாரப்பா செம்பினுட வெள்ளை கேளும்
பரிவான தாம்பரத்தைக் கையில் வைத்து
சேரப்பா பதினாசு பலமே போட்டு
செந்தூர போதினிலே மருந்து கேளுங்
காரப்பா அண்டமது பலமொன்று கட்டு
நவச்சார மதில்றெண்டு பலமே போட்டு
சீரப்பா கல்வத்தில் தானா தாக்கி
சிறந்ததோர் பொடிமேலே காரம் போடே (68)

போட்டுதனை பொடித்துநன்றாய் பொடியைத்தூவ
புகழான செம்பினுட உஙால் போகும்
தாட்டிகமாய் பின்னெருத்து வங்கம் குத்தி
தனியோட்டி தாதிவிட களங்கம் போகும்
மாட்டிதனை கையிலொரு பலம்போ டப்பா
அசுக்குகொள்ளலாம் விட்டே ஒருகும் போது
நாட்டியதோர் அண்ணத்தில் தாளத்தை வைத்து
நலமாக பதினஞ்சு தரமே நித்தே. (69)

நித்தியமின் வாங்கியதை எடுத்துக் கொண்டு
நிறுத்திடுவாய் பலமொன்று காரம் காலதான்
போத்தியதை பழஞ்சாத்த லரைத்துக் கொண்டு
புகளாக பயிறளவு உருண்டை செய்து
நித்தியமதைக் கொடுக்கையாலே சத்தே வாங்கும்
நேரான செம்பதுதான் வெங்கலம் போலாகும்
மாதுதையிலே அரைபலந்தான் கல்வத்தி லிட்டு (70)
ஆட்டியந்த பொடித்திடுவாய் தானாங் கனே.

(71) 4. வெங்கலத்தின் அளவுக்குச் சமமாக
சவ்வீரத்தையும் சேர்க்க. இவை இரண்டை
-யும் சேர்த்து மூன்று மணி நேரம் அரைக்க
மெழுகாகும். 17½கி சூதம் கூடன்
இவற்றையும் சேர்த்தரைத்து அதனுடன் 4கி
வெள்ளைப் பாடாணத்தையும் சேர்த்து
அரைத்த விழுதை வில்லைகளாய்ச் செய்க.

(72) 5. அவற்றை உலர்த்தி குகைக்குள்ளே வைத்து
மேல்மூடி சீலைமண் செய்து 1000
வறட்டியில் புடம் போட வெங்கலமானது
பற்பமாகும். இப்பற்பத்தினால் மேகவகை
-களும் இட்டம் பதினெட்டும், வாயுக்கள்,
பித்தம், பலவகையும் தீரும்.

(73) 6. இப்பற்பத்திற்கேற்ற அனுபானங்களை
நோய்க்கேற்றவாறு அறிந்து கொடுத்தல்.
நோய் விலகும். இதற்கு நிகர் இதுவே. இறைவேது முல்லை,
பனையும் கருப்பட்டியையும் சேர்த்து
காய்ச்சி சோறு சாப்பிட்ட பிறகு
குடிக்கவும். இது செம்புப் பற்பத்திற்கேற்ற
மருந்து. நாகவெள்ளை செய்யும் முறை
-யைக் கேட்பீராக!

341. அ. காணப்பா திந்திடைக்கி சைவீரம் போடு
கருகிழை சாமமொன் றதிலரைத்தா யானால்
தோணப்பா சலமுண்டாம் மெழுகு போலாங்
துடியான ஆதமறை பலமே போடு
ஆணப்பா செம்பிடைக்குச்சூடன் போடு
அரைக்குமே போதினில்வெள்ளை யுரைக்கால் போடு
நிணப்பா சூடனிடை உரமும் போடு
நிறைக்கவே அரைத்துநன்றாய் வில்லை கட்டே. (71) 4//

வில்லைதனை ஒல்த்திடுமேபின் குகைக்குள்ளே வைத்து
மேல்மூடி சீலைசெய்து கெசபுடத்தில்
வெள்ளை யாகும் வாங்கிநின்ற
வெள்ளையப்பா
தாம்பரத்தில்
வில்லையது பதமாய் வைத்துக் கொண்டால்
மேகமது பதினெட்டும் ஓட்டுந் தீரும்.
வில்லையானால் வாயுவெல்லாம் மெரிந்து போகும்
விளங்கியதோர் பித்தமெல்லாம் பறந்து போமே. (72) 5//

பறந்துபோ மறுபான மறிந்து போடு
பருவத்தில் குறையொன்று மில்லை யப்பா
பிறந்துபோம் வியாதியெல்லாம் மென்னா சொல்வேன்
வருத்திட செம்பிலுட வெள்ளை வேகம்
காய்ந்தபால் சேர்த்துமேல் குடிக்கச் சொல்லும்
கருப்பட்டி பொடிபோட்டங்கே காச்சி கொண்டு
அரந்தானே தற்மத்துக் காகச் சொன்னேன்
அப்பனே நாகத்தின் வெள்ளை கேளேன் 6//
(73)

நாகவெள்ளை :-

74. சுண்ணத்துடன் சாரத்தையும் சேர்த்து
சிறுநீர் ஊற்றி அரைத்து தண்ணீராக்கிக்
கொள்ளவும். 140கி உள்ள இதனை
நாகத்தினை உருக்கிச் சாய்ப்பாயாக.
இவ்வாறே இருபது முறை செய்ய நாகத்தின்
ஊறல் நீங்கும். பிறகு அதனை எடுத்து
எலுமிச்சம் பழச்சாற்றினால் சாய்க்க நாகம்
சுத்தியாகும்.

சரி 16/4/04

75. பத்துமுறை அவ்வாறே சாய்த்து குகையிலிட்டு
உருக்கிக் கொள்வாய். 10கி சுத்தி செய்யப்பட்ட
நாகம் 1கி வெண்காரம் எடுத்து எலுமிச்சம்
பழச்சாற்றாலரைத்து 130மி.கி அளவுள்ள
உருண்டைகளாய்ச் செய்து வெய்யிலில் உலர்த்தி
35கி நாகத்தில்

76.
நாகத்தில் மேற்சொன்ன உருண்டையை
அவ்வொன்றாய் கொடுக்க
நாகமானது தெறிக்கும். அதனை 35கி எடுத்து
கல்வத்தில் போட்டு முறையாகப் பொடித்துக்
கொள்ள தூளாகும். அதனுடன் 17கி வீரம், 9கி இரதம்
4½கி உப்பு ஆகியவற்றைச் சேர்த்துக்
கொள்ளவும்.

நாகவெள்ளை:

கேளப்பா சுண்ணமுடன் சாரங் கூட்டி
செடியாக அரைவிட்டு தண்ணீ ரூக்கி
வாளப்பா நாதுபலம் அதுக்குள் ளேதான
மைந்தனே நாகமதை உருக்கி சாயப்பா
வேளப்பா இரண்டுபத்து விசைய சாய்ப்பாய்
நேகின்ற நாகத்தி னாறல் போகும்
மோளப்பா பின்னெடுத்து பழுஞ்சாத்தில் சாய்ப்பா
அப்பனே நாகமது சுத்தி யாச்சே. (74)

ஆச்சப்பா நீரஞ்சு தரமே சாயப்பா
அப்பனே இலையிலிட்டு உருக்கா பின்பு
வாச்சப்பா சுத்திசெய்த தாள கந்தான
வரிசையா கழஞ்சிரெண்டு காரம் கால்தான்
நீச்சப்பா பழுஞ்சாத்தி லரைத்துக் கொண்டு
நேசமுடன் இன்றியடை தான் பண்ணி
காச்சப்பா ரவிமுகத்தில் உலர்ந்த பின்பு
னைக்கவே நாகமது பலத்தில் தாக்கே. (75)

தாக்கப்பா தாளகத்தி ஜூண்டை தன்னை
தயவாக ஒவ்வொன்றாய் கொடுத்த பின்பு
வாக்கப்பா நாகமது தெரிக்கும் பாரு
மைந்தனே இன்னாகப் பலமே தொன்றும்
நீக்கப்பா கல்வத்தில் பொடியாக்க தானம்
நேராக வீரமதில் ஜாதி போடு
தூக்கப்பா ஆதமது கால்தான் போடு
துடியான உவர்ப்பூவை அரைக்கால் போடே. (76)

77. நவச்சாரம் 4½கி, சூடன் 4½கி, எருக்கம் பால், வெங்காரம் இவையும் அனைத்தையும் ஒன்று சேர்த்தரைக்கவும் ஆறு மணிநேரம் அரைக்க வில்லையாய்க் கட்டிக் கொள்ளும். இது நன்கு காய்ந்த பின்பு அதைச் சுண்ணச் சீலையால் (சுண்ணாம்பு பூசப்பட்ட துணி) அன்றி சுண்ணாம்புக் கிள்ளே வைக்கவும். பிறகு 100 வரட்டியில் புடமிடவும். தக்க நேரத்தில் எடுத்துப் பார்க்க பற்பமாயிருக்கும்.

78. நாகமணலது பற்பமான முறை மேலே கூறப்பட்டுள்ளது. இதற்குத் தக்க அனுபானங்களை அறிந்து கொடுக்க வியாதிகள் பல தீரும். இப் பற்பத்தை 130 மி.கி அளவு கொடுக்க எண்பது வகை வாதமும் நாற்பது வகை பித்தமும், தொண்ணூற்றாறு வகை சிலேத்துமங்களும் குணமாகும்.

79. மற்றுமொரு வைத்தியத்தைக் கூறுகிறேன்! கேட்பாயாக! இந்தப் பற்பத்தை 70கி, 35கி எடுத்து 3 மணிநேரமரைத்துப் பீங்கா-னில் போட்டுக் கொள்ளவும். அமுரியுப்பை 9கி எடுத்து அவ்விதுடன் கலந்து பனியில் வைக்க செயநீராய் மாறும்.

போடப்பா நவச்சார மரைக்கால் போடு
புகழுஞ்சு மருந்திடைக்குச்சூடன் போடு
ஆடப்பா எருக்கம்பால் வெங்கருகுமிட்டு
அரைத்திருவாய் சாமமிரண்டு வில்லைகட்டும்
சூடப்பா உலர்ந்தபின்பு சுண்ணச்சீலை
சுத்தி சுண்ணாம்புக் குள்ளே வைத்து
சாடப்பா கெசபுடமாய் தீயே மூட்டில்
தவளைநிற மாகுமது வெள்ளை யாமே. (77)

வெள்ளையாம் நாகமது விரிந்து தப்பா
விதிக்கு மெய்ஞானங்க ளறிந்து போடு
பிள்ளையார் பேர்தோன்றி இன்றி யிடையேபோடு
பேரான வாதமென்ற தெண்ப துக்கும்
கொள்ளையடா பித்தம் நாற்பதும் போகும்
கூறுவென் சிலேத்துமங்கள் தொண்ணூற்றாறே
கள்ளாப்போல் பயந்தோடும் நாகம் கண்டால்
கருத்துள்ள வாதிகளைக் கேட்டு பாரே. (78)

கண்டாயோ இன்னமொரு வயித்தியஞ் சொல்வேன்
கண்கொண்ட வாதிகளை கருதிக்கேளோ
உண்டாச் செய்திது மத்தாம் பற்பம்
உத்தமனே முண்டு ~~சும்~~ பலந்தா னொன்று
சண்டான நவிசாரம் பலந்தா னொன்று
சாமமொன் றரைத்தன்ன பிங்காளிட்டு
பண்டான அகலிஉப்பு கல்பம மேல் ~~போ~~ போட்டு
பதனமாய் பணியல் வைக்க செயநீ ராமே (79)

(X) ரசப்பனென் கூடன்னாலு அஞ்சாவ் வெப்பு
ரசமந்திரா மறைந்திலே காம மயக்கு

---

80. வெண்காரம் 4½கி, மந்தாரம், வீரம், சூடன் இவற்றை வகைக்கு 35கி எடுத்து அனைத்தையும் செயநீரூற்றி 3 மணிநேரமரைக்க மெழுகாகும். அதை மூன்று பங்குகளாகப் பிரித்துக் கொள்வாய். ஒரு பங்கு அரைத்த பொடியைப் பழச்சாற்றில் போட்டு பின் நான்காம் நாள் கழுவி எடுத்துக் கொள்ளவும்.

81. முதல் பங்கான அரைப் பொடியையும் மருந்தான இரண்டாவது பங்கும் கூட்டி பிசைந்து குகைக்குள் வைத்து அதனை மூடி சீலை மண்செய்து கொள்ளவும். உள்ளே வைத்த அரைப் பொடியானதை மணிச்சு-மைவுக்கு குகை அருகும் அளவுக்கு வைத்திய முறைப்படி மூன்றாம் புடமிட்டு ஊதுமணியாகும். அதனுடன் மூன்றாம் பங்கு சேர்க்க.

82. மேற் சொன்னவாறே மூன்று பங்கையும் குகைக்குள் வைத்து முறைப்படி ஊதவும். சேர்த்த லோகங்கள் உருகி தங்கம் போலாகும். அதன் பின் மணியை எடுத்துக் கல்வத்தில் வைத்து மணியின் எடைக்குச் சம அளவு சவ்வீரம் சேர்த்து அரைக்கவும். அச்சமயத்தில் சவ்வீரத்தின் எடைக்குச் சம அளவு இரசம், அதில் பாதி வெண்காரம், சூடன் சேர்க்கவும்.

செயநீரால் வுறைத்திடவே மருந்தைக்கேளு
திடமாகக் காரமொன்று அரைக்கால் போடு
செயநீரா மந்தாரமொன்று வீரமொன்று
(ர) திரண்டல்லோ மொருங்காகும் மூன்றுபங்கு
செய்வாய்
தியவான அரைப்பொடியே பழச்சாற்றில் போட்டுப்
பாயானாம் நாலுநாள் கழுவி வாங்கே.
80. 13

வாங்கியந்த அரைப்பொடியே யொன்று கூட்டு
மைந்தனே மருந்துமொரு பங்கு கூட்டு
ஓங்கியே பிசைந்துயொன்றாய்க் குகைக்குள்ளிட்டு
உத்தமனே மேல்மூடி சீலை செய்து
நீங்காமல் குகையுலர நன்றா யூது
நிலைத்துதொரு மணியாக நிற்கும் பாரு
சாங்கமாய் நெருங்கிஇந்த மணிகாணப்பா
தியவாக பின்புமொரு பங்கு கூட்டே.
81. 14

கூட்டியே ஊதிடுவாய் மருக்கா அந்தன்
குன்றாமல் நகைமுறையாய் மூன்றுபங்குமூது
நாட்டியே பின்வைத்து உருக்கும் போது
நலமாகத் தங்கம்போல் கண்விட்டு ஆடும்
தாட்டிகமா இம்மணியை கல்வத்தி லிட்டு
திசவீரம் சரியிடையாய் அரைக்கும் போது
உரட்டுவாய் கண்டிடைக்கு பாதி சூத
முறைவான காரங்கள் கூடனென்றே.
82. 15

83. மேற்சொன்ன மருந்துகளைச் சேர்த்தரைத்து சுண்ணாம்பையும் சேர்த்தரைக்க மெழுகாகும். வில்லையாகும். வெயிலில் காய வைத்து சுண்ணாம்பு பூசப்பட்ட துணியைச் சுற்றி சுண்ணாம்பினுள் வைத்து புடவரட்டியில் அடுக்கி தீ மூட்டவும். தக்க நேரம் கழித்து எடுத்துப் பார்க்க பற்பமாகியிருக்கும்.

84. உபயோகத்திற்கான பற்பத்திற்கு தகுந்த அனுபானமறிந்து கொடுக்க பாண்டு வகைகள், மேக வகைகள், வாயு வகைகள், காமாலை வகைகள், பித்த வகைகள், சிலேற்பன வகைகள் ஆகியவை தீரும்.

காந்த செந்தூரம்

85. மேலே நாக பற்பம் செய்தது போன்று காந்தத்தையும் பற்பமாக்கலாம், காந்த பற்பத்தின் வேகத்திற்கேற்ப அனுபானங்களை அறிந்து கொடுக்க பல நோய்கள் தீரும். நீ மறந்து விடாமல் அம்முறையையே பின்பற்றுவாய். உபயோக செந்தூரம் செய் முறையில் கேட்பாயாக முறைப்படி சுத்தி செய்த இரும்பினை 35கி எடுத்து கல்வத்தில் போட்டுக் கொள்ளவும்.

சூடனோடு செருந்தஞ்சு முறவா யாட்ட
சுகமான வெள்ளையா மொன்று போடு
நாடவே மெழுகாகும் வில்லை கட்டு
ரவிமுகத்தில் உலர்ந்தபின்பு சுண்ணச்சீலை
நாடவே சுத்தியபின் சுண்ணாம்பில் வைத்து
உத்தமனே கெசபுடமாய் தணலை மூட்டு
வாடவே வெண்டாம்கொண் வயித்தி யோரே
செத்தான தவளநிற மாகும் பாரே. 16//
(83).

பாரப்பா லோகவெள்ளை வேக மெத்த
பாச்சலா மறுபாண மறிந்து போடு
சேரப்பா பாண்டுவகை யெல்லாம் போகும்
செகமறிய மேகமென்ற தெல்லாம் போகும்
காரப்பா வாயுவென்ற தெல்லாம் போகும்
காமாலை காமாலை யென்றதெல்லாம் போகும்
வேரப்பா பித்தமென்ற தெல்லாம் போகும்
விளம்பிநின்ற சிலேற்பனந்தான் பறந்து போமே.
(84). 17//

பறந்துவிடும் காந்தத்தை இப்படியே செய்யில்
பரிவாக காந்தமது வெள்ளை யாகும்
இறந்துவிடும் நோய்களெல்லா மெங்கே போகும்
எடுத்திட்ட காந்தவெள்ளை வேக மெத்த
மறந்துநீ போகாதே கைமுறைதா னப்பா
வளமான லோக செந்தூரங் கேளு
அறிந்தவர்க்கு சுத்திசெய்த லோகந் தன்னை
அப்பனே பலமொன்றாம் கல்வத் திட்டே. 18//
(85).

86. எலுமிச்சம் பழச்சாற்றில் 3 மணி நேரம் அரைத்து வில்லைகளாகி விடும். அதனைக் காய வைத்து (நிழலில்) மூன்று தொட்டிகளுக்குள் போட்டு பத்திரப்படுத்தி வைக்கவும். பிறகு அயலோகச் செந்தூரமாகும். செந்தூரத்தின் எடைக்குச் சமபங்கு கெந்தகத்தைச் சேர்த்துக் கொள்ளவும்.

87. 1கி பூநீற்றையும் உடன் சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றில் மூன்று மணி நேரமரைத்து அவ் விழுதை வில்லைகளாய்ச் செய்து நிழலில் காய வைத்து செந்தூரத்திற்கேற்ற புடத்தில் வைக்க லோக செந்தூரமாகும். 244 மி.கி அளவு செந்தூரத்தை நோய்களுக்கேற்ற அனுபானத்தில் பயன்படுத்த அவை தீரும்.

88. வாய்வினால் வந்த நோய்கள், பித்த நோய்கள், சிலேற்பனம், வாதநோய், ஆகியவை தீரும். இச் செந்தூரத்தில் 5கி எடுக்க. அதனுடன் 5கி லிங்கத்தையும் 1கி வீரத்தையும் சேர்த்துக் கொள்ளவும்.

~~ஆட்டுதற்கு முப்பத்திருக் குன்னை போட்டு~~

ஆட்டுதற்கு சுத்திசெய்த லோகந் தன்னை
அப்பனே பலமொன்றாம் கூடப் போட்டு
ஆட்டுதற்கு பழஞ்சாத்தால் சாமமொன்று
அரைத்திடுவாய் வில்லைகட்டி உலரப் போட்டு
ஆட்டுதற்கு முப்பத்திருக் குன்னை போட்டு
அயலோகச் செந்தூர மாகும் பாரு
ஆட்டுதற்கு செந்தூரம் கண்ட இடைக்கு
அப்பனே கெந்தகத்தை துருக்கு கைக்கே.
(86) 14//

தூக்கியே பழஞ்சாத்தால் சாமமொன்று
துவளவரை பூநீறு காநாம் கூட்டி
தூக்கியே அரைத்தபின்பு வில்லை செய்து
சாதகமாய் உலர்ந்தபின்பு புடத்திற் போடு
வாக்கியே லோக செந்தூர மப்பா
மைந்தனே அரைப்பணந்தான் அநுபானத்தில்
ஆக்கியே எந்தெந்த வியாதிக் குந்தான்
அநுபான மறிந்துகொண்டு லோகம் போடே.
(87) 20//

போடவே வாயுவபத்திரம் பித்த ரோகம்
புகழான சிலேற்பனந்தான் வாத ரோகம்
ஓடவே செய்யுமிதில் ஏசிதர மய்யா
உரையார்கள் நாதாக்கள் குறிக்கிதென்று
நாடவே லோக செந்தூ ரத்தில்
நலமாக ஒருகழஞ்சி யெடுத்துக் கொண்டு
நீடவே லிங்கமோ கழஞ்சி கூட்டியே
நிலையான கிரமதி காநாம் கூட்டே. 21
(88)

89. மேற்கூறிய உலோகங்களை எலுமிச்சம்
பழச்சாற்றால் அரைத்து 5கி கந்தகத்தையும்
சேர்த்து மூன்று மணி நேரமரைத்த பின்னதை
வில்லைகளாய்ச் செய்து நிழலில் காய
வைத்து வேல், வேப்பை ஆகிய இரண்டு
இறகினால் புடத்தைப் போடவும். தக்க
நேரம் கழித்து ஆறிய பின் எடுத்துப் பார்க்க செந்
-தூரமாகும்.

90. மேற்சொன்ன செந்தூரத்தில் பாதி அளவெடுக்க.
இலிங்கத்தையும் சேர்த்து கல்வத்தில் தாய்ப்பால் ஊட்டி
மூன்றரை மணிநேரம் அரைத்து இரவளவு
நிலமுள்ள உருண்டைகளாய்ச் செய்து
நிழலில் காய வைக்கவும். இதனை அள
-ந்து கொடுக்க சன்னிவகைகள் தீரும்
வாதபித்தம் ஒழியும். தாது விருத்தி பெருகும்.

91. காந்த செந்தூரத்துடன் சாதிலிங்கத்தையும் அளவுடன்
சேர்த்துக் கொடுக்க காமாலை, பாண்டு
உள்மூலம், புறமூலம், வாதம், பித்தம்,
இவற்றினால் வரும் நோய்கள்
அனைத்தும் தீரும்.

கூட்டியே பழச்சாத்தா லரைக்கும் போது
கொடியதொரு கெந்தகந்தான் கழஞ்சி போடு
நாட்டியே சாமமொன்று அரையு மப்பா
நலமாக வில்லைசெய்து உலர்த்திக் கொண்டு
வாட்டவே இரண்டெருவில் புடத்தைப்போடு
வளமாக ஆறினபின் எடுத்துப்பாரு
காட்டிலே இருந்தசித்தர் மெய்யா சொன்னார்
கனமான செந்தூரம் கண்கொள்ளாதே. 89.

கொள்ளாதே செந்தூரந் தனக்குப்பாதி
கூட்டும்நீ லிங்கமதை முலைப்பாலிலேவி
என்னாம வரைச்சாம மரைத்த பின்பு
விரல்நீள முருண்டை செய்து உலர்த்திப்போடு
தள்ளாத சன்னிவகை எல்லாம் போகும்
தாதுவிருத்தி யுண்டாகும் சாதிலிங்க யோகம்
உள்ளபடி வாதிகளே சொன்னேன் கேளும்
உத்தத்தில் வாதபித்த மொழிந்து போகும். 90.

346.அ. உலர்ந்துபோம் கர்ந்தத்தை இப்படியே செய்தால்
ஒப்பாரசொல வயித்தியர்காணி சனைப்பு
ஒளிந்துபோம் கர்ந்தமே செந்தூர மாகி
உத்தமனே சாதிலிங்கம் கூடச் சேர்க்கில்
ஒளிந்துபோம் காமாலை பாண்டு ரோகம்
உள்மேலம் பிறமேலம் பறந்து போமே.
ஒளிந்துபோம் வாதபித்த சிலேற்ப னந்தான்
உத்தியப்பா கர்ந்தத்தின் சிறப்பு தானே. 91.

தங்க வெள்ளை (பற்பம்)

92. தங்கபற்பம் செய்யும் முறையைக் கூறக்கேட்பீராக! 35கி தங்கத்தை எடுக்க. நாகபற்பம் 1கி, வீரம் 5கி, புனுகு 5கி எடுத்துக் கொள்ளவும். முட்டையின் வெள்ளைக் கருவினை எடுத்து, மேற்கூறப்பட்ட மருந்துச் சரக்குகளை முறைப்படி சுத்தி செய்து கருவால் அரைத்துத் தங்கத் தகட்டின் மேலே பூசவும்.

93. மருந்து பூசப்பட்ட தங்கத்தை எடுத்து 1000 வராட்டியில் புடமிட்டுக் கொள்ளவும் தக்க நேரம் கழித்து எடுத்துப் பார்க்கவும். அதனைக் கல்வத்திலிட்டு அரைத்துப் பற்பமாக்கிக் கொள்ளவும். இப்பற்பத்தில் பாதி வீரத்தையும் கால் பாக அளவு பூரத்தையும் எடுத்துக் கொள்ளவும்.

94. கால் பங்களவு புனுகையும் இரசத்தையும் எடுத்துக் கொள்ளவும். அனைத்து உலோகங்களையும் ஒன்று சேர்த்தரைக்கவும். வீரத்தைச் சேர்த்ததினால் தங்கமானது தங்க பற்பமாகும். எனவே 1000 வராட்டியில் புடம் வைக்கவும். கீழ் மேலாக முட்டை வெண்கருவினின்று தயாரித்த நீரை விடவும். தங்கமானது பற்பமாகும்.

346-அ. ~~தங்கவெள்ளை தானென்ற~~ யேனமது வெள்ளையாக

தங்கவெள்ளை

தானென்ற ஏனமது வெள்ளை யாக
சாத்துறேன் தங்கமொரு பலத்தைக் கூட்டில்
ஏனென்ற நாகத்தின் வெள்ளை தானும்
மங்கவே கால்பலந்தா னிருந்துக் கொண்டு
வானென்ற வீரமது கழஞ்சு கூட்டி
மைந்தனே புருகுமரை கழஞ்சு கூட்டி
கானொன்ற வெண்கருவா லரைத்துக் கொண்டு
கனக்கவே பூசிடுவாய் தகட்டின் மேலே. (92). ~~35~~//

மேலிட்ட மருந்தரைத்த தங்கந் தன்னை
விருப்பமாய் வண்டக்குகி-கினிலே வைத்து
? பாப்புட்ட வெள்ளையைப் போல் தங்கநீர்
பரிவாகக் கிசபுடமாய்த் தீயை மூட்டு
ஏலிட்ட தூயமது நெருங்கி நிற்கும்
என்மக்காள் கல்வத்தில் அரைக்கத் தானாம்
மாவிட்ட தங்கத்தில் தனக்குப் பாதி
மாட்டுவாய் வீரமது பூரம் தானே. (93). ~~36~~//

பூரத்தி னிடைபோட்டு புருகு தன்னை
புகழாக வண்டக்குகி புருகு வீதம்
பூரத்தி னிடைபோட்டு தகந் தன்னை
போகத்தா லிவ்வளவும் கூட்டி யாட்டு
வீரத்தால் தங்கமது வெள்ளை யாகும்
வீணல்ல இதுகள் கிசபுடத்தில் போடு
சீரொத்த அண்டாநீர் கீழே விட்டு
சேபமொடு தங்கமது வெள்ளை மாமே. (94) ~~37~~//

95. தங்க பற்பத்துடன் லிங்கத்தையும் சேர்த்துத் தாய்ப்பால் ஊற்றி வில்லைகளாகச் செய்து நிழலில் உலர்த்திக் கொள்ளவும். பின் அவற்றைக் கலயத்தில் அடுக்கி வேல், வேங்கை ஆகிய இரண்டு விறகினாலான புடத்தில் வைத்து தீமூட்டவும். தக்க நேரம் கழித்து எடுத்துப் பார்க்க தங்கம் செந்தூரமாயிருக்கும்.

96. இத்தங்க செந்தூரத்திற்கு ஈடு ஏது? இந்திர உதையம் வெள்ளை லிங்கத்தில் சேர்ந்த போது பூபதிகளும் (பூபதிக் குளிகை) பற்பல செந்தூரங்களும் இதற்கு ஈடாகாது. வெள்ளைச் செம்புக்குப் பத்திலொரு பாகம் இதனைக் கொடுக்க ஏழு மாற்று தங்கமாகும். இத்தங்க செந்தூரத்தை 130 மி.கி அளவு தக்க அநுபானத்தில் கொடுக்க பலநோய் தீரும்.

பூபதி

97. நோய் தீருவதற்கான பூபதி மருந்தொன்றைக் கூறக் கேட்பீராக! தங்கபற்பம், நாகபற்பம், இரும்பு பற்பம், காந்த பற்பம், தாமிர [illegible], செம்பு பற்பம் ஆகிய ஐந்தையும் வகைக்குச் சம அளவாய் 10 கி எடுத்து 50 கி கர்மப்பாலை ஊற்றி அரைத்துக் கொள்ளவும். அரைக்கும் போது முத்தினைச் சேர்க்கவும்.

தவளமென்ற லிங்கத்தில் சரியா லிங்கம்
சாரித்து முலைப்பாலி லரைத்துக் கொண்டு
தவளமாய் வில்லைசெய்து உலரப் போட்டு
சாதகமாய் இரண்டையுமில் புடத்தைப் போடு
தவளமென்ற லிங்கத்தில் செந்தூ ரத்தை
சாதகமாய் வியாதிகளை செய்து பாரே.
(95) ~~28~~//

பாரப்பா சந்திரவுதைய யந்தா னிந்தபடி
வெள்ளை லிங்கத்தில் சேர்ந்த போதே
பாரப்பா பூபதிக ளிதுக்கு மீடோ
பலபல செந்தூரங்க ளிதுக்கு மீடோ
பாரப்பா இதையெடுத்து வெள்ளைச்செம்பில்
பத்திலொன்று கொடுத்துப்பார் ரேகு மாத்திரம்
பாரப்பா இன்றியடை அனுபானத்தில்
பண்பாக கொடுத்திட நோய் பறந்து போமே.
(96) ~~29~~//

போமப்பா சடலத்திற் நோயென்ப தெல்லாம்
பூபதிக்கு மருந்தொன்றுஞ் சொல்லக்கேளு
நாமப்பா ஒளிக்கரியோம் தங்க வெள்ளை
நாகவெள்ளை லோகவெள்ளை கர்ந்த வெள்ளை
தாம்பூர செம்புவெள்ளை பஞ்ச மொக்க
சரியிடையாய் கழஞ்சரண்டு வீதங் கூட்டி
கர்மப்பால் விட்டரைப்பாய் கழஞ்சு பத்து
காட்டப்பா அரைக்கையாலே முத்து போடே
(97) 30//

98. வைரம், பவழம், புட்பராகம், பச்சைக்-கல், சிவப்புமணி, இரத்தினம், ஆகியவற்றை வகைக்கு 2½ கி, 20 கி கெந்தகம், இலிங்கம், 5 கி சூதம் (இரசம்), தாளகம் 5 கி, எடுத்துக் கொள்ளவும்.

99. மனோசிலை பற்பம், 1 பங்கு துருசு, 1 பங்கு துத்தம், அகம்பச்சாரம், சீனம், வீரம், பூரம் ஆகிய நான்கையும் வகைக்கு ஒரு பங்கு எடுத்து பொற்றலைக் கையாந்தகரையின் சாற்றால் மூன்று மணி நேரம் அரைத்து, மீண்டும் சிறுநீர், எலுமிச்சம் பழச்சாறு ஆகியவற்றால் முறையே தனித் தனியே மூன்று மணி நேரமும் அரைத்துக் கொள்ளவும்.

100. உப்புத்தண்ணீரால் மேற்கூறிய மெழுகை மூன்று மணிநேரமரைத்து வில்லைகளைச் செய்து புதிய கலசத்திற்குள் வைத்து வாயினை மூடி சீலைமண் செய்து புடத்தைப் போடவும். அதில் புகையாது நீராகும். தக்க நேரம் கழித்து புடத்தை ஆறவிட்டு எடுத்துப் பார்க்க செந்தூர-மாய் ஆகியிருக்கும்.

போட்டப்பா வயிரமொடு பவழம் போடு
புஷ்ப்பராகம் போடு பச்சை போடு
நாட்டப்பா சிவந்தமணி இரத்தினம் போடு
நலமாக வைக்கக்கறை கழஞ்சு போடு
தேடப்பா கெந்தகமோ கழஞ்சு நாலு
திறமான லிங்கமது கழஞ்சு நாலு
உடைப்பா சூதமது கழஞ்சு போடு
உத்தமனே தாளகந்தான் கழஞ்சு ஒன்றே.
(98) 31

ஒன்றிடுவாய் நல்லமனோ சிலையின் வெள்ளை
உறவான துருசொன்று துத்த மொன்று
நன்றனவே சாரமொன்று சீன மொன்று
நலமான வீரமொன்று பூர மொன்று
சென்றதொரு பொற்றலையின் சாற்றா லாட்டு
திறமாக சாமமொன்று அரைத்த பின்பு
துன்றிடவே அசுரியாட்டு சாம மொன்று
சுருக்காக பழஞ்சாற்றில் சாம மொன்றே. 32
(99)

சாமமொன் றரைத்திடுவா யப்பு நீரால்
சாதகமாய் அரைத்தபின்பு வில்லை செய்து
நாமமென்றும் புதுகலசத் துள்ளே வைத்து
நலமாக மேல்மூடி சீலை செய்து
யோமமென்றே அப்புக்கிதில் புடந்தைப் போடு
தொன்றுமங்கே புகையாமல் கட்டு நீறும்
சேமமென்றே பு—மாத்தி எடுத்துப் பாரு
செந்தூர மருணநிற மாகும் பாரே. 33
(100)

101. சிந்தூரத்தின் எடைக்குப் பாதியளவு இலிங்கத்தைச் சேர்த்து தாய்ப்பாலிலரைத்துக் கொண்டு விரல் அளவு நீளமுள்ள கம்பிகளாகச் செய்து நிழலில் காய வைத்துப் பத்திரப் படுத்திக் கொள்ளவும். குருவின் பதத்தை நினைத்து அயிரவனைப் பூசை செய்து தேவியை நீதியானம் செய்வாயாக!

102. சிவ பூபதிக் கேற்ற அனுபானங்களை நோய்களுக் கேற்றவாறு கொடுக்க தீரும். மரணமானாலும் மறுபடி உயிர் பெறுவான். தாதுக்கள் பணிபுரியும். வாழ்ந்துக்கொள்வான். அவனுக்கு ஆயுள் ~~[illegible]~~ இன்றேல் வாழ்த்துப் பேசிவிட்டு பின் இறப்பான். வைத்தியர்கட்கு இது பலனைக் கொடுக்கும் பூபதிதான்.

103. இவ்வாறு வைத்தியம் செய்தால் எட்டு திசையில் உள்ளவர்களும் வாழ்த்துவர். அனைத்து மருந்துகளையெல்லாம் முப்பத்தைந்து பாடல்களின் சுருக்கி வைத்துள்ளேன். இப்பாடல்களில் குறிப்பிட்டுள்ள மருந்து செய்முறைகளைச் செய்து கொடுக்க நோய்கள் பல தீரும்.

பாரு நீ சிந்தூரஞ் கண்ட கிடைக்கு
பாதிலிங்கம் கட்டிமணைப் பாலிலாட்டி
பாருநீ விரல்நீளஞ் கம்பி செய்து
பரிவாக உருத்திரயதை பதனம் பண்ணி
கூருநீ குருபதத்தை பூலம் பாரு
கயிலாச வயிரவனைப்பூசை பண்ணு
சேருநீ தேவியை நீ தியானம் பண்ணுஞ்
சிறக்குமிந்த பூபதிக்கு சிவம்ஆம் பண்ணே.
(101) 34//

சிவமான பூபதியை அனுபானம் தீர
திறமாக அரியிடையே குருந்தால் கேளு
சவமாகப் போனாலும் நாது உண்டாம்
சாதரியம் பிராணன்வரும் முழித்துப் பார்ப்பான்
அவமான பிரமலிபிடு வாழ்வே யாகில்
ஆசித்துப் பேசிவிட்டு மரண மாவான்
தவமான வாதிகட்கு பூபதியே சொன்னேன்
சாதிக்கும் வைத்தியருக்கு செய்தர்ம மாமே.
(102) 35//

ஆமப்பா இந்தவாய் வயித்தியம் பாரு
அஷ்டசித்தை மெய்க்கவுன்னை வாழ்த்தும் லோகம்
நாமப்பா வயித்தியத்தில் மருந்தை எல்லாம்
நயமாக இருக்கிவைத்தேன் முப்பத்தஞ்சில்
வாமப்பா இந்தவகை யெல்லாம் வைத்தால்
வயித்தியன் பேர் உரைக்கையிலே நோய்கள் போமே
நாமப்பா மரணமொடு இருபத்தஞ்சில்
நடையாலே இருவேறு சத்தி யாமே.
(103) 36//

அகஸ்தியர் சூத்திரம் முற்றும்.

இதுபொருள்நிற்த வயித்தியஞ் செய்தால் ஈஸ்பரன் கிருபையினாலே வைத்தியனுக்கு இஷ்டமான சம்பத்தும் தருவார். சித்தர்கள் நாதர்கள் துணை உண்டாம்.
சிவமயம்.

குதிரை வலிக்கு எண்ணெய்

104 நேர்வாளம், மிளகு, சுக்கு, திப்பிலி, கடுகு, பெருங்காயம், நற்சீரகம், வெந்தயம், கெந்தகம், வெள்ளிச்சிப்பிசின், வெண்காரம் உன்மத்தம் ஆகிய இவற்றை வகைக்குச் சமமாய் எடுத்துக் கொள்ளவும்.

105. குதிரைவாலி, வாலுளுவை, குருந்து, நொச்சி, ஆடாதோடை, முருங்கை, தூதுவளை, வெள்ளைச் சாரணை, கொடிவேலி ஆகிய மூலிகைகளையும் வகைக்குச் சம அளவெடுத்துப் பொடித்துக் கொள்ளவும், தேவையான அளவு வேப்பெண்ணெயில் பொடித்தைப் போட்டெரித்து ஆறிய பின் எடுத்து அளவறிந்து கொடுக்க பெண்களுக்குப் பிரசவ காலத்தின் கருப்பைக் கோளாறு, குண்டிக்காயினால் ஏற்படும் வலிப்பு நோயான குதிரைவலி தீரும்.

வெடிசன்னியின் குறிகுணம்

106. காதில் வலி அதிகமாகி இரைதல் ஏற்படுதல் வலிப்புண்டாதல், முகத்தைத் திருப்பிக் கொள்ளுதல் நாக்கு தடுமாறுதல், (பேச முடியாது உளறிப் பேசுதல்), ஆகிய குறிகுணங்களையுடைய வெடிசன்னியால் நோயாளி வாடுதல், கனவுகள் பல வேறுபாடுகளுடன் அமைதல் பலவாறு திரித்துப் பேசுதல் ஆகியவையும் அடங்கும்.

400

350. அ.

குதிரை வலிக்கி எண்ணெய்

பண்பாடு . . . நேர்வாணம்

மிளகு சுக்கு திப்பிலியும்
நண்பான கடுகு பெருங்காயம்
நற்சீ ரகமும் வெந்தியமும்
வண்பாய் விளைந்த கொத்தகமும்
வசம்பு வெளிச்சிப் பசின்தூரம்
உண்போ ராசை மோகமுஞ்
சரியுட னொக்க கொள்ளோ. 104.

கொள்ளோ குதிரை வாதுவை
குருந்து நொச்சி ஆடாதோடை
முள்ளோ யுள்ள குறுவெட்டு
முருங்கை பூலி தூதுவளை
வெள்ளோன் மக்க சாறணையு
நீரஞ் சத்தே கொடிவேலி
உள்ளோ எரித்து வெப்பெண்ணெய்
அழுத்தும் குதிரை வலிபோமே. 105.

காதுக்குள்ளோ திரண்டெழுந்து
கதிக்கும் குத்து வலியுண்டாய்
சேதப் படவே முகந்தன்னை
திருகி நாக்கித் தமோறும்
வேதப் படவே வெடிசன்னி
விருந்தே இருக்கும் செப்பனமும்
பேதப் படவே வியாதிதன்னை
பிரித்துப் பிரித்துப் பேசுவதே. 106.

107. கடுக்காய், கச்சோலம், இந்துப்பு, மிளகு, திப்பிலி, ஆகிய மருந்துச் சரக்குகளை வகைக்குச் சம அளவெடுத்துப் பொடித்துக் கொள்ளவும். அச்சூரணத்தைத் தண்ணீரில் கலந்து அளவறிந்து குடிக்க வைக்க வெடிசன்னி வகை பதினாறும் தீரும்.

பெற்றவளுக்குச் சுரம், தலைவலி

108. குழந்தை பெற்ற மகளிர்க்குக் கடுமையான காய்ச்சலும் மிகுந்த தலைவலியுமுண்டாயின் வெள்ளைப் பூண்டு சாறு, மருக்கொழுந்து இவையிரண்டையும் சேர்த்து குழநீர் கொடுக்க கழிச்சலுண்டாகி சுரம் தீரும். மூச்சு (அவாசமானது) வேகங் குறைந்தும் கண்ணில் ஒளி குன்றியும் காணப்பட்டால் மூச்சு நின்று மரணமடைவான்.

109. சந்தனாதித் தைலம்

சந்தனம், கோரைக்கிழங்கு, கோட்டம், நெல்லி, அதிமதுரம், விலாமிச்சு, இருவேலி, கச்சோலம், ஆகிய மருந்துப் பொருட்களை வகைக்குச் சம அளவெடுத்து இடித்துப் பொடித்துக் கொள்ளவும். நல்லெண்ணெயில் பொடித்த சூரணத்தைப் போட்டு காய்ச்சி பக்குவமறிந்து கொடுக்கவும். இதுவே சந்தனாதித் தைலம்.

கடுக்காய் கடுப்பி டகதி
கச்சோல் செய்திங் துப்பு
அடுக்கு மிளகு திப்பிலியும்
மதுள வெச்சிய பொடியாக்கி
தடுக்கி சதவே தியால்கலக்க
தண்ணீர் கொண்டாங் கருந்திடவே
வெடிக்குஞ் சன்னி பிறைட்டு
மிட்டே வலமாங் கசிந்திடுமே. 107

பிள்ளை பெத்த தாயர்க்கு
பெருத்த சுரமாய் தலைவலியானால்
உள்ளே உள்ளி நீர்தவனம்
உத்த கசிச்ச அடன்போமே
மென்ன தொடுத்த உள்மூச்சு
ஜிரியில் தெளியுங் கெட்டிருக்கில்
துள்ளி துடித்த சுவாசங்கிலை
துளக்கி உயிரைத் துளைத்திடுமே. 108

வாட்ட மிகுதி குன்றாத
மன்று மெருந்த சந்தமுத்தும்
கோஷ்டம் நெல்லி அதிமதுரம்
குவாவு மிளாமிச் சிறுவேலி
தேட்டம் பெரிய கச்சோலங்
சேர அரைத்திட் டெண்ணெய் வைக்கில்
காட்டிக் கொள்ள வல்லீரே
குளிருஞ் சந்த னாதியதே. 109

110. சுவாச காசத்துக்கு மிருதவாதி உருண்டை

சந்தனம், கோட்டம், அதிமதுரம், சாத்திரவேதி
தக்கோலம், கோரோசனை, கோரைக்கிழங்கு
விலாமிச்சு, இருவேலி, ஆகியவற்றை வகைக்குச்
சம அளவெடுத்து அரைத்து
அவ்விழுதை இலந்தைக் கொட்டையின்
அளவுள்ள உருண்டைகளாய்ச் செய்து
தண்ணீரில் இழைத்துக் கொடுக்க சுவாசகாசம்
குணமாகும்.

111. உள்காய்ச்சல் குணம்

பித்தத்தால் மயக்கமேற்படுதல், சோர்வுண்டாதல்,
தலைவலித்தல், பகலில் வெயில் காய்வது
போல் உடல் சூடாயிருத்தல், அதிகமான
காய்ச்சலால் உடலினுள்ள தோல் மரத்தின்
மேல் உள்ள பட்டை வற்றுவது போல்
வற்றிப்போதல், உடல் முழுவதும் அனல் போல்
இருத்தல் ஆகியவை உள் காய்ச்சலின் குறி
குணங்கள்.

112. இதற்குக் குடிநீர் :-

பசும்பால், சீனிச்சர்க்கரை, சாத்திரவேதி
ஆகியவற்றைத் தேவையான அளவெடுக்க.
சாத்திரவேதியையும் சீனிச்சர்க்கரையையும்
சேர்த்துப் பசும்பாலில் கலந்து குடிக்கவும்.
இவ்வாறே நாற்பது நாள் குடிக்க உள்சுரம்
தீரும்.

சுவாச காசத்துக்கு முசுதவாதி உண்டை

சந்து கொண்ட மதிமதுரம்
சாஸ்திர வேதி தாற்கோலம்
முந்துசுப் கோரோசனை முத்தக்காசு
காசு விளாமிச் சிறுவேலி யி[illegible]
இந்த வகையறைத் திண்டை செய்து
அந்தை கொட்டை யளவாக
வந்த உழலை குடுமுகின்றோ
மதிக்குஞ் சந்த ணாதியாதே. 110.

உள்காய்ச்சல் குணம்

வைத்திடும் வெளுத்த பித்தம்
மயங்கிடுஞ் சோப மாக்கும்
பத்தியே தலைநோ வுண்டாம்
பகல்வெயிலாற் மாறு கையும்
மத்திற தோரா தென்ன
மரத்தின்மேல் தோல்போல் வத்தும்
முத்துமே அனலாய் மூளு
முழுதுடல் காச்சல் தானே. 111

இதுக்குக் குடிநீர்:-

ஆவின் பாலுட னுண்புள
சீனியும் மேவுஞ் சாத்திர வேதியுமா
மாகவே தவ்வி தாற்பது
நாள்தான் குடிச்சாக் கால்
பாவி யுள்சுரம்
மோடிப் பதுங்குமே. 112.

பித்தத்துக்கு நெய் வைக்க

113. பொன்னாங்காணி முசுமுசுக்கை, புதியதாள் பழம்பாசி, பனிநீர் விடை உள்ள பூலா இலைச்சாறு, சிற்றாமுட்டி, சீதேவி செங்கழுநீர் ஆகிய மூலிகைகளின் சாறு வகைக்கு 3.1லி பசும்பால், இளநீர் இவை யிரண்டையும் வகைக்கு 1.3லி எடுக்க. மென்னா எனும் செடியின் வேரினின்றும் வழியும் பிசின், அதிமதுரம், அலம், நற்சீரகம், நெல்லி,

114. கொத்துமல்லி, சென்பகப்பூ, நாகப்பூ, சடாமாஞ்சில், தேற்றாங்கொட்டை, சந்தனம், நன்னாரி, முத்தக்காசு, விளாமிச்சம், இருவேலி ஆகியவற்றை வகைக்கு 15கி எடுக்க. அனைத்து மருந்துப் பொருட்களையும் பொடித்துச் சாற்றில் கலந்து காய்ச்சி பனங்கற்கண்டையும் சேர்த்து பக்குவத்தில் நெய்யையும் கலந்துகொண்டு அளவறிந்து கொடுக்க பித்தம் குணமாகும்.

115. சகல பிரமேயத்தின் குணம்:-

சிறுநீர் கடுத்து வெளியே விடவும் முடியாது துன்பப்படுதல், இரத்தமும் சிறுநீரில் வருதல், உடலில் வெப்பம் அதிகமாதல், அதனால் உடம்பெரிச்சலாதல், வயிறு வீங்குதல் உடல் வற்றுதல், ஆகிய குறிகுணங்கள் சகல பிரமேயத்தினுடையவை.

பித்தத்துக்கு நெய் வைக்க

பொன்னாங் கண்ணி முசுமுசுக்கை
புதிய தாளி பழம்பாசி
நன்னீர் பூலா விளைச்சாறு
நல்ல சித்தாமுட்டி சீதேவி
முன்னாந்தச் சாறு முந்நாழி
முந்த பசும்பால் யிளநீர்ச் ~~சாறு~~
மன்னாக் கொடிஅதி மதுரம்
மேமமநாற் சீரகம் நெல்லியுடன் 113. ~~150~~

உடன் கொத்த மல்லிகை செண்பகப்பூ
உடநாக கப்பூ மரஞ்சியுடன்
விடந்தேத்தாங் கொட்டைச் சாந்துடன்
கொன் னாரி முத்தக்காசு
படர்ந்த விலாமிச் சிறுவேலி
பரியாய் முக்கழுஞ் சோறொன்று
அடர்ந்த நெய்ப்பனஞ் சீனியுடன்
னளாவி கொள்ளு மதுபோமே. 114. ~~151~~

சகல பிரமியத்தின் குணம்:-
நீருங் கருத்து சலம்விடவும்
நின்று அழுகின்று சலம்விழுந்து
செரு மிரத்தம் தானுண்டாய்
தினமாய் வறழில் விழுந்திருக்கும் ?
பாரும் காயம் நாளொன்றில்
பாழாயப் பித்தி யுடம்பெரியும்
வீரஞ் சொன்ன நாரம்பல்
மயக்குஞ் சலத்தின் பிறமியமே. 115.

116. <u>இதற்கு நெய்</u> :-

பொன்னாங்காணி, சிதேவி செங்கழுநீர் வேம்பு, சிறுகீரை, கீழ்க்காய்நெல்லி, தக்காளி, துயிலிக்கீரை, செப்பு நெருஞ்சில், நீர்ப்பூலா முசுமுசுக்கை, சிற்றாமுட்டி, சிற்றாமல்லி, ஆகிய மூலிகைகளை எடுத்துக் கொள்ளவும்.

117.

பெரிய அனாவிருள்ளா முல்லை, நிலக்குமிழ், முல்லை, இலாமிச்சு, கோரைக்கிழங்கு, வேலிப்பருத்தி, நரிப்பயறு, புனாமுட்டி, தண்ணீர் விட்டான் ஆகியவற்றின் சாறுகள், பசும்பால் இளநீர் தயிர்த்தண்ணீர் ஆகியவற்றை வகைக்கு 1.3லி எடுக்க. சந்தனம், கோட்டம், இலவங்கம், அதிமதுரம், சீரகம், நெல்லி ஆகியவற்றையும்

118.

சீனியூறல், கோட்டம், சடாமாஞ்சில் சதகுப்பை, பச்சிலை, இலவங்கம், கச்சோலம், சாதிக்காய், காரம்பூ, நாகப்பூ, இருவேலி, வசுவாசி, ஆகியவற்றை வகைக்கு 10கி எடுத்துப் பொடித்துக் கொள்ளவும். சாறுகளையும் மற்றும் திரவங்களையும் சேர்த்து பொடித்தவற்றைப் போட்டு காய்ச்சிக் கொண்டு பக்குவமானவுடன் 1.3லி நெய்யையும் கலந்து கொள்ளவும். அளவறிந்து கொடுக்க சகல பிரமியங்கள் தீரும்.

இதற்கு நெய்:-

பொன்னாங் கண்ணி சீதேவி
புதுமல் வேம்பு சிறுகீரை
மென்னோ ரிதன் கீழ்க் காய்நெல்லி
வருத்தக் காளி தொய்யனுடனே
முன்னோர் செப்பு நெருஞ்சி நெய்தல்
முசுங்காப் பூளா முசு முசுக்கை
தின்னாவர் குளிர்ப்பது முகமியல்
சித்தா மூட்டி சித்தமல்லி.

~~153~~/116,

இதுவுமது:-

·பெரிய முல்லை நிலைக்குமின் முல்லையும்
பின்னாரி லாம்பிச்சு முத்தமும்
முரிய வேலி நரிபயறும் ~~[illegible]~~
மூட்டை தின்றிவிட்டான் சாறு
மரிய பசுவின் பால்நாழி ஒரும்
ஒக்க நாழி தயிர்தண்ணீர் நாழியும்
அரிசந்தனம் கோஷ்டம் மிலவங்க மதுரம்
சீரகம் நெல்லிய தாகுமே. —

~~153~~
117.

இதுவுமது:-

கோல சாத்திர பெரிய சினியூறல்
கோஷ்ட மஞ்சி சதகுப்பை பச்சிலை
ஏல லவங்கம் கச்சோலம் நற்சாதிக்கா
யாதுகாரம்பூ நாகப்பூ இருவேலியும்
வால மண வசுவாசி தன்னுடன்
வகையா னொரன் திருகபூரு சிகவே
சேரக் கூட்டி நெய்நாழியில் காச்சியே
நெய்யே நக்கிட நல்லது காணுமே. ~~155~~
118,

119. சர்க்கரை, நெய் இரண்டையும் சேர்த்துக் கொடுக்கவும். பயிறையும் சேர்க்கவும் இவ்வா றிட்டால் சிறுநீர் நன்றாகக் கழியாது. 3/4 நாட்கள் தொடர்ந்து வங்கச்செந் -தூரத்தைக் கொடுக்க உடலின் வெப்பத் -தோடு சிறுநீர்க் கடுப்பும் ஒழியும். பிரமேயம் குணமாகும். பத்தியத்தைக் கடைப்பிடித்து மாமிசத்தை உபயோகப்படுத்தக் கூடாது.

120. ஆயுர்வேதம் சொன்னவாறு நோய்களின் குறிகுணங்களை அறிந்து மருந்துகளைக் கொடுப்பர். மருந்தின் தன்மை ஒத்து வராததால் தீமையான பயன்களை தந்து சேரும். அதற்கேற்ற பரிகாரங்களையும் மேற்கொள்ளாத -தால் மீண்டும் நோயானது தொற்றிக் கொள்ளும்.

121. உடலிலிருக்கும் கழிவுகளை வெளியேற்றும் விதத்தில் வாந்தியை உண்டாக்குவதும் பெண் -களிடம் உணர்வினை முறையாகக் கொள் -வதும் உண்ட பிறகு சிறு நடை பயில்வதும் இரவில் பால் (பசும்) குடிப்பதும் வேதத்தினை முறையாகச் சொல்வதும் காய்ந்தாறிய தண்ணீ -ரைக் குடிப்பதும் இருந்தால் வாதம், பித்தம் நெருங்காது, பகையாய் ஓடும். மனிதருக்கு இறப்புமில்லை.

இதுவுமது:-

நல்ல சீனியும் நெய்யும் சரிக்க
நல்லதாம் பயிற்றிய முன்னாதும்
அல்ல தாகில் சலம்சிக்கி நிக்கு மதுவுடன்
வங்கஞ் செந்தூரங் கூட்டி கொள்ள
மெல்லவே அரைமண்டல மிப்படி வியந்து
கொள்ள வெக்கையோடு கடுப்பது
நல்ல தாகியன் பத்திய மாங்கிசம்
நணவிசுங் கொள்ள வொட்டாது காணுமே.

156// 119.

ஆயுசு வேதஞ் சொன்ன
அதின்படி வியாதி யுள்ள
நோயறி குணங்கள் கண்டு
துன்னிய மருந்து செய்வார்
தீயவை வந்து சுட்டுந்
தெளிவில பரிகா ரத்தால்
மாயவே தீர்ந்த தானும்
மறுபடி வியாதி யாமே.

157// 120.

மாதமா தவிறென வார்ந்தியும்
மாதர்தங் கிசனிடம் போக்கு மட்டிலே
போத வுண்டு அறுநடை கொள்வது
பூரண படப்பாலே பருகுவாம்
வேதஞ் சொல்வதும் வெக்கை குடிப்பதும்
மிதுன்றும் விருப்பது முன்னிடனில்
வாத பந்தங்களில் தனிலே பகைக்குமே
மானிடர்க்கு மறவிய மில்லையே.

121, 158//

122. பெரிய அம்மான் பச்சரிசி, சின்ன அம்மான் பச்சரிசி, நொச்சி, வெப்ப நொச்சி ஆகிய மூலிகைகளை இடித்துப் பொடித்து, எண்ணெயில் போட்டு காய்ச்சிக் கொள்ளவும். அத்தைலத்தை 4கி அளவெடுத்து இருந்து-க்கும் வாத இடங்களில் தேய்த்து வழித்து விட வாத வாயு, பரங்கி நீங்கும்.

123. வெற்றிலையில் வைத்து உட்கொள்ள உடல் கடுப்பு தீரும். வீக்கம் தேமல் ஆகிய நோய்கள் தைலத்தைப் பூசுவதால் தீரும்.

124. பித்தம், சிலேற்பனம், சேதங்களைச் செய்கின்ற எட்டு வகைக் குணங்கள், தீராத வாயு, நீர் நோய்க் கழிதல், பாதத்தில் தோன்றும் பத்து வகை வாதங்கள், வீக்கம், பரங்கி வெப்பத்தை நீக்கி குளிர்ச்சி-யை உண்டாக்கும் இந்த இரச பற்பமாகும்.

பெருமான் சிறுமான் கற்ப நொச்சி
தயிலத்தில் கொள்ள நிம்ப நொச்சி
இரண்டிலும் தாரநோக்க நொதிக்க
தயில மாவை நம்பு பெருமான்
பெருமான் வரவித்து நயஞ்சேர் சிறுமான
வலித்துந் தம்மி குளப்பி காசிடை
திமிர்சேர வாதவாயுவிடும் செம்மைபடவே
னோகுவந் தீரா பாறங்கி யதுபோமே.

159 // 122.

உத்த வெத்தி லையால் திண்ண
உனன் கபெப்பு கீத்தும்
பொற்பி ரமே ஆச
வீக்கந் தலை போம்.

வேறு

பித்தஞ் சிலேற்பின மறைவந்/ தெருத்த
வியாது/ சேதந் செய்யு குணமெட்டும்
தீரா வாயு சலக்கசிச்சல்.
பாதம் பத்து பெருவாதம்
பர்நத வீக்கம் பராங்கியுடன்
சீதமுடனே வற் போடச்
செய்யு பிரத பற்பமிதே. 160 // 123.

குணங்கள் கண்டு பற்பமிடவும்.

124. தாமிரை பற்பத்தை ~~இ~~ விலகாது உட்கொள்வீர்களானால் வாயு, சூலை, திரண்ட வாய்வு, சத்தி, விக்கல், ஆகிய நோய்கள் குணமாகும். இது உண்மையே. தெய்வ முனிவர்கள் தேம்பல் பற்பம் என்பதையே கூறினார்கள்.

125. வங்க பற்பம், காரீய செந்தூரம் இவற்றைச் சர்க்கரை, கற்கண்டாய் எண்ணி வயிறு அதிகமாகக் கழிபவருக்கு, நெய், ஆமணக்கெண்ணெய், இளநீர் ஆகிய -வற்றை அனுபானமாகக் கொண்டு அதில் பற்பத்தைக் கலந்து கொடுக்க சலப்பிரமேயம் தீரும்.

126. <u>காந்த பற்பம்</u>

வீக்கமாதல், கழிச்சலாதல், நீர் அதிகமாகித் துன்பம் கொடுக்கும் ஈளை, காமாலை, வாதம், ~~இ~~ பித்தம், பாண்டு, குளிகை பெருவயிறு, கறணமூலம், நீராமை ஆகிய நோய்கள் காந்த செந்தூரத்தால் குணம் பெறும்.

[signature] 29/4/84

நாம்பர பற்பந் தன்னை
தருவிடா தருந்து வீரால்
லாம்பல் வாயுச் சூலை
அத்துடன் திரண்ட வாய்வு
வெம்பொடு சத்தி விக்கல்
மீறுவ துண்மை யென்ன
தேம்பல் பற்ப மென்ன
தேவமா முனிவர் சொன்னார். 161//124.

வங்கம் கடிது காரியம்
இந்த சிந்தூரம் பருத்தியைப்
கஞ்சலமே மிக்க கழியி
லதுக்கு சக்கரை கற்கண்டாய்
மங்கை வயறு கழிச்சலினிட
வாமணக் கநெய் தெங்கிற
தெங்கிள நீர்தன்னி விட
தீருஞ் சலத்து பிரமியமே. 162//125.

வங்க பற்பம் இணைவு கண்டபடியும்.

காந்த பற்பம்:-

வீக்கங் கழிச்சல் வெகுசலங்கள்
மிகுத்த பிணை காமாலை
போக்கும் வாய்வு வாதத்தை
பொல்லா பித்தம் பாண்டுவை
காக்கும் இனிமை பெருவயறு
கருணை மூலம் நீராமை
தாக்கும் காந்த சிந்தூரந்
தன்னா லிந்நோய் போய்விடுமே. 126.
163//

127. இரசம் 10கி எடுத்து ஆலம்பாலில் அரைத்துக் கொள்ளவும். அரைத்த விழுதை எடுத்து அடையாகச் சுட்டு ஆவியில் வேகவைத்துப் பின் பரணியில் அடுக்கிக் கொள்ளவும்.

128. சீலைத் துணியை எடுத்துக் கொண்டு, துளையுள்ள அடுப்பின் மீது பாத்திரத்தை வைத்து தண்ணீர் ஊற்றி அதன் மீது துணியைப் பரப்பி, மருந்தினை இட்டு மூன்று மணி நேரம் ஆவியில் வேகவைத்ததை எடுத்துக் கொள்ளவும். பின் அதில் உள்ள மருந்தினைச் ஆற சூரணமாக்கி வேண்டிய இடத்தில் மருந்தினை வைத்து கட்டிவிடவும்.

செந்தூரத்தை இடைவெளியின்றி தொடர்ச்சியாக உட்கொண்டு வர பித்தவாதம், காய்ச்சல், சிலேற்பம் நீங்கும். அதற்கான மருந்து வகைகளைக் கூறக் கேட்போமாக!

இரத மப்பூர விலை
நிறைந்து கழுஞ்சு கொண்டு
சரத மெதாலம் பாலில்
தின்னுட ரைத்துக் கூட்டி
அரவிய தாகச் சட்டே
அவித்திடு பரணி செய்தேய்
மறைத்துகொள் வெண்ணித் தானும்
மிதமுடன் டைத்துக் கொள்ளே.

127. ~~164~~

கொள்ளு சிலை தன்னை
கொள்ளவே அருசியில் வேக
குளிர்ந்த நீர் தழுவே யட்டு
தள்ளவே மூன்று சாமம்
அடிக்கவே வெந்தி டத்தில்
மெள்ளவே மருந்தை ருத்து
மீளவும் பொடித கர்த்தும்
கொள்ளவே விடாமல் கட்டிக்
கொண்டுதன் வைப்ப தாமே. 165/ 128

வைத்ததோர் சிந்தா ரத்தே
வரைந்திடா தொடுமா வீடால்
பித்தவாதம் காய்ச்சல் சிலேற்பம்
சேர்த்தே போட மருந்து செய்யே.

~~129~~

129. <u>காந்த பற்பம் வைக்கும் படி</u>

இரும்புத்தூள் 25கி, காந்தம் 25கி, கெந்தகம் சூதம், 25கி எடுத்து அனைத்தையும் முறைப்படி சுத்தி செய்து பொடித்து ஒன்று சேர்த்துக் கொள்ளவும். சட்டியில் கொட்டி அனலுள்ள அடுப்பில் வைத்து 12 மணி நேரம் வேக வைத்து இறக்கவும்.

130. மேற் சொன்ன வேகவைத்த மருந்தை 488மிகி எடுக்க. மிளகு, இந்துப்பு, திப்பிலி, சுக்கு ஓமம், சீரகம், கடுகு, ஆகிய மருந்துப் பொருட்களை சுத்தி செய்து சூரணித்த சூரணத்தை மருந்துடன் சேர்த்துக் கொள்ளவும்,

131. குமரி பற்பத்தை மூவிரலளவு எடுத்து உட்கொண்டால் வேதனையைக் கொடுக்கும் வயிற்றுவலி, எரிச்சலை உண்டாக்கும் எரிகுன்மம், பீலிகை, பெருவயிறு, பாண்டு, கிரணி, ஆகிய நோய்கள் ஒழியும்.

காந்த பற்பம் வைக்கும்படி :-

அரைப்பொடி ஆங்க ழுஞ்சு
அவ்விட காந்தம் கூட்டி
மெருவிய கெந்த மெஞ்சு
வருசூதம் இரண்டாங் கூட்டி
நருவெறப் பொடிசெய் தொக்க
நன்றாய் கூட்டி இட்டு
வெருவிடா சட்டி இட்டு
வெந்திட நாலு சாமம் ~~166~~// 129.

வெந்ததை மருந்து தன்னை
மெண்பணத் திடையெடுத்து
வந்ததை மிளகின் துப்பு
மருவு திப்பிலி யேசுக்கு
முந்திய ஓமம் சீரக
கமதுக்க கருகி கொண்டு
அந்தநன் மருந்தி னோடே
அடவுடன் கூட்டிக் கொள்ளே. ~~167~~// 130.

கொள்ளீர் குமரி பற்பத்தை
இலாவு வெருகிடி யளவு
உள்ளே நின்ற வயறுவலி
உதிரத் தெரியும் எரிகுன்மம்
பிள்ளே பீலிகை பெருவயறு
போத்தி நோமை பாண்டுவுடனே
உறநீர் கிராணி விததெரிய
உடனே தழல்போன் றதுபோமே. 131.
~~168~~/

காந்த செந்தூரம் முத்தும்.

வாத கரப்பான் குணம்

132. படுக்கையிலிருந்து தூங்கி எழுந்திருக்கும் போது இடது பக்க காலின் பொருத்துகள் வலித்தல், திமிர்த்து வீங்குதல், தோலானது வறண்டிருக்குமானால் வெடிப்புகள் ஏற்பட்டு புண்ணாதல், உடலுறுப்புகள் அனைத்தும் கர்ப்பம் முதற் கொண்டு பொருமுதல் ஆகிய இக்குறிகுணங்கள் வாதகரப்பானுடையவை.

133. எருக்கம்பால், அரிதாரம், கொடிவேலி, வெள்ளுள்ளி, வசம்பு, சீனக்காரம் ஆகியவற்றை சம அளவு எடுக்க. பப்பரபுளியமரத்தின் வேரினை 15 கி எடுத்து, சோற்றுக் கற்றாழை, கிளைக்கள்ளி ஆகியவற்றின் இலையை வாட்டிப் பிழிந்த சாற்றில் மேற்சொன்ன அனைத்தையும் இடித்துச் சேர்த்து அரைத்துக் கொள்ளவும்.

134. மணமிகுந்த நெய், நல்லெண்ணெய், சிற்றாமணக்கெண்ணெய், வேப்பெண்ணெய் அனைத்தையும் சேர்த்து அதில் மஞ்சளினை இடித்துப் பொடித்தும் சேர்க்க. அடுப்பிலிட்டு எண்ணெயைக் காய்ச்சி பக்குவ பதத்தில் இறக்கி 325 மி.லி எடுத்துக் கொள்ளவும்.

வாத கரப்பான் தைலம்:- 410

321. அ. இருந்தெழுந் திருக்கும் போது
இடதுகால் சந்து நொந்து
வருந்திப்பத் திமிர்ந்து வீங்கி
வறண்டுடல் வெடித்துப் புண்ணாம்
இருந்திய அங்கந் தானும்
செய்கற்பம் பொருமை மாகில்
வருந்துமிக் குணங்கள் கண்டால்
வாதமாம் கரப்பான் தானே. ~~169~~ 132

எருக்கம் பாலோ டரிதாரம்
மெலியு மருந்து கொடிவேலி
திருத்த மான வெள்ளுள்ளி
தெளியும் வசம்பு சீனிக்காரம்
பெருக்க வோறொன்று ஜாங்கமுஞ்சு
பேணி யக்கி கைக்கள்ளி
பருக்க வட்டி கைசாத்தில்
பத்தி லரைத்துக் கொள்ளுவதே. ~~170~~ 133

கொள்ளே நறுநெய் நல்லெண்ணெய்
கூட்டுஞ் சித்தா மணக்கெண்ணெய்
நிள்ளே கிறக்கும் கிம்பெண்ணெய்
நலங்கா வேச சொட்டிட்டு மஞ்சள்
துள்ளாய் தொக்க பொடிசெய்து
துளாவிக் காச்சி யெண்ணெயுடன்
கொள்ளாகி திருமேலே உழுக்கி
வாத கரப்ப னுக்கே. ~~171~~ 134

135. அவ் வெண்ணெயை வாத கரப்பான் உள்ள இடத்தில் தடவி தேய்த்து பகல் முழுவதும் அப்படியே விடுக. இரவில் பன்னிரெண்டு இலையை எடுத்து வாட்டி பக்குவத்துடன் எடுத்துப் பதமாக எண்ணெய் தடவிய இடத்தில் வைத்துக் கட்ட வாத கரப்பானிடத்துள்ள வீக்கம் குறைந்து விடும்.

136. கடுகிய எண்ணெயானது உடலுக்கு வாதத்தையுண்டாக்கும், பெண்கள், இனிப்புப் பண்டங்கள் பித்தத்தைத் தோற்றுவிக்கும். கசப்பு, காரல் பொருட்கள் இனிப்புப் பொருட்களைக் குடிப்பதற்கு வழிகாட்டும். என்று உரியுள்ளோர் சித்தர்.

137. <u>வாத குன்மத்தின் குணம்</u>

மேல்வயிறு பெருத்தது குறைந்து மெலிந்து தோன்றுதல், கைகால் பெருத்து நிற்றல், அடிவயிற்றில் வாயுவானது தங்கி பெருத்து ஊளைகல், கண்ணில் மயக்கமுண்டாவது போல் தோன்றி வெறுத்துக்காணல், வருத்தத்தை வெளிப்படுத்தல் ஆகிய குறி குணங்கள் வாத குன்மத்தினுடையவை.

8 எண்ணெய் வைச்சதென்ப் பிழைத்தேன்
விக்கத்தி லிருக்க நாளும்
வண்ணமாம் ராத்தி ரிக்கு
வகையுடன் எருக்கி லையே
பன்னிரெண் டிலையே வாட்டி
பதத்துடன் கட்டு வீராய்
எண்ணில் வாத கரப்பா
னிறங்கிடும் விக்க மன்றே. ~~172~~ 135.

கருகியதோர் எண்ணெயேது
காயமும் வாதத் துக்காம்
வடிவுடை மாது பாணம்
வாசமும் பித்தத் துக்காம்
கொடியதோர் கைப்பு காரல்
கொள்வது சற்பத் துக்காம்
படியாதே வேறு மென்று
பகர்ந்தன னிருளசி தானே. ~~173~~ 136.

வாத குன்மத்தின் குணம்:-

மேல்வயிற் றனித்திரளைப் புண்டாய்
மிக்கதோர் கைய்யது காலுங்
சால்வது கீழ்வயிற்றி றடங்கி
யதிகமாய் வாய்வு தோன்றி
மால்விட மிகுந்தாப் போலக்
கண்வெளுப் பட்டு துயரங் கையதே
சீலமுடன் குணங்கள் தன்னைத்
தெளிந்த வாத குன்மமென்றுஞ் சொல்லலாமே. 137 ~~174~~

138 இதற்குக் குடிநீர்

இளநீர், உள்ளிச்சாறு தேவையான அளவெடுக்க.
சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, ஆகியவற்றை
வகைக்குச் சம அளவெடுத்து மேற்சொல்லப்
-பட்ட சாறாற்றி அரைத்து முறைப்படி
குடிநீராய்க் காய்ச்சிக் கொள்ளவும். பாதி
அளவாய் இருத்து ஏழு நாட்கள் குடிக்க
வாத குன்மம் குணமாகும். நோய் நீங்காவிடில்
குடிநீரில் குறிப்பிட்ட அளவு தேனைக்
கலந்து கொள்ளவும்.

139. இதற்கு எண்ணெய் :-

உள்ளி (பூண்டு) 210கி, கொடிவேலி, இரிசு
நிலவாகை சாரணை ஆகியவற்றை வகைக்கு
35கி, சுக்கு, மிளகு, திப்பிலி, சோமனுப்பு
ஆகியவற்றை வேண்டிய அளவெடுத்து
கொள்ளவும். அனைத்தையும் பொடித்து 325மி.லி
பாலுடன் சேர்த்தரைத்து காடியையும் சேர்த்து
எண்ணெயாய்க் காய்ச்சிக் கொள்ளவும்.

140. நெருப்பு பட்ட புண்ணிற்கு :-

செம்பரத்தம்பூவுடன் வேம்பாடம் பட்டை,
அதிமதுரம், செஞ்சந்தனம், புளியங்கொட்டைத்
தோல், வெண்கோட்டம், சாத்திரவேதி
ஆகியவற்றை வகைக்குச் சம அளவெடுத்து
அரைத்துக் கொள்ளவும். இவ்விழுதை
நெருப்பு பட்ட புண்ணின் மேல் போட
ஆறும்.

இத்துக்குக் குடிநீர்:-

[illegible]ளாநீ நுஞ்சா ஜள்ளி
[illegible]துவர் திரிகடுகு இர்துப்பு
அளவே கொண்டாப் கரைத்துவடித்
தழலில் காச்சி [illegible]றெண்டொன்றாய்
கொளவே வாத குன்மமும்
கொள்ளே ஏழு நாளாளவு
விளமே மீறி நிறைதேனி
விசைந்த வெண்ணெக் கட்டியிடே.
~~175~~ 138,

இத்க்கு எண்ணெய்:-

காடு முள்ளி அருபலமும்
கொடிவேல மிரிச நிலவாகை
ஓட்டும் விருவிச் சாறணையும்
ஒறைன் றொருபலமது பாரி
தேட்டம் பெரிய திரிகடுகு
தெளியுஞ் சோமஉறுப்பு[illegible]பாறியுட
காடி பாலு உழக்குடனே
கலந்தே வெந்தே எண்ணெய் கொள்ளே.
~~176~~ 139,

வாதகுன்மம் முற்றும்.

நெருப்பு பட்ட புண்ணுக்கு

அரத்தம் பூவில் வெம்பாலை
அதிக மதுரஞ் செஞ்சாந்து
உரைத்த புளியம் கொட்டைத்தோல்
உழுவைப்புடனே வெண்கோட்ட
மிரத்த சாத்திர வேதியுடன்
[illegible]வை யோர நிறையா துக்கினைக்காரி
ஒரேபடில்லை.
~~177~~ 140,

வலி குன்ம வாயுவின் குணம்

141. சோற்றின் மேல் விருப்பமின்மை, வயிற்றில் வலியுண்டாதல், குத்சி, தண்ணீர் ஆகிய அவற்றைக் குடிக்கலாம் என்று தோன்றும் ஆனால் குடிக்க முடியாமை, இறந்து விடலாம் என்று தோன்று மனவுக்குத் துன்பம் அதிகமாதல், உடல் தளர்தல், வறண்டு போதல் ஆகியவை வலி குன்ம வாயுவின் குறிகுணங்களாகும்.

142. இதற்கு எண்ணெய் :-

வெள்ளைப்பூண்டு, இஞ்சி, இந்துப்பு, சிவதை, கொடிவேலி, நிலவாகை வேர், மிளகு, திப்பிலி, முடக்கொத்தானிலை, கொன்றை, நற்சாரணை வேர், கழற்சிக்கொடி, ஆமணக்கு, வெண்ணெய், கொடிவேலி,

143.

காட்டுநொச்சி, நிலவாகை, கொன்றைச் சாறு, ஆதொண்டை, முருங்கை, சிவதை, செம்முள்ளி, ஆமணக்கெண்ணெய், வெங்காயம், இந்துப்பு, கள்ளிப்பால், ஆமைக்கெண்ணெய் ஆகிய அனைத்தையும் முறைப்படி எடுக்க. மருந்துப் பொருட்களைச் சுத்தி செய்து இடித்துச் சாற்றிலரைத்து எண்ணெயில் கலந்து காய்ச்சிக் கொள்ளவும். ஆறினவுடன் அளவறிந்து கொடுக்க வலி குன்மம் குணமாகும்.

வலிகுன்ம வாயுவின் குணம்:-

மறந்திடு மென்னர் தன்னை
    வயத்தினில் வலியும் தோன்றும்
சிறந்திடுங் கஞ்சி தண்ணீர்
    தேடிடுங் கொள்ளொட் டாது
இறந்திடத் துயரந் தோன்றும்
    மிகுதல தினமு மானால்
வறண்டுடல் மிகுந்து தோன்றும்
    வலிகுன்ம வாயு வாமே. 141. ~~178~~

இதற்கு எண்ணெய்:-

உள்ளி இஞ்சி இந்துப்பு
    உத்த சிவதை கொடிவேலி
கொள்ளும் நிலவா கையின் வேரும்
    இலவு மிளகு திப்பிலியு
முள்ளை ரண்டாம் வெண்ணெயுடன்
    முடக்கொத்தா னிலை கொன்னை
தன்னா தொக்கி களக்கொடி
    நீர்சாரணை வேருங் கொடிவேலி
142. ~~179~~

காட்டு நொச்சி நிலவாகை
    கடிய கொன்னை சாறுடனே
ஒட்டுந் தண்டையு வாய்முருங்கை
    உத்த சிவதை செம்முள்ளி
கோட்டா மணக்கெண் ணெயுடன்
    கொடிய உள்ளி இந்துப்பு.
வேட்டம் பெரிய கள்ளிப்பால்
    மிகவே கூட்ட குன்மம்விடும்
வலிகுன்மம் முத்தும். 143. ~~180~~

எரிகுன்மத்திண் குறிகுணம்

144. வயிறெரிதல், குடல் பிரட்டுதல், வாய்நீர் (உமிழ்நீர்) நெடுநெடுத்தல், தலை வலித்தல், கிறு கிறுத்துப் போதல், நெஞ்சு கரித்தல், ஏப்பமுண்டாதல், உடலிலுள்ள மயிர்க் கால்கள் வழி வியர்வை வெளிவருதல், வயிறு பொருமுதல் ஆகியவை எரி குன்மத்தின் குறிகுணங்கள்.

145. எரிகுன்மம், மாந்த பித்த குன்மம், சத்திகுன்மம், வாதம் இவற்றுக்கு நெய்

வெள்ளைப்பூண்டு, இஞ்சி, நெல்லி, சாத்திரவேதி இளநீர், பால் இவை அனைத்தும் வகைக்கு 1·3லி எடுக்க. மேற்சொன்ன மருந்துச் சரக்குகளை இடித்து கலவையில் போட்டு வேகவைத்து 2·6லி ஆகும் போது 1·3லி நெய்யைச் சேர்த்துக் கொள்ளவும்.

146. கோட்டம், வெண்காரம், இந்துப்பு திறு திப்பிலி, கொத்துமல்லிகை, இராம்பு, வசுவாசி, சேங்கொட்டை, ஆகிய மருந்துப் பொருட்களைப் பொடித்துக் கலந்து பக்குவத்தின் நெய்யை அளவறிந்து கொடுக்க எரிகுன்மம், மாந்த பித்த குன்மம், சத்திகுன்மம், வாதம் ஆகிய நோய்கள் தீரும்.

எரிகுன்மத்தின் குறிகுணம்

வயித்தை எரிக்கும் குடல்பிரட்டும்
வாணீர் சுழற்றி தலைவலித்து
உயிர்மை யழிய கிறுகிறுத்து
யோங்க ரித்தே யேப்பமுண்டாய்
மயிர்க்கால் வழியே வேர்வரும்பி
வயறு பொருமி யகன்றிடுகில்
இயற்றை எரிக்கும் குன்மமென்ன
யமைமையோர் சொன்ன குறியிதுவே. ~~181~~ 144.

~~இதுக்கு சகை~~:- எரிகுன்மம், மாந்த பித்த குன்மம்,
சத்திகுன்மம், வாதம் இவைக்கெல்லாம் நெய்:-

வெள்ளுள்ளி இஞ்சி நெல்லி
விரவிய சாலித்திர வேதி.
தெள்ளிய இளநீர் பால்கொள
சரியாவை நாழி நாழி
கொள்ளிவை இதமாய் வைத்திடு
கதித்திரு நாழி னால்
மெள்ளவே வைத்து நாழி
நெய்யதை விருத்தி நன்றே. ~~182~~ 145.

நன்றதே கோஷ்டம் மேல்
நல்கிளை வெண்காரமிந்து
சென்றா மத்தை தன்றில்
சிறுதிப்பிலி கொத்தமல்லிகை
மென்றி கிராம்பு வசுவாசி
மிக்க சேவகொட்டைக்கடுப்பு
வென்றவே வைத்து நெய்தான்
உன்றவே குன்மம் போமே. 146, ~~183~~

147. மெய்மாந்தம், பொருமுதலை உண்டாக்கும் பித்த குன்மம், எரிதலைச் செய்யும் குன்மம், சத்தி குன்மம், வாத குன்மம், வலி(க்குன்) குன்மம், ஆகிய மாந்த, குன்ம நோயின் வகைகள் மேற்குறிப்பிட்ட நெய்யால் தீரும்.

148. <u>வாதகுன்மகுணம்</u>

மூட்டுகளில் வலியுண்டாதல், வற்றிவிடுதல், வயிற்றில் நெருப்பு போல் அனலுண்டாதல், மந்தத்தன்மையினாலும் காரங்களினாலும் வயிற்றில் துன்பம் ஏற்படுதல் ஆகிய குறி குணங்கள் வாத குன்மத்திலுடையவை என்று முனிவர் கூறினர்.

149.

திரிபுரமெரித்தானின் சாறு, திருக்கள்ளி சீந்தில் கள்ளி, முருக்கு, ஆகியவற்றின் சாறுகளையும் அவற்றிற்குச் சமமாக சாத்திர வேதியையும் சேர்க்க. வேண்டிய அளவு தண்ணீரையும் சேர்த்து குழநீராய்க் காய்ச்சி 1.3லி அளவு ஆனவுடன் இறக்கிக் கொள்ளவும்.

போமதே வேய் மாந்தம்
சொருமிய பித்த குன்மம்
தாமதே எரிக்கும் குன்மம்
தடையாற சத்தி குன்மம்
வாமதா வான வாத
மருகிடா வலிக்கும் குன்மம்
தாமதப் படாமல் திரும்
தகுதியாம் நெய்ய தாமே. ~~184~~

147.

வாத குன்ம குணம்:-

சந்ததா அணைந்து வத்தி
தழலென தியத்தில் பதும்
மந்தகா ரங்கள் தன்னில்
லதிகமாகு சதிர வாதை
வந்துதான் தோன்றும் நாளில்
வகைபட வாத குன்மம்
மந்தமா முனிவர் சொன்னார்
மறுவத்து வாத மாமே. ~~185~~

148.

திரிபுர மெரித்தான் சாறும்
திருமியும் சிந்தி சாறும்
தெரிவரு கள்ளிச் சாறும்
தேமலர் முருக்கன் சாறும்
தரிசா சாத்திர வேதி
தண்ணீரும் கூட்டிக் காச்சி
உரியொரு நாழி யானால்
உறவிடா மணக்கி னெண்ணெய். ~~186~~

149.

150. ஆமணக்கெண்ணெய் நெய் இவற்றை வகைக்கு 1.3லி எடுத்து. இவற்றுடன். சேர்க்கவும். காய்ச்சவும்; கடுக்காய், வெங்காயம், சோமநாதப் பெருங்காயம் (சோமநாதபுரியிலிருந்து கொண்டு வரும்), நேர்வாளம், இஞ்சி, சிங்கி, அரிதாரம், கடுகுரோகிணி வசம்பு, பெருங்காயம் ஆகியவற்றையும்

151. திப்பிலி, காந்தம், கெந்தகம், உழியின் வேர் ஆகியவற்றையும் முறைப்படி சுத்தி செய்து சேர்த்துக் கொள்ளவும். அனைத்தையும் ஒன்று சேர காய்ச்சி வேக வைத்து தக்க பருவத்தில் வடித்திறக்கிக் கொள்ளவும். வாத குன்மமுள்ளவர்க்கு அளவறிந்து உள்ளங்கையில் ஊற்றி கொடுக்க வாதகுன்மம் தீரும்.

எண்ணெய்நெய் இரண்டு நாழி
பித்துடன் கடுக்கா புள்ளி
நின்றிய சோம னாதி
நல்லதோர் வாள மிஞ்சி
மன்றுற சிவகி அரிதாரம்
மதித்தை புளி கடுகு ரோகணி
தின்னியின் னிலவசம் ~~போக்க~~ போறபாக்கத்
தான்மெழுகு காயமு கூட்டே. 187
150.

கூட்டிய திப்பிலி —
குளவிய கார்த்த கெந்தக
மாட்டாய் வீழி வெரும்
வகையுடன் கூட்டிக் கொள்க
நாடமாய் வேக வைத்து
நலம்பெற வடித்து நக்கி
கோட்டிய வாத இன்மம்
குலைந்திடு முண்மை தானே. 188
151.

வாத இன்ம முற்றும்.

<u>கபால வலி குணம்</u>

316. அ.
உரைத்தே கபாலந் தலைவலியா
புச்சிக் குத்தும் நெருத்தலை நோய்
சிரத்தில் சேரு மென்னைவிதற்
செய்யு மருத்தி னைவை கேளாய்

கபால வலி குணம்

152. கழுத்தில் மேலுள்ள தசையானது இறுக்கமாதல், தலையில் வறட்சி ஏற்பட்டு புருவங்கள் இணைதல், உச்சிக்குழியில் குத்துதல் வலி ஏற்படுதல், வலியும் அதிகமாக ஏற்படுதல், கண்ணில் ஒளியானது சில்லடை போன்று தெரிவுற்றிருத்தல், தலை முண்டை முழுவதிலும் குத்துதல் வலி ஏற்படுதல் ஆகியவை கபால வலியின் குறிகுணங்கள்.

153. உச்சியில் வலி ஏற்பட்டு குத்துதலையும் உண்டாக்குதல், ஒரு பக்க தலைவலியுண்டாதல், தலையிலுண்டாகும் இவற்றைத் தீர்க்க மருந்தைக் கூறுகிறேன்! மருந்தினை நெய்யில் அரைத்து பருத்துள்ள தசையின் மீது போட கபால வலி குணமாகும்.

154. மிளகு, இந்துப்பு, சிவதை, இவற்றை வகைக்கு 35கி, வெங்காயம், கடுக்காய் இவற்றை வகைக்கு 7கி, இஞ்சி 17½ கி, எடுத்து அனைத்தையும் முறைப்படி சுத்தி செய்து சேர்த்துக் கொள்ளவும்.

155. சாரணை, கொடிவேலி, மிளகு, கொன்னை முருங்கை ஆகியவற்றைச் சமமாகச் சேர்த்து இடித்து 1.3லி தண்ணீரில் போட்டு முறைப்படி குடிநீராய்க் காய்ச்சிக் கொள்ளவும்.

கபால வலி குணம் :-

கண்டந் தனில்மேல் மிரண்டு
கதிக்க மண்டை வறட்சிதன்னால்
துண்டம் புருவஞ் சுடுதலும்
சுழியல் கன்றில் குத்துண்டாய்
மண்டுந் துயர்மிக உண்டாய்
வலைபோல் கண்ணுந் தெரிவரிதாய்
மண்டை முழுதும் பாந்துகுத்தி
வருத்துங் கபால வலிதானே. ~~189~~
152.

உரைத்தே கபால தலைவலியாய்
உச்சிக் குத்தும் ஒருதலைநோய்
சிரத்தில் சேரு மினைவதீர்
செய்ய மருந்தி னைகேளாய்
உரைத்த மருந்து நறுநெய்யால்
ஒன்று படவே அரைத்துரசம்
பருத்த துண்டம் தன்னில்விட
பத்திக் கபால வலிபோமே. ~~190~~
153.

317. அ. வீழி இந்துப்புச் சிவதை யொருபலம்
தெளிவு உள்ளி கடுக்காயுங் கால்பலம்
வாள முப்பது இஞ்சி ஒரு அரைப்பலம்
மேவள ~~க்கைய~~ கையு முற்பட கூட்டியே.
154, ~~191~~

சாரணை கொடிவேலி வீழி சப்பாமும் வாகை
வீழ்னை கொண்ணை உயாபல் வெள்ளாவிய முருங்கை
~~[illegible]~~ பாலடா தெர்க்கக் கட்டு பலப்புடன் ஒரெண்ணாக்கி
ஒரெண்ணாக்கி யாறுநாழிதண்ணீர் ரதுவிடா
தெரக்கக் காய்ச்சே 155. ~~192~~

156. காய்ச்சிய குடிநீருடன் 1.3லி நெய்யைச் சேர்க்க. உள்ளி, சுக்கு, திப்பிலி, வெண்காரம், மிளகு, இந்துப்பு, சிவதை, பெருங்காயம், ஆகியவற்றையும் சுத்தி செய்து சேர்க்க. 1.3லி கள்ளிப்பாலையும் கலவையுடன் கலந்து கொள்ளவும்.

157. 420கி வெங்காயம், 840கி இந்துப்பு, 35கி சிவதை, 35கி கள்ளிப்பால் ஆகியவற்றைச் சேர்த்து ஒன்றாக விழுதாக அரைத்து கழுத்தின் மீது பற்றாக இட கபால வலி தீர்ந்து போகும்.

158. சன்னியின் குணம் :-

சன்னியினால் பாதித்துள்ளாரோ என்று அறிய உருத்திராக்கத்தைத் தண்ணீரில் இழைத்து அவ்விழுதை நாக்கில் தடவவும். அவ்விழுதிற்கேற்ப நாக்கானது கருமை நிறத்தை அடைந்தால் சன்னி பற்றியுள்ளது என்றும் பெருத்துவிட்டால் வாதமென்றும் வெளுத்துப் போனால் துன்பத்துக்குரியது என்றும் கூறுவர்.

காச்சிய கோது தன்னில்
கலந்திடு நறுநெய் நாழி
பேச்சுள உன்னி சாக்கு
முதிர்ந்த திப்பிலி வெண்காரம்
மாச்சிடு மிளகின் தூபு
வாரிய சிவதை காயம்
காச்சினெய் தன்னி லொக்க
கன்னிப்பால் கலந்து கொள்ளே. ~~193~~ 156.

317. ஆ. ஆறிடு பலமே உன்னி
அதுக்கிடு பலமின் தூபு
ஊறருஞ் சிவதை தாளும்
ஒருபல மாக்க கொண்டு
ஊறருமி கன்னி யின்பால்
ஒன்றுமே உபலம் சார்த்தில்
ஏறருமி கபால மாண
வலியெலா மிறந்து போமே. ~~194~~ 157.

~~வேறு~~

சன்னியின் குணம்:-

கருத்துறு சன்னி தன்னை
கசக்குடா தறிய வேண்டி
உருத்திராக் குழைத்தை நோவ
உரைத்துநா வதனி சூட்டி
திருத்தமாய் குணமை கண்டால்
திகமுறு சன்னி வாதம்
பெருத்திடும் வெளுப்ப தாகில்
பின்னைய தல்ல வாமே. ~~195~~ 158.

வயித்துக் கடுப்புக்கு :-

இடுப்புக் கனைந்து வயறுளைந்து
மிளகுஞ் சீத மாகுமிது
முடுக்கும் துயர்மி குதியுமா
மு . . . .
. . . .
. . . .
. . . .
. . . .

தொடர் ஏடு இல்லை.

தேசாவரம், சுக்கு மேல்புரணி சீவி ஒன்றிரண்டாய்
உடைத்து தண்ணியில் கழுவி உலர்த்தி
சாட்டாரணை வேர் ரசத்தில் கழுவி உலர்த்தி
சட்டியில் போட்டு சாட்டாரணைச் சாற்றில் ஒரு
இராத்திரி ஒரு பகல் ஊறவச்சி வந்தமெறிக்கு
முருங்கை பட்டைரசம், நொச்சிரசம், ஆடாதொடை
ரசம், பாப்பாற புள்ளிரசம், நாயுருவிரசம், கண்டங்
கத்திரிரசம், கரிசலாங்கண்ணிரசம், துளசி
ரசம் இந்த பசு . . . வகையிலே ஒரு ராத்திரி
ஒரு பகல் ஊறவச்சு உலர்த்தி சூரணம் பண்ணி
இஞ்சி ரசம் விட்டு பெனி உலர்த்தி எழுமிச்சன்
ரசத்தில் ஊறவச்சி நன்னா உலர்த்தி

எண்ணெய்

159. திப்பிலி, சுக்கு, வால்மிளகு, சீனக்காரம்
சாதிக்காய், ஏலம், கொத்துமல்லி, இலவங்கம்,
அகிற்கட்டை, செவ்வியம், மரமஞ்சள்,
இலவங்கம், சாதிபத்திரி, இலவங்கப்பட்டை
துத்தம், துரிசு, ஆகியவற்றையும்

கற்கம்: மிளகு, திப்பிலி மூலம், சிறுகிலவங்கப்பட்டை
தும்பராடகம், ஏலம், தாளிசபத்திரி, நாகேசரம்,
செவ்வியம் கிலவங்கம் கிலவங்க பத்திரி, திரிபலை,
லோக சிந்தூரம், வாய்விளங்கம். இன் சொன்ன
சூரணத்துக்கு சரியாகமாய் நிறுத்தி அத்தோடே
கலந்து வெள்ளாட்டுப்பால் சட்டியில் வார்த்து
சட்டி வாய் கட்டி சூரணம் வைத்து மூடி அடுப்பில்
வைத்து சிறுதீயாய் எரியவிட்டு ஒருநாள் அனலிலே
இருந்த பிறகு இறக்கி நாளொன்றுக்கு நஉச
இனிக்கை பண்ணி உணரவச்சு பயத்திய சிராத்
துக்கு நெய்யில் கொள்ளவும். வாத சேத்துமம்
சிராத்துக்கு தேனில் கொள்ளவும். இதுக்குதீரும்
வியாதி ஆசிகாவாயுவு, உடம்பு ஊதல், பாண்டு
வம், மந்தாக்கினி, இருமல், உப்பிசம். செய
கிராணி, வயறு உப்பல், பழைய சுரம். அசிரோ
வாயுவு.

தொடர் ஏடு இல்லை. ?

354.அ.

திப்பிலி சுக்கு வால்மிளகு
சீனிக் காரம் சாதிக்காய்
அப்பிய ஏலம் கொத்தமல்லி
அமர்த கிலவங்கம் அகில்கட்டை
செப்பிய செவ்வியம் மரமஞ்சள்
சிந்த கிலவங்கமும் பத்திரியும்
தப்பிய கிலவங்கப் பட்டையுடன்
தக்கத் தரிசி கிடையும் ___ 159

திப்பிலிவேர், சீரகம், சாதிபத்திரி, வெட்டிவேர்
பறங்கிப் பட்டை, காட்டு வாழைக, ஆகிய
-வற்றையும்
எடுக்க

160. பற்பாடகம், நாயுருவி, நொச்சி, கொடி
வேலி, வெற்றிலை, முடக்கொத்தான், வேலிப்
பருத்தி, செருப்படை, கொட்டைக்
கரந்தை, ஆகியவற்றின் சாறுகளை வகைக்கு
1.3லி எடுக்க. கொடிகள்ளியை வதக்கி
சாறு பிழிந்து 1.3லி எடுக்க.. 35கி சித்திர
மூலம், சேராங்கொட்டை, அகத்தபாலை,
ஆடாதோடை ஆகியவற்றின் சாறுகளை
-யும் எடுத்துக் கொள்ளவும்.

161.
விளக்கெண்ணெய், பச்சிலைச்சாறு இவை
-யிரண்டையும் சேர்த்துக்கொள்ளவும். மேற்கூறப்
பட்ட மருந்துச் சரக்குகளைப் பொடித்து
சாறுகளில் கலந்து கொள்ளவும். எண்ணெ
-யையும் கலந்து காய்ச்சி பதத்தில் வடித்து
ஏழுநாட்களுக்கு ஒரு கரண்டி அளவு
கொடுக்க பறங்கிப்புண், கிரந்தி, புண்
வகைகள் மேகங்களின் வகைகள் ஆகியவை
இவ்வெண்ணெயால் தீரும்.

7/9/14

ஸ்ரீ

தப்பிய மோடி சிரகமும்
சாதிபத்திரி வெட்டிவேர்
கப்பிய பறங்கி பட்டையுடன்
காட்டு வெகையும் கொள்வதுகேள் // 159.

பற்ப டாகமும் நாயுருவி
படரும் நொச்சி கொடிவேலி
வெத்திலை மூக்கும் முடக்கொத்தான்
வெலிப பருத்தி செருப்படையும்
கொட்டைக் கிரந்தை படிசாறும்
கொடிகள்ளி வதக்கிப் பிடிச்சாறும்
சித்திர மூலம் ஒருபலமும்
சேராங் கொட்டை ஒருமாணம்
அத்திர சுகந்த பாலையுடன்
ஆடாதோடை கொடியும் படிசாறு 160

சிக்கன மான விளக்கெண்ணெய்
சிறுக்க பசுநெய் தான்கூட்டி
பக்குவ மாக தான்காய்ச்சி
பதத்தில் எடுத்துக் குப்பிராய்
நிறை ஏழு நாள்மொழுது
நெகந்த எண்ணெய் ஒருகரண்டி
பக்க கிறுக்கம் பறங்கிப்புண்
பார்வை கிரந்தி கெட்டியபுண்
எப்பேர் பட்ட மேகமெல்லாம்
இதுக்கேற்க் கான எண்ணெயதே 161.

353. அ. பிலபஞ்சமாவது	எலிபயறு முத்தெருக்கன்
செவியாவது	எலைக்கள்ளி
புலாங்கியாவது	சாரணை
புண்டநாசி ஆவது	கரிசலாங்கண்ணி
தலைச்சுருளி ஆவது	பெருமாங்கிழங்கு
பாங்கம் பாளை ஆவது	ஆடுதின்னாபாளை
விரும்பி வித்தானது	வெள்ளைப்பாஷாணம்
ஆனையடியாவது	செருப்படை
சீதாசெங்கழனி ஆவது	குருவி தெங்காய்
நூணாகமாவது	நாக்குப் பூச்சி
குருச்சுலி ஆவது	கற்றாழை
தக்ககோமாரி	கற்றாழை
நடந்தொட்டி ஆவது	குகைப்பூண்டு
பள்ளி குரும்பை ஆவது	நிலைப்பனை
குருசாகமாவது	ஏலம், கிலவங்கம், கிலவங்கப்பட்டை
காற்கோலமாவது	தேன் சீனை —
கான கொற்றியாவது	தேன்
அங்கோலமாவது	அழிஞ்சிற்பட்டை —

நிம்பமாவது	வேம்பு
புனாகமாவது	எண்ணெய்
மாஞ்சிலாவது	கஞ்சாங்கோரை
இந்திர வல்லி	முடக்கொத்தான்
சருணி ஆவது	செம்பருத்தி
. . . . . .	முருவலி
மாதசாரணையாவது	தண்ணீர்விட்டான்
விழலரிசியாவது	சோராமுட்டி
அசுவகெந்தி	அசுக்கரா
இலபமாவது	வில்வம்
மாரிசமாவது	மிளகு
விஷபாகமாவது	துளசி
களமலையாவது	தாமரை வளையம்
அமரியாவது	அரசு
அசித சன்னாவது	வெள்வேல்
வெள்வேல்	நாரசாவி என்பது
குருவிச்சியாவது	பேராமுட்டி
நாகவல்லியாவது	வெற்றிலை
வீர சாரணி ஆவது	அம்மான் பச்சரிசி
தக்கோலமாவது	நாகப்பூ

வெம்பகாயாவது	காட்டுவெகை
கா—க்கையாவது	கிருமைப்பூ
உச்சிரவல்லியாவது	பிண்ணை
ருதகன்னி ஆவது	கிரசம்
சாஸ்த்திர வேதியாவது	நெய்சட்டி
புசரு முட்டை ஆவது	எறும்பு முட்டை
கொறண்ட—மாவது	கிஞ்சி
தீர்ச்சாறாவது	~~ப~~ எறும்பாச்சன
தேசி ஆவது	எறும்பாச்சன்
சந்தனஇலை ஆவது	சாம்கிலை
திருணாயணாவது	விஷ்ட்டறை காந்தி
திரிபுரமெரித்தாணாவது	குப்பைமேனி
திரடி சாறாவது	கன்னிச்சாறு
உச்சிரவல்லி ஆவது	சித்திரமூலம்
சலகா—ாவது	தண்ணீர்விட்டான்
கோரக்கமூலியாவது	கஞ்சாவிதை
மாயோன்வித்தாவது	ஓமம்
அரவிணாங்க சாவது	வெள்ளாவிறை

சித்திமுறை 380—382.

[illegible]

[illegible]

[illegible] (printing)

அச்சுக்கு [illegible].

[illegible]
18/11/97.

[illegible]

[illegible]

[illegible]
25.9.20